ஐப்பசி -2014
பக்கங்கள் 24

ரூ.30.00

# இது நம்தேசம்

'Registered in the department of posts of Sri Lanka under No.QD/173/News/2014'

பார்வை 01 வியூகம் 21

ithunamthesam@gmail.com
www.ithunamthesam.com



## தமிழ்த் தேசிய அடையாளத்தினால் இலக்கு வைக்கப்படுகின்றோம்.

-ஐ.நாவில் கஜேந்திரகுமார்



## உள்ளே...

6 மாவை உண்மையான தலைவரா?

8 தமிழரசுக் கட்சியின் 15வது மாநாடு

12 ஆக்கபூர்வமான பேச்சுக்கு சர்வதேச அனுசரணை அவசியம் - கஜேந்திரகுமார்-

15 வடமாகாணசபையின் வருடம் ஒன்று

18 கனவு காணாத முதலமைச்சர்

## தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்கப்படவேண்டும்

-மன்னார் ஆயர்

# தமிழ்த் தேசியப் பேரவை ஒன்று உருவாக்கப்படவேண்டும்



மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்புயோசப்

இலங்கையில் தமிழர் பிரதேசங்கள் முழுவதையும் உள்ளடக்கிய வகையில் தமிழ்த் தேசியப் பேரவை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அப்பேரவையின் கிளைகள் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்கவேண்டும் என்று மன்னார் மாவட்ட ஆயர் இராயப்புயோசப் அவர்கள் தெரிவித்தார்.

அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ. யோதிலிங்கம் எழுதிய 13வது திருத்தமும் தமிழ் மக்களும், இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் யாப்புகளும் ஆகிய இரு நூல்களின் அறிமுக விழா மன்னார் தூய செபஸ்ரியார்பேராலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மன்னார் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, 13 வதுஅரசியல் திருத்தம் இந்தியாவின் ஒருபடைப்பு. அத்திருத்தம் தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தொடக்கப்புள்ளியாகக் கூட இருக்கும் என்று நான் கருதவில்லை. இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் இந்தியா ஒருபோதும் குரல் கொடுக்கப் போவதில்லை. ஏனெனில் எமது மண்ணிலே நடந்த இன அழிப்பில் இந்தியாவிற்கும் முக்கிய பங்கு இருக்கிறது.

இந்தியா இலங்கையில் தன்னுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக ஈழத்தமிழர்களுக்கு அநீதியைச் செய்துள்ளது. எனவே இந்தியா எமக்கு எதிரியான நாடு. ஆகவே இந்தியா ஈழத் தமிழர்களுக்கு நன்மைசெய்யும் என்று ஒருபோதும் எதிர்பார்க்கமுடியாது.

பிரபாகரனின் இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக 146,671 மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. ஆகவே இந்தியாவை நாம் நம்பிக்கொண்டிருப்பதால் எதுவுமே ஆகப்போவதில்லை.

வடமாகாண சபை முறை எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வாகாது. இன்று தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க அரசாங்கம் பல சதித்திட்டங்களை மேற்கொள்கிறது. உயிரைக்கொடுத்தேனும் நாம் எமது சுயமரியாதையைக் காக்கவேண்டும்.

தமிழர்கள் தேசிய அடையாளம் கொண்ட தனித்துவமான ஒரு இனம். அவர்களுக்கும் சுயநிர்ணய உரிமை இருக்கிறது, ஓர் தேசம் இருக்கிறது என்பதை அரசதரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைஅரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு எத்தனை சிபாரிசுகள் வழங்கப்பட்டன. ஆனால் அதில் ஒருசதவீதத்திற்கு கூட அரசால் இதுவரை தீர்வுபெற்றுத் தரப்படவில்லை. ஐ.நா.விசாரணைக்குழு மீதும் எனக்கு நம்பிக்கை இல்லை.

இந்த சூழ்நிலையில் எமக்குள் நாமே அடிபட்டுக் கொள்வதைத் தவிர்த்து தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் ஒரேஅணியில் திரண்டு எமது பிரச்சினைகள் தொடர்பில் ஒன்றுபட்டு குரல்கொடுக்க முன்வரவேண்டும் என்றார்.

## மூதூரில் தமிழ் விவசாயிகளின் குளங்கள் வயல்கள் ஆக்கிரமிப்பு

மூதூர் எல்லைக் கிராமங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வயல் மற்றும் குளங்களை ஆக்கிரமித்திருக்கும் சிங்களவர்கள் அவற்றை விட மறுத்து வருவதாக தமிழ் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த போர்க்காலங்களில் ஆயுதம் தரித்த சிங்கள மக்கள் தமிழர்களுடைய வயல், குளங்களை ஆக்கிரமித்திருந்தனர். சேரு நுவர பிரிவில் உள்ள தெகிவத்தைப் பகுதியில் வரும் மேன் கமம் கிராமத்தில் உள்ள சுமார் 30 விவசாயிகள் குளக் காணியை அடாத்தாகப் பிடித்து 100 ஏக்கர் வரை சிங்களவர்கள் விவசாயம் செய்து வருகின்றனர்.

இவ்வாறே இதே பிரிவில் உள்ள விவசாயிகள் இங்கு வேலிக்குளம் புனரமைக்கப்பட்ட போதும் அங்கும் அடாத்தாக விவசாயம் செய்வது மட்டுமன்றி தமது செய்கைக்கான குளத்து நீரை வடிய விடும் நடைமுறையும் உள்ளது.

மேற்படி சம்பவங்களில் விவசாயிகள் மத்தியில் சமாதனமற்ற நிலைமையும் அச்சமான சூழலும் நிலவுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து செயற்படுமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

## தனித் தரப்பு பிரச்சினைகளை முஸ்லிம் சமூகம் மறந்துள்ளது-



-ஹசன் அலி-

தனித்தரப்பு முஸ்லிம் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு தைரியம் இல்லாத சமுதாயமாக முஸ்லிம் சமூகம் மாறியுள்ளது. என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி எம்.பி தெரிவித்தார்.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கும் போதே ஹசன் அலி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பார்த்துக்கொள்வார் என்ற வீரியம் குறைந்த திராணியற்ற எதனையும் செய்து கொள்ள முடியாத நிலைக்கு முஸ்லிம் சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம் பிரச்சினைகள் அதற்கான தீர்வு குறித்து பேசினால் அதனை எதிர்த்துக் குரல் எழுப்புகின்றனர். கடந்த காலங்களில் இவ்வாறு கருத்துக்களை வெளியிட்டோர் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு தொந்தரவுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறான நிலை தொடருமானால் முஸ்லிம் சமூகத்தின் எதிர் காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும். அனைத்தும் இழந்த பின் கை சேதப்பட வேண்டிய நிலையே முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படக் கூடும். இனவாதிகளின் நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் இலக்காகியுள்ள நிலையில் முஸ்லிம் சமூகம் தமது எதிர்காலம் குறித்து பேசுவதற்கு முயற்சிக்காமை, தீர்வு குறித்து சிந்திக்காமை தொடர்பில் மனம் வருந்த வேண்டி ஏற்படும்.

தமிழ்க் கட்சிகள் தமது பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் குறித்து சர்வதேச மட்டத்தில் பாரிய முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். ஐ.நா சபை மனித உரிமைகள் அமைப்பு உட்பட ஐரோப்பிய நாடுகளில் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்படுகின்றன. தீர்வுக்கான வழிமுறைகள் குறித்தும் ஆராயப்படுகின்றன.

முஸ்லிம் சமூகத்தின் நிலையோ பரிதாபமானது முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஒரு கட்சி மட்டத்தில் கூட ஆராய அல்லது கருத்துக்களை முன்வைக்க முடியாத சூழ் நிலை தோன்றியுள்ளது. ஏனைய முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாடுவது எப்படிப் போனாலும் ஒரே கட்சிக்குள் இணக்கப்பாடான நிலையை தோற்றுவிப்பது கூட கஷ்டமானதாக உள்ளது.

முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி பார்த்துக்கொள்வார்,அவர் தீர்வு பெற்றுத்தருவார். சுயமாக எதையும் செய்யத் தேவையில்லை என்ற கருத்து மேலோங்கியிருக்கிறது. தனித்தரப்பு இச் சர்வதேச மட்டத்துக்கு எமது பிரச்சினைகளை கொண்டு செல்வது பற்றிப் பேசுவதை தவறாக நோக்குகின்றனர். இந்த நிலை தொடர்வது முஸ்லிம் சமூக இருப்புக்கே ஆபத்தானது என்றார்.

## பெருந்தோட்ட தொழிற்துறை அழிவடையும் அபாயம்

பெருந்தோட்ட தொழிற்துறை அழிவடையும் அபாயத்தை எட்டியுள்ளதால் பெருந்தோட்ட தொழிற்துறையைப் பாதுகாக்க சகலரும் ஒன்றுபடவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உதவிச்செயலாளரும் உடபளாத்த பிரதேச சபையின் உறுப்பினருமான எஸ்.செல்லமுத்து தெரிவித்தார்.

புசல்லாவை றொத்சைல்ட் தோட்டத்தில் நிர்மானிக்கப்படவுள்ள சன சமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே செல்லமுத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது அபிவிருத்தி என்பது வெறுமனே ஏற்பட்டு விடாது அதற்கான அழுத்தங்களும் செயற்பாடுகளும் அவசியமாகும். அரசியல் மற்றும் தொழிற்சங்க வாதிகள் அபிவிருத்தியினை ஏற்படுத்த உந்து சக்தியாகத் திகழவேண்டும்.

வெறுமனே நாற்காலிகளை சூடேற்றும் பிரதிநிதித்துவங்களால் எவ்விதமான பயனும் ஏற்படப்போவதில்லை .

பெருந்தோட்டங்களை எதிர்காலத்தில் இல்லாது செய்து அம் மக்களின் இருப்புக்களை கேள்விக்குறியாக்கும் முன்னெடுப்புக்களை இயலாத சக்திகள் மேற்கொண்டு வருகின்றன. பெருந்தோட்டங்களை அழிவடையச் செய்து சிறு தோட்டங்களை ஊக்குவிக்கும் முயற்சிகளும் தற்போது மறை முகமாக இடம் பெற்று வருகின்றன.

பெருந்தோட்டத் தொழிற்துறை அழிவடையும் நிலைமை ஏற்படுமானால் அதன் தாக்க விளைவுகள் எல்லா மட்டங்களிலும் எல்லாத் துறைகளிலும் எதிரொலிக்கும் என்றார்.

## சுயதொழிலுக்கான நிதியுதவி வழங்கல்



கனடாவில் வசிக்கும் குமாரச்சந்திரன் சுதாகரன் அவர்களது அன்புத் தாயார் அமரர் நாகேஸ்வரி குமாரச்சந்திரன் அவர்களின் நினைவாக தாயகத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் இரண்டு குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு ஒருலட்சத்து இருபதினாயிரம் ரூபா சுயதொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டது.

கனடாவில் உள்ள உறங்கா விழிகள் அமைப்பின் தலைவர் சோமசுந்தரம் அவர்களூடாக மேற்படி குடும்பத்தினரால் அனுப்பி வைக்கப்பட்ட உதவி தாயகத்தில் இருந்து இயங்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களால் மேற்படி உதவி கடந்த 13-09-2014 அன்று உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

பயனாளிகளில் ஒருவர் கடந்த கால யுத்தம் காரணமாக கணவனை இழந்து ஒரு குழந்தையுடன் வாழ்ந்து வருகின்றார். மற்றயவர் கடந்த கால யுத்தத்தில் காயமடைந்து இடுப்புக்கு கீழ் உணர்வு இழந்துள்ளார். மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து தலா ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

# கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களும் சாட்சியமளிக்க ஐ.நா ஆவணசெய்யவேண்டும்

–ஐ.நாவில் கஜேந்திரகுமார்



கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களும் சாட்சியமளிக்க ஐ.நா ஆவண செய்யவேண்டும்–ஐ.நாவில்

போரின்போதும் அதன் பின்னரும் வடக்கைப்போலவே கிழக்கும் பாதிக்கப் பட்டபோதிலும் இங்கு, இலங்கையின் வட பகுதிபற்றியே முக்கியத்துவம்கொடுத்து பேசப்படுகிறது. முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட கொடூரகுற்றங்களுக்கு சம னான குற்றங்கள் 2007 இல் கிழக் கின் வாகரையிலும் நிகழ்த்தப்பட்டது.

அத்தோடுவடக்கின்வலிகாமத்தில் நடைபெறும் நில அபகரிப்புபோலவே கிழக்கின் சம்பூரில் நிகழும் நிலஅபகரிப்பும் மிகவும் அபாயகரமானதாகும்.

எனவே, கிழக்கு மாகாணம் பற்றியும் மனிதஉரிமைகள் ஆணையாளர் அலு வலக விசாரணைக்குழு போதிய முக்கியத் துவம் வழங்கவேண்டும். என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரி வித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொட ரின் 27 வது அமர்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பாக கட்சியின்

(17 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயலலிதா கைதைத் தொடர்ந்து வன்முறைகளும் தற்கொலைகளும்



தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா தனது வருமானத்தை மீறி சொத்து சேர்த்திருக்கிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 18 வருடங்களாக இந்த வழக்கு நடந்து வந்த நிலையில் வழக்கின் தீர்ப்பு 27.09.2014 அன்று அறிவிக் கப்பட்டது.

ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சாதா ரண சிறைத்தண்டனையும் 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. 100 கோடியை செலுத்தத் தவறினால் மேலும் ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப் படும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயலலிதாவுடன் கூட இருந்த சசிகலா, இளவரசி,ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் என்று பெயர் எடுத்த சுதாகர் ஆகியோருக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் தலா 10 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. செலுத்தத் தவறினால் மேலும் 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் ஜெயலலிதாவுக்கு வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட 64 கோடியே 44 லட்சம் போக மீதித் தொகையை செலுத்தி னால் போதும் என்று நீதிபதி உத்தர விட்டார்.

ஜெயலிதா உள்ளிட்ட 4 பேரிடமும் 1240 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பின் நகலை நீதிமன்ற ஊழியர்கள் அளித்தனர். அதில் 4பேரும் கையெழுத்திட்ட பின்னர் ஜெயலலிதாவை பரப்பன அக்ராஹா சிறைச்சாலையில் உள்ள மருத்துவ மனைக்குப் பரிசோதனைக்காக அழைத் துச்சென்றனர். பரிசோதனைக்குப்பிறகு 4 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா சபையின் 69வது அமர்வும் மகிந்த உரையாற்றுவதற்கு எதிரான போராட்டங்களும்




ஐக்கியநாடுகள் சபையின் 69 ஆவது பொதுச்சபை அமர்வு 25-09-2014 ஜெனிவாவில் நடை பெற்றது. இந்த அமர்வில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்று உரையாற்றவுள்ளார். என்ற செய்தி வெளிவந்ததும் உல கில் உள்ள தமிழ்த் தரப்புக்கள் மகிந்த பொதுச்சபையில் உரையாற்ற அனுமதி வழங்கக்கூடாது என்று கருத்துக்களைக் குவித்த வண்ணம் இருந்தனர்.

தமிழ் நாட்டில் ஈழ மக்கள் ஆதரவுக் கட்சிகள், மக்கள், மாணவர்கள் என்று பலரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனார். பாரியளவில் போராட்டத்தை நிகழ்த்த உள்ளதாகவும் தெரிவித்தனர். மகிந்த ராஜபக்ஷ பொதுச்சபை அமர்வில் பங்கேற்பதற்கு இலங்கையில் இருந்து புறப்பட்ட வேளையில் இருந்தே உணர்வாளர்களின் போரட்டங்கள் உக்கிரம் பெற்றது.

ஈழத் தமிழர் விடிவுக்காக இந்திய மத்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழகத்தின் எழும்பூரில் மாபெரும் தமிழர் நீதிப் பேரணி 24-09-2014 அன்று நடைபெற்றது. இந்தப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்த் தேசியத்தை மனதார நேசித்தவர் மாணிக்கசோதி


யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர்ந்த அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி (வயது74)வாகன விபத்தில் இந்த மண்ணை விட்டு 15.09.2014 ம் திகதி பிரிந்து சென்று விட்டார்.

இவர் 1990ம் ஆண்டில் இந்திய அமைதிப்படை பிரசன்னமாகியிருந்த காலப்பகுதியில் வன்னிக் காட்டில் இருந்த விடுதலைப்புலிகளுக்கும் பிரேமதாசா அரசிற்கும் இடையே சமரசப் பேச்சுக்கள் இடம் பெறுவதற்கு முன்னேற்பாடு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

விடுதலைப்போராட்ட தலைமை மீது கடைசிவரை பற்றுறுதி கொண்டிருந்த துடன் பகிரங்கமாக அதனை வெளிப்படுத் தியும் வந்திருந்தார். கடைசியாக இடம் பெற்ற வட மாகாண சபைத்தேர்தலில் சில தரப்புக்கள் மாகாண சபையை ஏற்றுக் கொண்டு போட்டியிட்டபோது மாகாண சபையை நிரகாரித்து அதனால் எந்தப் பயனும் இல்லை என்பதனை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் நோக்கில் சுயேட்சையாக போட்டியிட்டிருந்தார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டனில் இருந்து பிரியாத ஸ்கொட்லாந்து




பிரிட்டன் ஸ்கொட்லாந் பிரிவதா? சேர்ந்திருப்பதா? என்ற பொது வாக்கெடுப் பில் பிரிட்டனிலிருந்து பிரிய ஸ்கொட் லாந்து மக்கள் பரவலாக எதிர்ப்புத் தெரி வித்துள்ளனர். சேர்ந்து வாழவே விரும் புகின்றனர் என்பதை பிரிட்டனிலிருந்து பிரிந்து தனி நாடாவது குறித்த பொது வாக்கெடுப்பு மூலம் தெரிய வந்துள்ள னர்.

பிரிவினைக்கு எதிராக 55.42 வீத வாக்குகளும் பிரிவினைக்கு ஆதரவாக 44.58 வீத வாக்குகளும் பதிவாகியிருக் கின்றன.இறுதி முடிவுகளின் படி ஸ்கொட் லாந்து பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்லக் கூடாது என்று 1,914,187 பேரும் பிரிட்ட னிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்று 1,617,978 பேரும் வாக்களித் திருந்தனர்.

இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து முன்பு எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புக் கள் தெரிவித்திருந்ததைவிட பிரிவி னையை எதிர்ப்பவர்களின் வாக்கு வீதம் சுமார்3 வீதம் அதிகரித்திருப்பதை இறுதி முடிவுகள் காட்டுகின்றன.

ஸ்கொட்லாந் முழுவதும் நடை பெற்ற இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்குப் பதிவில் சுமார் 80 சத வீதத்திற்கு மேலானோர் வாக்களித் துள்ளனர் என்று முன்னதாக வந்த வாக்குப் பதிவு விபரங்கள் தெரிவித்தன. கருத்தறியும் வாக்கெடுப்பு நடந்து முடிந்த பின்னர் வெளியான யுகவ் நிறுவன எக்ஸிட் வாக்கெடுப்பு ஒன்று பிரிந்து போக வேண்டாம் என்ற தரப்புக்கு 54 சதவீத ஆதரவும் இருப்பதாக கூறியது.

இதே வேளை பிரிட்டனிட மிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்பதற்கான தனது முயற்சிக்கு நடை பெற்று முடிந்த பொது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் தோல்வி கிடைத்திருப்பதை தாமாக ஏற்றுக்கொள்வதாக ஸ்கொட்லாந் தின் முதலமைச்சர் அலெக்ஸ் சால் மண்ட் தெரிவித்திருக்கின்றார்.

அதே சமயம் ஸ்கொட் லாந்தின் பிரிவினருக்கு ஆதர வாக வாக்களித்த சுமார் 16 இலட் சம் வாக்காளர்கள் எதிர்காலத்தில் ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்துக் கான வலுவான அடித்தளமாக அமை வார்கள் என்றும் தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்து வாக்காளர்கள் பிரி வினருக்கு எதிராக வாக்களித்தால் ஸ்கொட் லாந்துக்கு மேலதிகமாக கூடுதல் அதி காரங்களை அளிப்போம் என்று தேர்தல் நேரத்தில் வாக்குறுதியளித்திருக்கும் பிரிட்டனின் மூன்று முக்கிய அரசியல்கட்சி களும் தங்களின் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

பிரிட்டனுடன் ஸ்கொட்லாந்து பிரிந்து வாழாது என்பதை வாக்கெடுப்பின் மூலம் நிரூபித்திருக்கின்றது. இந்த நிரூபணம் மூலம் உலக நாடுகளுக்கு ஒரு செய்தியை சொல்லி வைத்திருக்கிறது.

பிரிவு என்பது சோகம், ஆனால் சந் தோசமாக வாழ்வதற்கு பிரிவும் சில இடங் களில் தேவைப்படுகின்றது. இதனால் சிலர் பிரிந்து வாழ்கிறார்கள். சிலர் சேர்ந்து வாழ் கிறார்கள். சேர்ந்து வாழ்வதில் ஏற்பட்ட பாதிப்புக்களே பிரிவுக்கு அடித்தளமிடு கிறது. அந்த வகையில் சேர்ந்து இருந்த பல நாடுகள் பிரிந்துள்ளன. பாகிஸ்தான், பங்களாதேஷ், தென்சூடான், கிழக்குத் தீமோர், கொசோவா, மற்றும் சோவியத் யூனியனில் இருந்த நாடுகள் பல பிரிந்த வரலாறு பதிவாக இருக்கின்றன.

இலங்கையில் தமிழர்கள் சிங்கள வர்களுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் களோ என்று கருத்துக்கணிப்பு ஒன்றினை மேற்கொண்டால் தமிழ் மக்களது தீர்ப்பு ஸ்கொட்லாந் மக்களின் தீர்ப்புக்கு மாறான தாக இருந்திருக்கும்.

# ஜெயலலிதாவுக்கான தண்டனை தமிழ்த்தேசியத்தைப் பாதிக்குமா?



தமிழக முதலமைச்சர் ஜெய லலிதாவிற்கு சொத்துக் குவிப்பு வழக்கில் நான்கு வருடச் சிறையும், 100 கோடி ரூபா அபராத மும் விதிக்கப்பட்டுள்ளது. உடனடி யாகவே அவர் கர்நாடக சிறையில் அடைக்கப்பட்டார். அண்ணாதி ராவிட முன்னேற்றக் கழகத்தில் வாரிசு அரசியல் இல்லாத நிலை யிலும், தனியொரு நபரின் நிர்வாகம் இருந்த நிலையிலும், அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் கட்சி திணறிக் கொண் டிருக்கின்றது. புதிய முதலமைச் சராக ஜெயலலிதாவின் முக்கிய விசுவாசி பன்னீர்ச்செல்வம் ஜெயலலி தாவின் புகைப்படத்தினை கையிலேந்திய படி கண்ணீர் விட்டவாறு பதவியேற்றார். ஏனைய பதவியேற்ற அமைச்சர்கள் அனைவரும் கண்ணீருடனேயே பதவ யேற்றனர். சிலர் கதறியழுதனர். நிறு வனப்பலம் இல்லாத அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் எதிர்காலத்தில் எப்படி தன்னைத் தற்காத்துக்கொள்ளும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஜெயலலிதாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப் பும் அதனால் ஏற்படப் போகின்ற விளை வுகளும் அதிகமாக இருக்கும் போலவே

(15 ஆம் பக்கம் பார்க்க)



## ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

வடமாகாணசபையில இந்தமுறையும் சிவாஜிலிங்கத் தாற்ற பிரேரணை எடுத்துக் கொள்ளப்படவில்லையாம். இன அழிப்பு என்டசொல் இருக்கிறபடியால் மாகாணசபைக்கு ஆபத்து என்டு சீ.வி.கேயரும், விக்கியரும் சொல்லிக்கொண்டு திரியினமாம். ஒரு மாதிரி ஒருவருசம் மூச்சைப்பிடித்து இழுத்துக் கொண்டு போயாச்சு. மிச்சக் காலத்தையும் ஒருமாதிரி தள்ளி ஒப்பேத்திப் போடுவமெண்டு பென்சனியர்மார் பிளான் போட்டி ருக்கிறதா கேள்வி. தேர்தல் காலத்தில உவங்கட வீரக்கதை களைக் கேட்டு புள்ளடி போட்ட சனத்துக்கு மிச்சம் பட்டை நாமம் தான் பாருங்கோ.

தமிழரசுக் கட்சியின்ர தலைவராகின மாவையர் செய்திருக்கிற முதலாவது வேலை தமிழீழம் கேக்கமாட்டம் எண்டு சத்தியம் செய்ததுதான். உவை என்னத்த சொன்னால் என்ன? ஐயா ஷாமின்ட அரசியல் நரித்தனத்துக்கு செத்துப் போன ஜே.ஆர் கூட பிச்சைவாங்கவேணும் பாருங்கோ. வடி வாத் திட்டம் போட்டு மாவையை தலைவராக்கி யாழ்ப்பாணத் தில இருத்திப் போட்டு தன்ர எடுபிடியோட திருமலையிலேயே எல்லாத்தையும் முடித்துக்கொள்ளுற சாணக்கியம் வேறயாருக்கு இருக்குது பாருங்கோ. முப்பதுவருச அகிம்சைப் போராட்டம் அதைத் தொடர்ந்து 30 வருச ஆயுதப்போராட்டம் எல்லாம் யாழ்தேவி யாழ்ப்பாணம் வாறதுதான் என்ற கணக்கில சில சில்லறையல் பிதற்றிக் கொண்டு திரியுதுகள். கந்தறுந்த சிலது கள் பளையில ஏறி யாழ்ப்பாணத்தில இறங்கி படம் எடுத்துக் காட்டுவதும் போதாக்குறைக்கு மகிந்தராசாவும் வாறதாக் கேள்வி எனக்கொரு சந்தேகம் யாழ்ப்பாணத்து முகாம்களில் இருக்கிற எங்கட வலிவடக்கு சனம் உந்த ரெயிலில ஏறி தங்கட சொந்த இடத்துக்கு போகவருவாங்களோ.?

யாழ்ப்பாணத்தில இப்ப கொஞ்சநாளா நடக்கிறத பாத்தா எனக்கு இது கனவோ? அல்லது நனவோ? என்று கேள்வியாக் கிடக்குது. நல்லூருக்கு வெள்ளைவேட்டி கட்டி சீருடைக்காரர் காவடி எடுக்கினம். யாழ்ப்பாண நகரில் சர்வதேச சமாதான தினத்துக்கு வெள்ளைசட்டையோட ஊர்வலம் போகினம். போறபோக்கப் பாத்தால் முள்ளிவாய்க்காலில எங்கட சனம் தங் களைத் தாங்களே மாய்த்துக் கொண்டாங்கள் என்டு கதை விட்டாலும் அதிசயமில்லை பாருங்கோ அதிலயும் உள்ளூர் தமிழ்த்தேசியம் பேசுறபேப்பர்களும் கனக்க இப்ப அடக்கி வாசிக்கினம். அதுதான் முக்கியம் பாருங்கோ.

சொல்லாமல் கொள்ளாமல் புதுக்குடியிருப்பில நிலசுவீகரிப்புக்கு எதிராக சனம் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத் தியிருக்குது. அடுத்தநாள் போட்டிக்கு முள்ளிவாய்க்காலில் வடமாகாண சபை பேரவைத்தலைவர் தலைமையில நிலசுவீ கரிப்புக்கு எதிராஆர்ப்பாட்டம் நடத்தியிருக்குது. ஆனைமிறவில யும் அதே மாதிரி ஆர்ப்பாட்டம் நடந்திருக்குது சனம் புள்ளடி போட்ட மாகாணசபை ஒன்றுமே செய்து கிழிக்கேல எண்டாலும் பறவாயில்ல ஒருசில மாகாணசபை உறுப்பினர்களாவது மக்கள் போராட்டத்திற்கு ஆதரவாக இருப்பது நம்பிக்கையை தருது. ஏனையவையும் உதைப்பாத்தாவது வீட்டுக்கு வெளியில வந்து சனத்தோட நிக்கோணும் எண்டதுதான் எல்லாற்ற எதிர்பார்ப்பும்.

கூட்டமைப்புக்காரற்றை அடுத்த பாராளுமன்றத் தேர்தல் குடுமிப் பிடி உச்சத்துக்கு வந்திட்டுது தேசியபட்டியலில போறது எண்டு சிங்கக் கொடிகாத்த வீரன் தெளிவா நிக்கிறான். தேசிய பட்டியல் காரரோ வடமராட்சியில எப்படியேனும் வென்டுடனும் எண்டு நிக்கிறார். அனந்திக்கு சீற்று குடுக்கக் கூடாது எண்டு ஒரு பகுதிக்காரர் இப்பவே குத்தி முறியினமாம். கனக்க நாடகங்கள் விரைவிலே அரங்கேறும் எண்டு பாத்திருக்கலாம்.

# அழுத வாக்கு




இன்னும் ஆறு மாதகாலத்தில் நாட்டு அரசிய லில் ஏராளமான மாற்றங்கள் நடைபெற வுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் புதிய பாதையில் பயணிக்க எத்தனித்துள்ளது. தேவையேற்பட்டால் தமிழர்களின் சாத்வீகப் போராட்டத்தில் இணைந்து கொள்ளவும் நாம் தயாராக உள்ளோம்.

-ஹசன்அலி- -செயலாளர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்-



பிரபாகரனை தமிழ்ச்சமூகம் ஒரு போதும் மறக்கப் போவதில்லை. இறந்தவர்களிலோ, உயிரு டனுள்ள தமிழ்த் தலைவர்களிலோ தமிழ் மக்கள் மனங்களில் ஆகக்கூடிய செல்வாக்குடன் இறுதிவரை மதிக்கப்படக் கூடியவர் பிரபாகரனே!

-பீர் சேகுதாவூத்-



மோடி ஆட்சிக்கு வந்த முதல் நாளிலிருந்து அவர் ஒரு ஒற்றைத்தனிநபர் அதிகார மையத்தை உருவாக்கு வதற்கு தொடர்ந்து முயற்சி செய்கிறார். குஜராத் போன்ற மாநிலத்தைத் தன்னுடைய நேரடிக் கட்டுப் பாட்டில் வைத்துக் கொண்டு ஆட்சி செய்தது போல இந்தியா முழுவதையும் கட்டுப்பாட்டில் வைத்து ஆட்சி செய்ய முடியும் என அவர் கனவு காண்கின்றார்.

மனுஷ்யபுத்திரன்
எழுத்தாளர்



ஈராக், ஈரான், சிரியா, துருக்கி என பல பேரினவாத அரசு களால் துண்டாடப்பட்டு நீண்டகாலமாக சுதந்திரத்திற்காக போராடிவரும் குர்திஸ்தான் மக்கள் தங்களுடையவீரம் செறிந்த விடுதலைப்போராட்டத்தை ஒவ்வொருநாட்டிலும் தனித்தனியாகவும், கூட்டுச்சேர்ந்தும் நடாத்திவருகின்றார் கள். சதாம் ஹுசைன் காலத்தில் சுமார் ஒன்றரைலட்சம் குர்திஸ் மக்கள் படுகொலைசெய்யப்பட்டிருக்கின்றார்கள். இத்தனையும் கடந்து அந்தப் போராட்டம் அப்பிரதேசத்தின் அதிகார சமன்பாடுகளினூடாக தன்னைத் தக்க வைத்துக்கொண்டிருக் கின்றது.

செ.செ.செந்தில்நாதன்
ஆய்வாளர்



பிரச்சினை பேச்சுவார்த்தைகளினூடகவும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஒத்துழைப்புடனும் மாத்திரமே தீர்த்துக் கொள்ளமுடியும் கூட்டமைப்பின் தலைவர்கள் அரசாங் கத்துடன் நெருக்கமாக ஒத்துழைத்து செயற்பட வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களினுடனான
சந்திப்பின் போது மோடி



தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை மார்க்சீசம் மூன்றாம் உலக நாடு களுக்கு வழங்கியது என்பது அதன் சாதனையாகும். இருந்த போதிலும் இந்த நாடுகள் விடுதலை பெற்ற போதிலும் இந்த நாடு விடுதலை பெற்ற பிறகு தேசிய இனப்பிரச்சினைகளைக் கையாள்வதில் அந்தந்த நாடுகளின் இடது சாரிகள் தேங்கிப்போய் விட்டார்கள் என்பதும் உண்மை.

பேராசிரியர். ந.முத்துமோகன்

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தமிழ் அரசியலுக்கு பயன் தரக்கூடியதா?

-சூரியவேந்தன்-

அண்மைக் காலமாக இந்தியா இலங்கை அரசினை, தனக்கு சார்பாக திருப்பும் முயற்சியிலேயே இறங்கியிருந்தது. அதற்காகத் தமிழ்த் தேசியவாதக் கோரிக்கைகளை கைவிடவும் தயாராக இருந்தது. எனினும் பின்னர் திடீரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அழைத்து பேசியிருக்கின்றது. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

அதில் முதலாவதும் பிரதானதுமான காரணம் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் விசாரணையை பலவீனப்படுத்துவதே. ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை விசாரணைச் செயற்பாடுகள் தொடர்பாக பல புதிய விதிகளையும் சேர்த்துள்ளது. விசாரணைக்காலப் பரப்பினை அதிகரித்துள்ளது. இந்தக் காலத்திற்கு முன்னர், பின்னரான விடயங்களும் பதிவு செய்யப்படும் எனக் கூறியுள்ளது. விசாரணைச் செயற்பாட்டிற்கு வெளிநாட்டு அரசாங்கங்களின் ஒத்துழைப்பையும் பெற இருக்கின்றது. ஆதாரங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை முயற்சிகளுக்கும் ஐ.நா செயலாளர் நாயகத்தின் வேண்டுகோள்களுக்கும் இலங்கை செவிசாய்க்காததினால் அது தனது செயற்பாடுகளை கடுமையாக்கியுள்ளது. தனது வளைப்பு முயற்சிகளுக்கு இலங்கை இணங்காததினால் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் இதற்கு ஆதரவளிக்கின்றது. நரேந்திரமோடி அரசாங்கம் மேற்குலகிலிருந்து சற்றுவிலகிச் செல்வதும் இதற்குகாரணமாக இருக்கலாம்.

இந்தியா இரண்டு காரணங்களுக்காக ஐ.நா வின் கடுமையான விசாரணைகளை விரும்பவில்லை. ஒன்று சர்வதேச விசாரணையை துரும்பாகப் பயன்படுத்தித்தான் இலங்கையை தனக்கு சார்பாக வளைக்க முயற்சிக்கின்றது. விசாரணை கடுமையாகிச் செல்லுமானால் துரும்பைப் பயன்படுத்துவதும் கடினமாகிவிடும். இரண்டாவது சர்வதேச விசாரணை மேற்குலகின் குறிப்பாக அமெரிக்காவின் தலையீட்டை இலங்கையில் அதிகரிக்க செய்யும் இதனை இந்தியா விரும்பவில்லை. அதுவும் மோடி அரசாங்கம் பிரிக்ஸ் அமைப்பினை முன்னிலைப்படுத்த முற்படுவதால் இதனை அறவே விரும்பவில்லை.

இந்தியா இரண்டு காரணங்களுக்காக ஐ.நாவின் கடுமையான விசாரணைகளை விரும்பவில்லை. ஒன்று சர்வதேச விசாரணையை துரும்பாகப் பயன்படுத்தித்தான் இலங்கையை தனக்கு சார்பாக வளைக்க முயற்சிக்கின்றது. விசாரணை கடுமையாகிச் செல்லுமானால் துரும்பைப் பயன்படுத்துவதும் கடினமாகிவிடும். இரண்டாவது சர்வதேச விசாரணை மேற்குலகின். குறிப்பாக அமெரிக்காவின் தலையீட்டை இலங்கையில் அதிகரிக்க செய்யும் இதனை இந்தியா விரும்பவில்லை. அதுவும் மோடி அரசாங்கம் பிரிக்ஸ் அமைப்பினை முன்னிலைப் படுத்த முற்படுவதால் இதனை அறவே விரும்பவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களிடமிருந்து எழுந்த நிர்ப்பந்தங்கள் காரணமாக சாட்சியங்களை வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்ய முயல்கின்றது. சுமந்திரன் இது விடயத்தில் பல்டி அடித்தாலும் கூட்டமைப்பிற்கு ஒரு கட்டாயம் தோன்றியுள்ளது. அதுவும் தமிழ்த் தேசியமக்கள் முன்னணி பகிரங்கமாக சாட்சியங்களை திரட்டும் முயற்சியில் இறங்கிய நிலையில் கூட்டமைப்புக்கு இது தவிர்க்கமுடியாதது. ஆனால் நடைமுறையில் எதுவும் நடப்பதாக தெரியவில்லை. உள்நாட்டிலிருந்து வரும் சாட்சியங்கள் விசாரணையின் நம்பகத்தன்மையை பலப்படுத்தும் என்பதால் இந்தியா அதனைத் தவிர்க்க முயற்சிக்கலாம். கூட்டமைப்பிடம் இது பற்றி அடக்கி வாசிக்கும்படி கூறியிருக்கலாம்.

கூட்டமைப்பினை இந்தியா அழைத்ததற்கு இரண்டாவது காரணம் இலங்கை அரசினை சற்று அச்சுறுத்துவதாகும். இலங்கைக்கு பிடித்த சுப்பிரமணிய சுவாமியை தூது அனுப்பியே மகிந்தர் மசியவில்லை. இலங்கை மசியாவிட்டால் கூட்டமைப்பினை நாம் பலப்படுத்துவோம் என்ற செய்தியை வழங்க இந்தியா



முயற்சித்திருக்கலாம். முகத்திற்கு நேரடியாகவே தனது சிபார்சில் உருவாக்கப்பட்ட 13வது திருத்தத்தின்படி பொலிஸ் அதிகாரத்தை வழங்கமாட்டேன் என மகிந்தர் கூறியிருப்பது இந்தியாவிற்கு கடும் சினத்தினை உருவாக்கியிருக்கலாம்.

மூன்றாவது தமிழ் நாட்டை சிறிதளவாவது திருப்திப்படுத்துவதாகும். இலங்கை அரசாங்கத்தின் பச்சை ஆக்கிரமிப்புக்கள், வடமாகாணசபையை செயற்படவிடாமை என்பன தமிழக மக்கள் மத்தியில் பாரிய அதிர்ப்தியை ஏற்படுத்தியுள்ளன. அதுவும் இவற்றை கணக்கெடுக்காமல் தமிழ்த் தேசியத்திற்கு மட்டுமல்ல திராவிட அரசியலுக்கே எதிரியான சுப்பிரமணிய சுவாமியை மகிந்தரிடம் தூது அனுப்பியமையும், அவர் தமிழ் நாட்டின் முக்கியத்துவத்தை இழிவுபடுத்தியமையும் தமிழ் நாட்டு மக்களின் அதிர்ப்தியை இரட்டிப்பாக்கியுள்ளது. இந்த அதிர்ப்தியினால் அதிகம் நெளிந்தவர்கள் தமிழ்நாட்டின் பாரதீய ஜனதாக்கட்சியினர் தான்.

எனவே தமிழ்நாட்டை ஓரளவிற்காவது திருப்திப்படுத்தவேண்டிய கட்டாயத்திற்காகவும் கூட்டமைப்பினரை அழைத்திருக்கலாம்.

நான்காவது அரசியல் தீர்வை 13வது திருத்தத்திற்குள் தொடர்ந்தும் முடக்கி வைத்திருப்பதாகும். வட மாகாணசபையின் தோல்வியினால் 13வது திருத்தம் எந்தவகையிலும் உதவப்போவதில்லை என்பதை தமிழ்மக்கள் அனுபவரீதியாக உணர்ந்துள்ளனர். அதனைக் கைவிட வேண்டும் என்ற அழுத்தமும் கூட்டமைப்புக்கு வரத்தொடங்கியுள்ளது. இதனால் கூட்டமைப்பினரும் பகிரங்கமாக பல இடங்களில் 13வது திருத்தம் தோல்வியடைந்துவிட்டது. அது தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கப்போவதில்லை எனக்கூறிவருகின்றனர்.



ஆனால் இந்தியாவினால் 13வது திருத்தத்தினை ஒருபோதும் கைவிட முடியாது. அது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் வழியாக வந்தது. இவ் ஒப்பந்தம் தான் இலங்கை மீதுசெல்வாக்குச் செலுத்துவதற்கு இந்தியாவிற்குள்ள ஒரேயொரு சர்வதேச ஆவணம். கூட்டமைப்பினை இதற்குள்ளேயே வைத்திருக்கத் தான் இந்தியா விரும்புகின்றது. இந்தியா வெளிநாட்டமைச்சின் செயலாளர் கூட்டமைப்பினருக்கு இதனை நேரடியாகவே சொல்லிவிட்டார். நரேந்திர மோடியும் 13வது திருத்தத்தினயே வலியுறுத்தியிருக்கின்றார்.

ஐந்தாவது தமிழ் அரசியலை தனது செல்வாக்கு மண்டலத்திற்கு வெளியே செல்லாமல் தடுத்து வைத்திருப்ப தாகும்.

அண்மைக்காலமாக மோடி அரசாங்கத்தின் அணுகுமுறை தமிழ் மக்களை வெகுவாகவே அதிர்ப்திக்கு உள்ளாக்கியுள்ளது. அந்த அதிர்ப்தி கூட்டமைப்பு மீதும் பாயத் தொடங்கியுள்ளது.

இரண்டாவது மருமகன் வந்தபின்னர் தான் மூத்தமருமகனின் அருமைதெரியும் என்ற முதுமொழிக்கிணங்க காங்கிரஸ் பரவாயில்லை என்று கூட சிலர் பேசத் தொடங்கியுள்ளனர்.

எனவே தமிழ் அரசியலை தொடர்ந்தும் தனது செல்வாக்கின் கீழ் வைத்திருப்பதாகவும் கூட்டமைப்பை அழைத்திருக்கலாம்.

கூட்டமைப்புக் குழுவினர் இந்தியா செல்லும் போது விக்கினேஸ்வரனை வருமாறு கேட்கவில்லை. மகிந்தர் கேட்டபோது விக்னேஸ்வரன் செல்லாததினால் தற்போது அழைத்துச் செல்வது மகிந்தரைக் கோபப்படுத்தும் என சம்பந்தன் தலைமை கருதியிருக்கலாம். மாகாண அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் 13வது திருத்தத்தைப் பற்றியே இந்தியாவில் பேசவிருப்பதால் மாகாண சபைக் குழு வந்தால் ஆரோக்கியமாக இருக்கும் எனத் தலைமையிடம் தெரிவித்தனர். அதற்கு தலைமையோ எல்லாப் பிரச்சனைகளும் எங்களுக்கும் தெரியும் தானே. நாம் எல்லாவற்றையும் பேசுவோம் எனக் கூறி விட்டே சென்றனர்.

விக்கினேஸ்வரனும் தொடர்ந்து அரசினை விமர்சிப்பதோடு மட்டும் நிறுத்தாமல் 13 வது திருத்தமும் மாகாணசபை முறையும் தமிழ் மக்களுக்கு ஏற்றதல்ல என்பதை சர்வதேச ரீதியாக கூறுவதற்கு முன்வரவேண்டும். வெறுமனவே ஆளுநரை விமர்சிப்பதிலோ, அரசாங்கத்தை விமர்சிப்பதிலோ பெரிய பயன்கிடைக்கப் போவதில்லை. இங்கு பிரச்சினை எல்லாவற்றிற்கும் மூலகாரணம் அரசாங்கமோ, 13 வது திருத்தமோ அல்ல. மாறாக பௌத்த சிங்கள அரசுதான் பிரச்சினை. இவ் அரசு ஒரு பல்லின அரசல்ல. மாறாக ஒற்றைத் தன்மையிலான சிங்கள பௌத்த அரசு. இந்த விடயத்தை தெளிவாக சர்வதேசத்தின் முன்வைக்காதவரை தமிழ் மக்களுக்கு விடிவு வரப்போவதில்லை.

கூட்டமைப்பின் பயணத்தினால் தமிழ் மக்களுக்கு ஏதாவது பயன்கிடைக்குமா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. தற்போதைக்கு அதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. சுற்றிச் சுற்றி 13 வது திருத்தத்திற்குள்ளேயே இந்தியா நிற்கின்றது. மோடி கூறியதாக கூட்டமைப்பினர் தான் பல கதைகளை அவிழ்த்து விடுகின்றார்களே தவிர இந்திய அரசாங்கத்தினால் உத்தியோக பூர்வமாக பெரிதாக எதுவும் சொல்லப்படவில்லை. கூட்டமைப்பினர் பிரதானமாக மூன்று கோரிக்கைகளை மோடியிடம் முன்வைத்திருந்தனர். தமிழர் சந்திக்கும் நெருக்கடிகளை அறிக்கையிட ஒரு குழுவை

இந்தியாவினால் 13வது திருத்தத்தினை ஒருபோதும் கைவிட முடியாது. அது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் வழியாக வந்தது. இவ் ஒப்பந்தம் தான் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு இந்தியா விற்குள்ள ஒரேயொரு சர்வதேச ஆவணம். கூட்டமைப்பினை இதற்குள்ளேயே வைத்திருக்கத்தான் இந்தியா விரும்புகின்றது. இந்தியா வெளிநாட்டமைச்சின் செயலாளர் கூட்டமைப்பினருக்கு இதனை நேரடியாகவே சொல்லிவிட்டார். நரேந்திரமோடியும் 13வது திருத்தத்தினையே வலியுறுத்தியிருக்கின்றார்.

அனுப்பிவைக்கவேண்டும். தமிழர் விவகாரத்தை கையாள ஒரு விசேடபிரதிநிதியை அனுப்பவேண்டும். பேச்சுவார்த்தையின் போது இந்தியப் பார்வையாளர் ஒருவர் இருக்கவேண்டும். என்பவையே அவையாகும். மூன்றையுமே மோடி நிராகரித்திருக்கின்றார். தற்போதைக்கு

(23 ஆம் பக்கம் பார்க்க)

# மாவை உண்மையான தலைவரா?

ஊர் சுற்றி

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது 15 வது மாநாட்டினை வவுனியாவில் நடாத்தி முடித்திருக்கிறது. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு அவலங்களுடன் அல்லலுற முடிசூட்டு விழாக்களுடனும் மாலை அணிவிப்புக்களுடனும் மாநாடு நடந்தேறியிருக்கிறது. அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர் பதவி வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமும் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். ஆனால் இதே அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகள்வகிக்கும் மலையக அமைச்சர்களுக்கு அழைப்பிதழ்கள் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யாழ்ப்பாணத்தில் நடாத்திய மாநாட்டில் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் அரசியல் குழுத்தலைவர் இராதா கிருஸ்ணன் கலந்து கொண்டிருந்தார்.



மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் தலைவர், செயலாளர் யார் என்பதில் குடுமிச் சண்டைகள் இடம்பெற்றிருந்தன. சம்பந்தன் தலைவராக விக்கினேஸ்வரனையும், செயலாளராக சுமந்திரனையும் கொண்டு வரவே விரும்பினார். இது தெரிந்தோ என்னவோ மாவை அவசரப்பட்டு மாவட்டக்கிளைகளை வட கிழக்கு எங்கும் உருவாக்கி தனக்கு சார்பான அங்கத்தவர்களை வரவழைத்திருந்தார். இந்தக் கெட்டித்தனங்கள் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் இல்லாததினால் அவர்களது முயற்சிகள் பலனளிக்கவில்லை.

விக்கனேஸ்வரன் தலைமைப்பதவிக்கு மாவையே பொருத்தமானவர் என பகிரங்கமாகக் கூறி சர்ச்சைகளிலிருந்து விடுபட்டுக் கொண்டார். வழமையாக தமிழரசுக் கட்சியில் தலைமைப் பதவியை மட்டக்களப்பினைச் சேர்ந்தவருக்கும் செயலாளர் பதவியை யாழ் மாவட்டத்திற்கும் கொடுப்பதே மரபாகும். பட்டிருப்புத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இராஜமாணிக்கம் இவ்வாறு தான் நீண்டகாலம் தலைவராக இருந்தார்.செயலாளர் பதவி மட்டும் எப்போதும் மாறாமல் அமிர்தலிங்கத்திடம் இருந்தது. இந்தப்பதவிக்காக இராஜதுரையும், அமிர்தலிங்கமும் சண்டைபிடித்தார்கள் என்ற கதையும் உண்டு. தனக்குரிய இடம் கட்சியில் கிடைக்காததினால்தான் இராஜதுரை கட்சியை விட்டு வெளியேறினார் என அவர் இப்போதும் சொல்லித்திரிகிறார்.

மாவைக்கு தமிழரசுக்கட்சி அரசியலில் நீண்ட வரலாறு உண்டு. அமிர்தலிங்கத்தின் உண்மைச் சீடனாகவே அவர் செயற்பட்டார். 1970 தேர்தலின் போது வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் தியாகராஜாவிடம் அமிர்தலிங்கம் தோல்வியடைந்தார். கச்சேரியில் இந்த செய்தி கேட்டு மாவை கச்சேரியிலேயே கதறி அழுதார்.

மாவை பாராளுமன்ற அரசியலில் தான் நாட்டம் கொண்டிருந்தாரே தவிர ஒருபோதும் பிரக்ஞை பூர்வ தமிழ்த் தேசிய அரசியலில் அக்கறையுடையவராக இருக்கவில்லை. 1973 ம் ஆண்டு கட்சி அரசியலுக்கு அப்பால் விடுதலை இயக்கம் ஒன்றினை கட்டி வளர்க்க வேண்டும் என்பதற்காக தமிழ் இளைஞர் பேரவை உருவாக்கப்பட்ட போது மாவை முக்கிய பதவிகள் எவற்றிலும் இருக்கவில்லை. ஆனால் 1975ல் தமிழர் விடுதலை கூட்டணியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்க இளைஞர் பேரவையின் முக்கிய தலைவர்கள் மறுத்ததினால் அவர்கள் வெளியேற்றப்பட்டு தமிழ் இளைஞர் பேரவை என்ற அமைப்பினை மாவை கைப்பற்றிக்கொண்டார். தமிழ் இளைஞர் பேரவையின் தலைவராக காசி ஆனந்தனும், செயலாளராக மாவையும் பதவி வகிப்பார்கள் என அறிவிக்கப்பட்டனர். தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து வெளியேறியவர்கள் தமிழீழ விடுதலை இயக்கம் என்ற ஒரு அமைப்பினை உருவாக்கினர். (இது தற்போதைய ரெலோ அல்ல) எரிமலை என்ற பத்திரிகையையும் சிறிது காலம் நடாத்தினர்.


**தமிழ் மக்களுக்கான பிரக்ஞைபூர்வ தேசிய இயக்கத்தை கட்டி வளர்ப்பதில் மாவைக்கு என்றைக்குமே விருப்பம் இருந்ததில்லை. அவற்றை முளையிலேயே சிதைத்த வரலாறு தான் மாவைக்கு உண்டு.**

மாவை தமிழ் இளைஞர் பேரவையை கைப்பற்றிய பின் அதற்கென பெரிய செயற்பாடுகளோ வேலைத்திட்டங்களோ இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் எடுபிடிகளாக இருப்பதே அவர்களின் ஒரே ஒரு செயற்பாடாகியது. இந்தப் போக்கு பிடிக்காததினால் மாவையை நம்பி அவருடன் இணைந்து செற்பட்ட சந்ததியார் இறைகுமாரன் என்போர் பின்னர் வெளியேறி தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி என்ற அமைப்பினை 1970 களின் பிற்பகுதியில் ஆரம்பித்தனர்.

தற்போது போல தங்களுக்கு புறம்பான பிரக்ஞைபூர்வ அமைப்புக்களை தமிழர் விடுதலைக் கூட்டணி அன்றும் சகித்துக்கொள்ளவில்லை. தமிழீழ விடுதலை இயக்கம் மிகவும் சிரமப்பட்டு யாழ் ஸ்ரான்லி வீதியில் தலைமைச் செயலகம் ஒன்றினை அமைத்த போது அது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள்ளேயே அடித்து நொருக்கப்பட்டது. புலோலி வங்கிக் கொள்ளையின் பின்னர் அந்த இயக்கமும் சிதைந்தது என்பது வேறு கதை. சந்ததியார், இறைகுமாரன் தலைமை தாங்கிய தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியையும் ஒழுங்காகச் செயற்பட மாவை அணி விடவில்லை அவர்கள் பின்னர் இயக்க மோதலினால் இறந்திருந்தனர்.

தமிழ் மக்களுக்கான பிரக்ஞைபூர்வ தேசிய இயக்கத்தை கட்டி வளர்ப்பதில் மாவைக்கு என்றைக்குமே விருப்பம் இருந்ததில்லை. அவற்றை முளையிலேயே சிதைத்த வரலாறுதான் மாவைக்கு உண்டு. ஆனால் பிரக்ஞைபூர்வ தேசியவாதி போல உணர்ச்சி வசப்பட்டு பேசுவார். நடைமுறையில் அதற்கு எதிராகவே நடந்து கொள்வார் அவரது. இந்தப் பண்பு தான் தமிழ்த் தேசிய சக்திகளுக்கு மிகவும் ஆபத்தானது. விக்கினேஸ்வரனும், சுமந்திரனும் தலைமையில் இருந்தால் அவர்கள் தங்களது வாய்களினாலும் செயற்பாடுகளினாலுமே விரைவில் அம்பலப்பட்டு விடுவர். விக்னேஸ்வரன் தமிழ் நாட்டைப் பற்றிய கணவன்-மனைவி கதையினால் ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயிருந்தார். தற்போது தமிழரசுக்கட்சி மாநாட்டில் பிரக்ஞைபூர்வ தேசிய சக்திகளை கனவு காண்பவர்கள் எனக்கூறி அம்பலப்பட்டுப் போயிருக்கின்றார். சுமந்திரன் மகிந்தருடன் கிரிக்கட் விளையாடி அம்பலப்பட்டுப்போயிருக்கின்றார். ஆனால் மாவை இவ்வாறு அம்பலப்பட்டுப் போகவில்லை. செயற்பாட்டிற்கு தகுதியற்றவர் என்ற பெயர் மட்டும் அவருக்கு இருக்கலாம்.

அவர் அடிக்கடி போராட்டம் பற்றிக் கதைப்பார். சுயநிர்ணயம பற்றிப் பேசுவார் ,ஆனால் போராட்டம் எவற்றையும் ஒழுங்கு செய்யமாட்டார். தன்னியல்பாக நடைபெறுகின்ற போராட்டங்களின் வீரியத்தையும் குறைத்து விடுவார். டேவிட் கமரூன் யாழ்ப்பாணம் வந்த போது அவர் செல்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யாழ் பொதுநூலகம் மற்றும் சபாபதிப்பிள்ளை முகாம் ஆகிய இடங்களில் அதிக மக்கள் அரசுக்கு எதிராக திரள்வதனை தடுப்பதற்காக மாவிட்டபுரம் போராட்டத்தை அறிவித்திருந்தார். அங்கு டேவிட்கமரூன் வரமாட்டார் என்பது நன்கு தெரிந்திருந்தும்,அவரை அங்கு அழைத்துவர சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்று பொய்கூறி ஆயிரக்கணக்கான மக்களை அங்கு திரட்டி சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து மாவைக்கந்தன் வாயிலில் மக்களை மறைத்து வைத்திருந்தார்.



வலி வடக்கு மக்கள் காணிப்பறிப்புக்கு எதிராக தாமாகப் போராட முன்வந்த போது மாவை அதையும் தடுத்தார். சுமந்திரன் அதனை நீதிமன்ற விவகாரமாக சுருக்கினார்.

சுரேஸ் பிறேமச்சந்திரன் கூட்டமைப்பினைப் பதியும் கனவில் இருக்கின்ற போதும் மாவை அதற்கு ஒரு போதும் இடம் கொடுக்கப்போவதில்லை. கூட்டமைப்பினைப் பதிவது சுரேஸின் இருப்பைப் பாது காத்து விடும் என்பதால் தமிழரசுக் கட்சியின் ஏனைய தலைவர்களும் அதற்கு இணங்கப்போவதில்லை.

மாவை தலைவராகவும், துரைராஜசிங்கம் செயலாளராகவும் பதவி வகித்தாலும் இவர்கள் பெயரளவு தலைவர்களாகவே இருக்கப்போகின்றனர். உண்மைத்தலைவர்களாக இருக்கப்போகின்ற



**வலி வடக்கு மக்கள் காணிப்பறிப்புக்கு எதிராக தாமாகப் போராட முன்வந்த போது மாவை அதையும் தடுத்தார். சுமந்திரன் அதனை நீதிமன்ற விவகாரமாக சுருக்கினார்.**

வர்கள் சம்பந்தனும் சுமந்திரனுமே. இவர்கள் இருவரும் இந்தியாவின் பச்சை எடுபிடிகள். இவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை புது டில்லியே தீர்மானிக்கும். இலங்கையில் யாழ்ப்பாண மார்ட்டின் வீதியிலுள்ள செயலகமல்ல தமிழரசுக்கட்சியின் தலைமைச்செயலகமாக இருக்கப்போவது. கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவராலயமே தலைமைச்செயலகமாக இருக்கும்.

ஜனவரி மாதத்திற்குள் அரசியல் தீர்வு முன்வைக்கப்படாவிட்டால் சாத்வீக போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என தமிழரசுக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது. ஆனால் கடந்த ஐந்து வருடங்களாக பல்வேறுபட்ட அவலங்களை மக்கள் சந்தித்த போதும் எதுவும் நடக்கவில்லை இவை தேர்தலுக்கான வெறும் முழக்கம் மட்டும் தான்

ஐ.நா விசாரணைக்குழு முன் சாட்சியமளிப்பதற்கு ஒழுங்குகளைச் செய்வோம் என தம்பட்டம் அடித்தார்கள். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. மாறாக சாட்சியமளிப்பதனை முடக்கும் வகையில் இவர்களது செயற்பாடுகள் அமைந்துள்ளன. ரவிகரன், அனந்தி போன்ற சிலர் மட்டும் காணாமல் போனோர் விடயத்தில் சிறிது அக்கறை செலுத்தியிருந்தார்கள் கட்சியின் வேலைத்திட்டமாக எதுவும் நடக்கவில்லை.

சாதாரண கண்களுக்கு தெரியும் வகையில் தமிழ் தேசத்தின் இருப்பை அழிக்க முயலும் அரசாங்கத்திற்கும், சாதரண மக்கள் புரிந்து கொள்ளமுடியாதவாறு தம்மை தூய தமிழ்த் தேசிய வாதிகளாக காட்டியவாறு அந்த அழிப்புக்கள் அனைத்துக்கும் அனைவரும் இணைந்து துணை போகின்றனர்.

இந்நிலையில் மாவை தமிழரசுக் கட்சியின் தலைவராக பதவியேற்றிருந்தாலும் அவர் தமிழ் மக்களுக்கான உண்மையான தலைவராக ஒருபோதும் இருக்கப்போவது இல்லை.

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# பொதுபலசேனாவினால் நன்மையடையத் துடிக்கும் ராஜபக்ஷ குடும்பம்

செப்டம்பர் மாதத்தின் இறுதி நாட்களில், இலங்கையின் எதிர்காலத்திற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய ஆபத்தான கூட்டணியொன்று புத்தரின் பெயரால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐக்கியம், நல்லிணக்கம், சமாதான சகவாழ்வு போன்றவை குறித்த மீத மிருக்கின்ற நம்பிக்கைகளையும் கலைத்து விடக்கூடிய இந்த கூட்டணி இலங்கையின் ஆட்சியாளர்களின் ஆபத்தான ஒரு நிகழ்ச்சி நிரலையும் தன்னுள் ஒளித்து வைத்திருக்கிறது.

மியன்மாரின் மதகுரு விராது இலங்கைக்குள் காலடி எடுத்து வைக்க அனுமதித்ததன் மூலமாகவும் ஒரே மேடையில் ஞானசாரருடன் கைகோர்ப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலமாகவும் அரசாங்கம் தனது தேர்தல் விளையாட்டை ஆடத் தொடங்கியுள்ளது.

விராது இலங்கை வருகிறார் என்பது தெரியவந்ததும் இதனால் உருவாகக் கூடிய ஆபத்தான சூழ்நிலைகள் குறித்து பல தரப்பினரும் எச்சரித்திருந்தனர். சமாதான சகவாழ்விற்கு ஆபத்து வரலாம் என அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய மனோநிலையை, உள்ளோட்டத்தை நன்கு அறிந்தவர்களுக்கு இந்த வேண்டுகோள்கள் இறுதியில் சென்றடையும் இடம் ஆட்சியாளர்களின் குப்பைத்தொட்டி என்பது நன்கு தெரிந்திருந்தது.

அவர்கள் எதிர்பார்த்தபடி அரசாங்கம் விராதுவிற்கு செங்கம்பள வரவேற்பை அளிப்பதற்கும் இலங்கை ஒரு தேசம் என்ற அடிப்படையில் எதிர்காலத்தில் பயணிப்பதை ஆபத்தானதாக்கக் கூடிய கூட்டணியொன்று உருவாவதற்கும் இடமளித்துள்ளது.

பொதுபலசேனா மாநாட்டிற்கு மியன்மாரின் மதகுரு விராதுவை அழைப்பதற்கும் உரையாற்றுவதற்கும் அனுமதியளித்ததன் மூலமாக விஷ விதைகள் தூவப்படுவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. நமது சந்தேகம் என்னவென்றால் அதிலிருந்து உண்டாகும் கனிகளின் பலாபலன்களை தாங்கள் அனுபவிக்கலாம் என அரசாங்கம் கருதுகின்றதா? என்பதே!

விராதுவின் இயல்புகள், அவரும் ஞானசாரரும் ஒரே மேடையில் தோன்றுவதனால் சிறுபான்மை சமூகங்கள் மற்றும் சர்வதேச அளவில் உருவாகக் கூடிய அபிப்பிராயங்கள் போன்றவற்றை நன்கு உணர்ந்திருந்தும் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது எனும் போது பொதுபலசேனாவிற்குள் இருக்கும் ஆதரவும், அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலும் தெளிவாக புலப்படுகின்றது.

ஜனவரியில் தேர்தல் நடைபெறப்போவது உறுதியாகிவிட்டது. ஊவாவில் தங்களுக்கு கிடைத்த பலவீனமான வெற்றியால் ஆடிப்போயுள்ள ராஜபக்ஷ குடும்பத்தினர், பொதுபலசேனா மாநாடு போன்ற ஒன்றை நடத்துவதற்கு அனுமதிப்பதால் கிடைக்கக் கூடிய ஆதாயத்தை நன்கு கணிப்பிட்டுள்ளனர்.

இம்முறை தேர்தலில் தமிழர்கள் மாத்திரமல்ல முஸ்லீம்களும் தங்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்திருக்கிறது. அதனால் பெரும்பான்மை சமூகத்தின் வாக்குகளில் வீழ்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உள்ளது.

அரசியல் வன்முறைகளைப் பயன்படுத்தித் தேர்தல்களை வெல்ல முயலலாம். ஆனால் அந்த வெற்றிகள் மிகப்பெரும் வெற்றியை பெற்றுத்தராது, மேலும் அந்த வகை வெற்றிகள் கிடைத்தாலும் அவை சர்வதேசத்தின் பார்வையில் நியாய பூர்வத்தன்மையை இழந்தவையாகவே காணப்படும்.

இதனால் அரசாங்கத்திற்கு தங்களது சிங்களபௌத்த வாக்கு வங்கியை எப்பாடுபட்டாவது தக்க வைக்க வேண்டிய தேவையுள்ளது.

பொருளாதார ரீதியான சலுகைகளும் எடுபடாது என்ற நிலை காணப்படுகின்றது. ஊவா மக்கள் அதனை நிராகரித்துள்ளனர் மக்களுக்கு அதன் பின்னால் உள்ள அரசியல் நன்கு தெரிந்துள்ளது.

இவற்றின் காரணமாக அரசாங்கத்திற்கு சிங்கள பௌத்தர்களின் பாதுகாவலர்கள் என்ற தோற்றப்பாடு மங்கி வருவதை மீண்டும் ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இதன் ஒரு பகுதியே பொதுபலசேனா உச்சி மாநாடு.

இந்த மாநாடு முழுவதும் சிங்கள பௌத்தர்களிற்கு ஏதோ பெரும் ஆபத்துள்ளதாக அவர்களது இருப்பிற்கே ஆபத்து வந்து விட்டதாக மாயத் தோற்றம் ஏற்படுத்தப்பட்டதை காணமுடிந்தது.

இவ்வாறாக உருவாக்கப்படும் போலியான அச்ச உணர்வுகளே எதிர்காலத்தில் ராஜபக்சாக்களுக்குக் கைகொடுக்கப் போகின்றன. சிங்கள பௌத்தர்களை மேலும் வெறியூட்ட வேண்டிய தேவை அரசாங்கத்திற்குள்ளது. அவ்வாறு அவர்களை மாற்றுவதால் கிடைக்கக் கூடிய பலாபலன்களை அரசாங்கம் தேர்தலில் அறுவடை செய்ய நினைக்கின்றது.

விராது-பலசேனா கூட்டு என்பது அதற்கு மிகப் பயனுள்ள விடயம். பெரும்பான்மை மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப அது உதவும்.

தேர்தலிற்கு முன்னதாக இனவெறி நிரம்பிய அரசியல் உளவியல் சூழ்நிலையை ஏற்படுத்துவதில் இந்த மாநாடு ஒரு மிகப்பெரும் பாய்ச்சலாகும்.

# ஊவா தேர்தல் முடிவுகள் கூறும் செய்தி என்ன?

ஊவா மாகாணசபைத் தேர்தல் முடிந்துவிட்டது. எதிர்பார்த்ததற்கு மேலாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெரும் வீழ்ச்சியைக் கண்டிருக்கின்றது. பதுளை மாவட்டம் ஒரு பன்மைத் தன்மை வாய்ந்த மாவட்டமாக இருப்பதால் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால் பன்மைத் தன்மை குறைந்த மொனராகலை மாவட்டத்திலும் அரசாங்கம் வீழ்ச்சிக்குள்ளானதுதான் இங்கு கவனத்திற்குரியது.

சென்ற மாகாணசபைத் தேர்தலை விட 21.12 வீதவாக்குகளை அரசாங்கம் இழந்திருக்கின்றது. அதேவேளை ஆறு ஆசனங்களையும் இழந்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி 1, 45, 629 வாக்குகளையும், ஆறு ஆசனங்களையும் மேலதிகமாகப் பெற்றிருக்கின்றது ஜே.வி.பி 21,941 வாக்குகளையும் ஒரு ஆசனத்தையும் மேலதிகமாக பெற்றிருக்கின்றது.

மலையகமக்களின் ஏறத்தாள அரைவாசி வாக்குகள் அரசாங்கக் கட்சிக்கும் மீதி அரைவாசி வாக்குகள் ஐக்கிய தேசியக்கட்சிக்குமாக பிரிந்திருக்கின்றன. நகர்ப்புறத் தமிழ் வாக்காளர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்துள்ளனர். தோட்டப்புறவாக்காளர்கள் அரசாங்ககட்சிக்கு அதிகளவில் வாக்களித்துள்ளனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கு வலுவான தொழிற்சங்கக் கட்டமைப்பு தோட்டத் துறையில் இருப்பதே இதற்குக் காரணம் எனலாம்.

அதேவேளை இ.தொ.கா. வேட்பாளர்களுக்கு வாக்களித்தவர்கள் அதிகளவில் 3 வாக்குகளையும் தமிழ் வேட்பாளர்களுக்கே அளித்ததினால் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மூன்றாமவர் சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்துள்ளார். இதே வாக்களிப்பு முறை ஐக்கியதேசியக் கட்சியில் இடம் பெறாததனால் ஒருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இ.தொ.கா வாக்களிப்பு முறை இங்கு பின்பற்றப்பட்டிருப்பின் மூன்று பேர் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். வடிவேல்சுரேஸ் தனது தனிப்பட்ட செல்வாக்கு காரணமாக கணிசமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருக்கின்றார்.

> ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம் பரியவாக்குகள் போர் வெற்றியின் பின்னர், அரசாங்கத்தை நோக்கி சரிந்திருந்தது. தற்போது அது மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக ஐக்கியதேசியக் கட்சியை நோக்கிநகரத் தொடங்கியுள்ளது.

மலையக மக்கள் முன்னனியின் சார்பில் அரசாங்கக் கட்சியில் போட்டியிட்ட அரவிந்தகுமார் 12,721 வாக்குகளைப் பெற்றபோதும் தோல்லியடைந்திருக்கின்றார். சென்ற தடவை சொந்தக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு 9000 வரையான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார். இந்தத் தடவை சொந்தக் கட்சியில் போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்றிருக்கக் கூடிய வாய்ப்பு இருந்திருக்கும். அரவிந்தகுமாருக்கு என சிறிய வாக்கு வங்கி பதுளை மாவட்டத்தில் உண்டு.

மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரனின் மறைவிற்குப் பின்னர் கொள்கையினை கோட்டைவிட்டது அல்லாமல் நிரந்தர ஆசனத்தையும் கோட்டை விட்டிருக்கின்றது. எத்தனை ஆசனங்கள் கிடைத்தாலும் மாகாண சபை முறை மலையக மக்களுக்குப் பெரிதாகப் பயன்படப் போவதில்லை.

முஸ்லிம் காங்கிரஸ், றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டும் 5045 வாக்குகளையே பெற்றிருந்தது. ஆனால் ஐக்கியதேசியக் கட்சியில் போட்டியிட்ட ஈ.எம். நசீர் 15,686 வாக்குகளைப் பெற்றிருந்தார். எனினும் அவர் தெரிவாகவில்லை. இது முஸ்லிம் மக்கள் ஐக்கியதேசியக் கட்சியினை ஆதரிப்பதையே காட்டுகின்றது.



அரசாங்கத்தின் வீழ்ச்சி நான்கு விடயங்களை தெளிவாக வெளிக்காட்டுகின்றது.

1) ஐக்கியதேசியக் கட்சியின் பாரம்பரிய வாக்குகள் போர் வெற்றியின் பின்னர் அரசாங்கத்தை நோக்கி சரிந்திருந்தது. தற்போது அது மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக ஐக்கியதேசியக் கட்சியை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.
2) இதுவரைகாலப் போர் வெற்றி அலை சரியத்தொடங்கியிருக்கின்றது.
3) பிரேமதாசா அரசாங்கத்தை முன்னர் வீழ்த்திய சிங்கள மத்தியதரவர்க்கம் தற்போது மகிந்தர் அரசாங்கத்தையும் வீழ்த்த முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. இராணுவ இறுக்கம், ஜனநாயக மின்மை, சட்டத்தின் ஆட்சி இல்லாமல் போதல், நீதித்துறை சுதந்திரம் பலவீனமடைதல் என்பனவே இதற்குக் காரணமாகும். இந்த மத்திய தர வர்க்கம் 17வது திருத்தத்தை மீளக்கொண்டு வருதல், நிறைவேற்று ஜனாதிபதி முறையினை ஒழித்தல் என்பன தொடர்பாகச் சட்ட வரைபுகளையும் உருவாக்கத் தொடங்கியிருக்கின்றது.
4) மலையகத் தமிழர்களும், முஸ்லிம்களும் அரசாங்கத்தின் பேரினவாதச் செயற்பாடு காரணமாக அரசாங்கத்திலிருந்து விலகத் தொடங்கியுள்ளனர். இதனை ஆறுமுகம் தொண்டமான், ரவூப் ஹக்கீம் போன்ற உயர் தலைவர்களினாலும் தடுக்க முடியவில்லை. குறிப்பாக தென்னிலங்கை முஸ்லிம்கள் மகிந்தர் அரசாங்கத்தில் தமது இருப்பிற்கு இடமில்லை என நினைக்கத் தொடங்கியுள்ளனர்.

இங்கு எழும் முக்கிய கேள்வி ஊவாமாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா? நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். மகிந்தருக்கான வாக்குவீதம் குறையும். ஆனால் அவரைத் தோற்கடிக்கும் அளவிற்கு வீழ்ச்சியுறும் எனக் கூறமுடியாது.

அதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அதில் முதலாவதுபோர் வெற்றி அலை சிங்கள மக்கள் மத்தியிலிருந்து இன்னமும் முற்றாக அகலவில்லை. பேரினவாத சக்திகளும், இராணுவமும் எப்படியாவது அவரை வெற்றியடையச் செய்வதற்கே முயற்சிக்கும்.

இரண்டாவது படித்த சிங்கள மத்திய தர வர்க்கம் பிரேமதாசா காலத்தைப் போல மகிந்தருக்கு எதிராகத் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலை நகர்த்தத் தொடங்கியிருக்கின்றது

(19 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சியின் 15 வது மாநாடு வெறும் பம்மாத்தா?

–முத்துக்குமார்–

கடந்த மாதம் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் முக்கிய பிரமுகர்கள் ஆற்றிய உரைகளும் மாநாட்டுத் தீர்மானங்களும் பல்வேறு சர்ச்சைகளையும் கோட்பாட்டுப் பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளமையினால் அது பற்றி கலந்துரையாட வேண்டியது அவசியமாக உள்ளது.

மாநாட்டு உரைகளில் மாவையின் நீண்ட உரையைப்பற்றி அதிகம் பேசுவதற்கு எதுவுமில்லை. ஒன்றிற்கொன்று முரணான புலம்பல்களே உள்ளன. ஆனால் சம்பந்தன், விக்கினேஸ்வரன் போன்றோரின் உரைகள் பல கோட்பாட்டுப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளன. அவை பற்றி முதலில் ஆராய்வதே அதிகம் பொருத்தமானதாக இருக்கும்.


சம்பந்தனின் உரைகளில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும். இரண்டாவது அப்பேச்சுவார்த்தை ஆறு மாதத்திற்குள் முடிக்கப்படவேண்டும். இந்த இரண்டு கருத்துக்களும் வரவேற்கப்படவேண்டியவை என்பதில் எந்த வித ஆட்சேபனையுமில்லை. ஆனால் இங்கு முக்கியாமான விடயம் எதைப்பற்றிப் பேசுவது? மாகாண சபை பற்றிப் பேசுவதாயின் பேச்சுவார்த்தையே தேவையில்லை எனலாம். இது வரை காலமும் சட்டரீதியாகத்தான் மாகாண சபைகளுக்கு அதிகாரமில்லை என்பது நிரூபிக்கப்பட்டது. தற்போது அனுபவ ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. வடமாகண ஆளுனர் சந்திரசிறி அமைச்சின் செயலாளர்களை அழைத்து தெளிவாக ஆளுனரின் அதிகாரம் பற்றி விளக்கம் கொடுத்திருக்கின்றார். விக்கினேஸ்வரனும் அதிகாரம் எதுவும் இல்லை என புலம்பித்திரிகின்றார்.

எனவே பேச்சுவார்த்தை மாகாண சபை தவிர்ந்த அரசியல் தீர்வு விடயங்களைப் பற்றித்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கும். அப்படியாயின் அத்தீர்வு என்ன? தமிழரசுக்கட்சி தனது தீர்மானத்தில் பகிரப்பட்ட இறைமையின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வு எனக் கூறியுள்ளது. இது கோட்பாட்டு ரீதியாக மிகவும் தவறானது. இதன் படி இறைமை சிங்கள தேசத்திடம் உள்ளது. இது தமிழர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படல் வேண்டும் என இரந்து கேட்கின்ற ஒன்றாகும். உண்மை அதுவல்ல. சிங்கள மக்களின் இறைமை சிங்கள மக்களிடம் உள்ளது. தமிழ் மக்களின் இறைமை தமிழ் மக்களிடம் உள்ளது. இரண்டு தேசங்களும் ஒரு நாட்டுக்குள் வாழவிரும்பினால் ஒரு சமூக ஒப்பந்தத்தின் மூலம் இரு இறைமைகளையும் கூட்டி இலங்கை என்ற ஒரு நாட்டை உருவாக்க வேண்டும். அங்கும் கூட தனியான நலன்களை தனியாகவும் கூட்டான நலன்களை கூட்டாகவும் பிரயோகிக்கும் நிலை இருக்க வேண்டும். இதனைத்தான் இரு தேசக் கோட்பாடு என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறி வருகின்றது.

இங்கும் கூட் சட்டரீதியான கட்டமைப்புக்கள் உருவாக்கும் போது அதிகார அலகு, தமிழ்த் தேசத்தின் அதிகாரங்கள், கூட்டு அதிகாரத்தில் தமிழ்த்தேசத்திற்கான பங்கு அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பவற்றில் தெளிவான ஏற்பாடுகள் இருக்க வேண்டும். வெறுமனவே சமஷ்டி என்ற வார்த்தையை பிரயோகிப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. சமஷ்டியில் பல விதம் உண்டு. நாங்கள் கோருவது இரண்டு தேசங்களும் சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைந்த சமஷ்டியே!

தமிழ் மக்களின் கூட்டிருப்பையும் கூட்டுரிமையையும் பேணுவதற்கு வடகிழக்கு இணைந்த அதிகார அலகு அவசியம். அதே வேளை முன்னர் கூறியது போல தமிழ்த் தேசத்திற்கு சுய நிர்ணயம் அவசியம். இந்த இரண்டு விடயங்களிலும் எந்த வித விட்டுக்கொடுப்புக்களையும் செய்யமுடியாது.

பேச்சு வார்த்தையை ஒரு காலம் கடத்தும் தந்திரோபாயமாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் பயன்படுத்தியமை அனைவருக்கும் தெரிந்த வரலாறு தான். இந்த வகையில் ஆறு மாதத்திற்குள் பேச்சு



வார்த்தை முடிக்கப்படல் வேண்டும் எனக் கூறியமை வரவேற்கத்தக்கதே. ஆனாலும் சர்வதேச கண்காணிப்பு என வருகின்றபோது யாரை கண்காணிப்பாளராக நிறுத்துவது என்ற கேள்வியும் வருகின்றது.

சம்பந்தனின் பேச்சுவார்த்தை பற்றிய வீரமான கருத்துகளும் இந்தியாவின் தந்திரோபாயத்தின் அடிப்படையில் எழுந்ததாகக் கூட கருதலாம். ஐ.நா விசாரணைக்கு சாட்சியங்களை திரட்டி வரும் நிலையில் இந்தியா அதற்கு ஒத்துழைக்க மறுத்து வருகிறது. இந்நிலையில் டில்லி சென்று திரும்பிய கூட்டமைப்பின் செயற்பாடுகளும் கருத்துக்களும் சாட்சியம் அளிப்பதனை முடக்கும் வகையிலேயே அமைந்துள்ளன. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கூட இந்தியப் பிரதிநிதி மனித உரிமை விவகாரத்தில் உள்ளகப் பொறிமுறையைத் தான் முதன்மைப்படுத்த வேண்டும் எனக்கூறியிருக்கின்றார். பேச்சுவார்த்தை என ஏதாவது நடந்தால் நல்லிணக்க முயற்சிகள் நடைபெறுவதாகக் கூறி எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வெளிவரவுள்ள அறிக்கையின் வீரியத்தைக் குறைக்கலாம் எனவும் எண்ணுகின்றனர் போலுள்ளது.

**இந்த கற்பனை அரசியலின் மூதாதையர்கள் தமது கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் என்பதை வசதியாக இருட்டடிப்பு செய்திருக்கின்றார். தனிநாட்டுத் தீர்மானத்தை எடுத்தவர்கள் இவர்களின் மூதாதையர்களான தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தான் விடுதலை இயக்கங்கள் குறிப்பாக புலிகள் இயக்கம் அதனை நடைமுறையில் கொண்டு சென்றது.**

அதேவேளை தமிழ்மக்களிடமும் ஐ.நா விசாரணையை தணிக்கச் செய்வதற்குத்தான் இந்த பேச்சுவார்த்தை நாடகம் மேடையேற்றப்படுகின்றது என்ற வலுவான சந்தேகம் உண்டு. சம்பந்தன் சர்வதேச கண்காணிப்பில் 6 மாதத்திற்குள் பேச்சுவார்த்தை முடிக்க வேண்டும் என வீரவசனம் பேசுவதன் மூலம் தமிழ் மக்களின் சந்தேகங்களை தணிக்கச் செய்ய முயலலாம். 6 மாதம் முடிந்த பின் நாம் என்ன செய்வது அரசாங்கம் எம்மை ஏமாற்றிவிட்டது எனக் கூறுவதற்கு சம்பந்தன் தலைமைக்கு எந்தத் தயக்கமும் வரப்போவதில்லை. மாகாணசபை முறையில் எதுவுமில்லை என்பதை நன்றாகத் தெரிந்தும் கூட அதைத் தோளில் தூக்கி கூத்தாடியவர்கள் தற்போது புலம்பித் திரிவது போல் இதற்கும் புலம்பமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அடுத்தது விக்கினேஸ்வரனின் உரை அவர் தமிழ் அரசியல் சக்திகளை



மூன்று பிரிவாகப் பிரிக்கின்றார். தருவதை பெற்றுக் கொள்வோம் எனக் கூறுபவர்கள் ஒரு தரப்பினர். குறிப்பாக ஈழமக்கள் ஜனநாயக் கட்சியினரைத்தான் அவ்வாறு கூறுகின்றார். கற்பனையில் வந்தவர்கள் இரண்டாவது தரப்பினர் என்கின்றார். அவர்கள் தமது கற்பனை அரசியல் மூலம் அழிவுகளை ஏற்படுத்தினர் எனவும் கிண்டலடிக்கின்றார். இந்த கற்பனை அரசியலின் மூதாதையர்கள் தாமும், தமது கட்சியைச் சேர்ந்தவர்களும் தான் என்பதை வசதியாக இருட்டடிப்பு செய்திருக்கின்றார். 1976 இல் தனிநாட்டுத் தீர்மானத்தை எடுத்தவர்கள் இவர்களின் மூதாதையர்களான தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தான் என்பதனையும் 1977 இல் தனிநாடு தேர்தல் விஞ்ஞாபனத்தின் கீழேயே சம்பந்தன் போட்டியிட்டு பதவி பெற்றார் என்பதனையும் வசதியாக மறைத்துவிட்டனர். அந்த இலக்கை நோக்கியே விடுதலை இயக்கங்கள் குறிப்பாக புலிகள் இயக்கம் அதனை நடைமுறையில் கொண்டு சென்றது. இன்று விக்கினேஸ்வரன் கூட அவர்களது தியாகத்தில்தான் அரசியல் நடாத்துகின்றார். ஒரு கோடி ரூபா பெறுமதியான வாகனத்தில் சுகபோகம் அனுபவிக்கிறார். போராட்டத்தின் வலி எதுவும் தெரியாமல் கொழும்பில் சுகபோகம் அனுபவித்தவருக்கு இவையெல்லாம் எங்கே தெரியப்போகின்றது. இது புரியாவிட்டால் மனோகணேசனிடமாவது கேட்டு கொஞ்சம் புரிந்து கொள்வது நல்லது. மனோகணேசன் தமிழரசுக்கட்சி மாநாட்டிலேயே புலிகளின் போராட்டம் தான் தமிழர் விவகாரத்தை சர்வதேசமயமாக்கியது எனக்குறிப்பிட்டார். கற்பனை உலகக்காரர்கள் என இவர் கூறுபவர்கள் கூட தமிழ்த்தேசத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தால் ஒரு நாட்டிற்குள் சக வாழ்வு வாழ்வதற்குத் தயாராக இருந்தார்கள். புலிகளின் இடைக்காலத் தீர்வு யோசனை இந்தவகையில் தான் வெளிவந்தது. ஆனால் விக்கினேஸ்வரன், சம்பந்தன் போன்ற ஒரு கூட்டம் எதுவுமேயில்லாத 13வது திருத்தத்திற்குத் தயாராக இருந்ததினால்தான் சர்வதேச சக்திகள் எல்லாம் சேர்த்து புலிகளை அழித்தன. இவர்களும் சுயநிர்ணயக் கோரிக்கையில் உறுதியாக இருந்திருந்தால் புலிகளை வைத்துக் கொண்டே சர்வதேச ஆதிக்க சக்திகள் பிரச்சினையை தீர்க்க முன்வந்திருப்பர். உண்மையில் மக்கள் அழித்தவர்கள் கற்பனைக்காரர்கள் அல்ல. மாறாக இந்தப் பச்சோந்திக் கூட்டங்கள்தான்.

***ஐ.நா விசாரணை சற்று இறுக்கமடைந்து வருவதால் அதனை ஏதோ ஒரு வகையில் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இந்தியாவிற்கு இருக்கின்றது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கூட இந்தியப் பிரதிநிதி மனித உரிமை விவகாரத்தில் உள்ளகப்பொறிமுறையைத் தான் முதன்மைப் படுத்த வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.***

இன்று விக்கினேஸ்வரன் கற்பனை வாதிகள் எனக்கூறுவது டயஸ்போறாவையும். தாயகத்தில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் தமிழகத்தில் செயற்படுகின்ற தமிழ்த் தேசிய ஆதரவு சக்திகளையும் தான். இவர்களும் சுயநிர்ணய அடிப்படையில் ஒரு நாட்டிற்குள் வாழ்வதற்கு தயாராக இருக்கின்றனர் என பல தடவைகள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இன்றைக்கு தமிழ்த்தேசிய அரசியல் அழிந்து போகாமல் உயிர்ப்புடன் வைத்திருப்பவர்கள் இவர்கள்தான். விக்கினேஸ்வரனுக்குள்ள கவலை எல்லாம் இவர்களும் தங்களைப்போல எடுபிடிகளாக வரவில்லை என்பதுதான்.

மூன்றாவது தரப்பினர் யதார்த்தத்தை அறிந்து செயற்படுபவர்கள் எனக் கூறுகின்றனர். தங்களுக்குத்தான் அவர் அவ்வாறு புகழ்மாலை சூட்டுகின்றார். இந்த யதார்த்தத்தை அறிந்தவர்களினால் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடிந்ததா? தங்களுக்கென ஒரு அரசியல் இலக்கினையோ ,அதற்கு வழிகாட்டக் கூடிய கொள்கைகளையோ உருவாக்க முடிந்ததா? வேலைத்திட்டங்களை உருவாக்க முடிந்ததா? அமைப்புப் பொறிமுறையை உருவாக்கமுடிந்ததா? போருக்குப்பின்னர் அரசாங்கம் மேற்கொண்ட பச்சை ஆக்கிரமிப்புக்களை தடுக்கமுடிந்ததா? குறைந்தபட்சம் அதற்கான போராட்டங்களையாவது நடாத்த முடிந்ததா? விக்னேஸ்வரன் ஏதாவது போராட்டத்தில் பங்கு பற்றினாரா? மாகாண சபையில் நிறைவேற்றிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஆளுநர் தடுத்த பின்னரும், பிரதம செயலாளரை முதலமைச்சர் கட்டுப்படுத்த முடியாது என உயர் நீதிமன்றம் தீர்மானித்த பின்னரும் எதற்காக மாகணசபையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கவேண்டும். டக்ளஸ் போல அரசாங்கம் வழங்குகின்ற எலும்புத்துண்டுகளை எடுப்பதற்குத்தான் மாகாண சபை இருக்கின்றதா? இன்று வட மாகாண அமைச்சர்களும் பல மாகாண சபை உறுப்பினர்களும் இரகசியமாக

(19 ஆம் பக்கம் பார்க்க)

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ



நையாண்டி
கல்வயல் கனகசிங்கம்

வணக்கம் வணக்கம்
நான் கல்வயல் கனகசிங்கம்
எப்படி உங்கட பாடு?
ஏதோ என்ர பாடும் போகுது.

நான் தெளிவா மனுசீட்ட சொல்லிப்போட்டன் பலமான சாப்பாடுகள் தரச்சொல்லி எங்கட தமிழரசுக் கட்சியின்ர தளபதி சொல்லிப்போட்டார் வாற ஜனவரியில இருந்து போராட்டம் மீண்டும் ஆரம்பம் என்டு. அப்பதெரியும் தானே போராட்டம் என்டு வெளிக்கிட்டா ரோட்டில அடிபட்டா தள்ளுப்பட்டா பலமா இருக்கோனும் பாருங்கோ அதுக்காகத்தான் நல்ல சாப்பாடா போடடி ஆத்தே என்டு. பலமா இருந்தாத்தானே ரோட்டில போராடலாம் என்ன.

ஆனால் எங்கட தளபதி இப்படி போராட்டம் என்டு சொல்லி சொல்லி நான் நினைக்கிறன் வருசக்கனக்காச்சுது. முள்ளிவாய்க்காலுக்கு பிறகு அவர் போராடபோறன், போராட போறன் என்டு சொல்லிப்போட்டு திடீர் என்று இந்தியாவில இருக்கும் குடும்பத்திட்ட போய்டுவார். இந்தியாவில இருக்கிற குடும்பத்திட்ட போட்டு வரேக்கிலயும் அங்க அவர்ட ஆக்கள் விளக்கம் கொடுப்பாங்கள் அவர் டெல்லியில ராஜதந்திரப்பேச்சு செய்துபோட்டு வந்தவர் என்று.

உண்மையில தமிழ்ச்சனம் பாவம்தான் பாருங்கோ இப்பிடிச் சொல்லி சொல்லி ஏமாத்திக் கொண்டே போறாங்கள் சனத்த. இங்க பாருங்கோ கறையான் புத்தெடுத்த மாதிரி சனத்தின்ட குடியிருப்புக்குள்ள புதுசு புதுசா காணிசுவீகரிக்கிறதும் சனம் அதுக்கு போராடுறதும் ஒரு பக்கமா போய்க்கொண்டு இருக்க கூட்டமைப்பின்ட ஊடகப்பேச்சாளர் சொல்லியிருக்கிறார் பாக்கேலயோ நாங்கள் ஒவ்வொரு நாளும் கிளித்தட்டு விளையாடிக் கொண்டு இருக்கேல்ல என்டு ஏன் பாருங்கோ கூட்டமைப்புத்தானே உள்ளூராட்சி, வடமாகாண சபை என்டு எல்லா மட்டத்திலும் நிர்வாகத்தையும் வச்சிருக்கு.

எங்க போய் பாத்தாலும் காணிசுவீகரிப்புக்கு எதிராக ஒரு நாலுபேர் முன்னுக்கு போய் நிக்கினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்ட கஜேந்திர குமாரும், கஜேந்திரனும் இங்கால பாத்தா சிவாஜிலிங்கமும், சுரேசும் ஏன் வேற ஆக்கள் ஒருத்தரும் இல்லையோ? எத்தனை உள்ளூராட்சிசபையில. முண்ணூரு பேரை வச்சிருக்கிறியல் என்ற கேள்வி யாழ்ப்பாணத்தில் மட்டும். அவையல் ஒருத்தரும் இங்கால வரமாட்டினமோ? எல்லோரும் கதிரயில அடுத்த எலக்சனுல வெல்லுறது என்டதுதான் நோக்கம் எப்புடி சுருட்டிக்கொண்டு போகலாம் என்டு பாக்கினம் இல்லாது சனத்துக்கு தலமை தாங்கிறதுக்கு முன்னுக்கு நின்று போராடுறதுக்கு ஒருத்தரும் இல்லை. சும்மா வெறுமனே வாய்ப்பேச்சுக்கு கூட்டத்தை கூட்டுறது அந்த அணி இந்த அணி எல்லாத்தையும் கூட்டுறதுதான் மிச்சம். கூடுறது பேசுறது அவளவுதான் மிச்சம். அதிலயும் தமிழரசுக்கட்சி தலைவராக எங்கட மாவை ஐயா வந்ததை கௌரவிப்பதுக்கு இப்ப ஒரே மாலை மட்டை. அந்தாள் சொல்லியிருக்கு மாலைகளையும் பொன்னாடைகளையும் பாக்கேக்க போராட வேண்டும் என்டு வருது.

அடக் கோதாரி விழுவாரே முந்தி என்னத்துக்கெல்லாம் மாலைய போட்டாங்கள் ஆருக்கு மாலைய போட்டு கௌரவித்தாங்கள் எம் தேசத்துக்கு உயிரைக் கொடுத்தவங்களுக்குதான் அந்த மாலை மரியாதைகளை குடுத்தது சமூகம். அவங்கள் கல்லறைகளுக்கு போகக்குள்ள அந்த மாலைகள் மரியாதைகள். இப்ப வந்து பாருங்கோ மலினப்பட்டு போச்சு அதிலயும் அந்த இளைஞரணி தமிழரசுக்கட்சி உருவாக்கி அதில இருக்கிற மூத்த பொடியன் சொன்னான் கதையொன்டு தன்ன ஒருத்தரோடையும் சண்டபிடிக்க வேண்டாம் என்டு மற்ற பெடியள் சொல்லுறாங்களாம். ஏன் என்டால் அண்ணே நீங்கள் உப்புடி கண்டபடி சண்ட புடிச்சா பேந்து உவங்கள் நாளைக்கு கட்சியால நிப்பாட்டினா நாங்கதான் நடுரோட்டில நிக்கோணும் எண்டு. தெளிவாத் தெரியுது இப்ப தமிழரசுக்கட்சி என்டு சொல்லிக்கொண்டு கூட்டமைப்புக்கு அடுத்து வாறவங்கள் எவருமே எந்த தியாகமோ எதுவுமே செய்யாமல் கதிரைக்காக வாறாங்கள். ஆன சனம் பாவம். சனம் என்ன பாவம் சனம் என்னத்த செய்யேலும் இவங்களுக்கு நம்பி புள்ளடிய போட்டிட்டு அடுத்த எலக்சன் மட்டும் பாத்துக்கொண்டு திரியுது

அதுக்குள்ள எங்கட வடமாகாண சபை ஒருமாதிரி இலுத்துப்பிடிச்சு ஒருவருசம் கடந்திட்டினம் அது மூச்சுப்பேச்சில்ல ஒருத்தரும் மூச்சுப்பேச்சில்ல ஆனா இப்ப பாத்தா முதலமைச்சர் ஐயா அறிக்க மட்டும் எழுதிவந்து வாசிக்கிறார் தெரியும் பேப்பெடியள் முன் பக்கத்தில முழுச்செய்தியாக்குவாங்கள் என்டு பாத்தா தெரியும். ஒரு பக்கம் அவர் பேசுறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னாலதான் சத்திய பிரமானம் எடுப்பன் இல்லாட்டி செத்தாலும் எடுக்க மாட்டன் எண்டு கற்பூரம் கொழுத்தி திரிஞ்ச மனுசன் இப்ப சொல்லுது அம்பாந்தோட்டையில இருந்தோ காசுதருகினம் வடக்கு அபிவிருத்திக்கு என்டு சவால் விடுகிறது. பாதுகாப்பு செயலாளர் சொல்லுறார் முதலமைச்சர சந்திக்க இயலாம இருக்கு என்டு என்ன தான் நடக்கிதடாப்பா எனக்கு ஒன்டும் விளங்கிதில்ல சனத்துக்கு எல்லாத்தையும் பாக்க நீலசுத்து. வடமாகாண சபைய நடத்த எங்களோட இணைந்துவாரார் இல்லையெண்டு மகிந்த சொல்லுறார். இங்க பார்த்த ஆளுனர் ஒன்டையும் விடுறார் இல்லையென்டு சொல்லுறாங்கள். ஆளுனர் விடுறேல்ல என்டு சொல்லிப்போட்டு இன்னொரு பக்கம் சொல்லுது அடேய் சரத்பொன்சேகா ஜனாதிபதியா வருவதற்கு கூட்டமைப்பு கைகொடுத்தது தானே அதற்கு பதில் இல்லை. ஒன்டு மட்டும் வெறுமனே வீரமாக பேசிப்பேசியே காலத்த கொண்டு போகப்போறாங்கள் என்டுமட்டும் தெளிவாத்தெரியுது. ஆனால் அரசாங்கம் அவங்கள் தெளிவாக வேலை செய்யிறாங்கள். கரையான் புத்தெடுத்த மாதிரி இதுவேற உயர்பாதுகாப்பு வலயம் என்டு நில அபகரிப்பு செய்தவங்கள், இப்ப கடல் கரை பக்கம் விடுறாங்கள் இல்ல உள்ளுக்க விடுறாங்கள் இல்ல ஏக்கர் கணக்கில எல்லா இடங்களையும் சுவீகரிக்கிறாங்கள்.

இப்ப யாழ்ப்பாணத்தை தொடர்ந்து வன்னியிலயும் போராட தொடங்கியிருக்கு. நல்ல முயற்சி முல்லத்தீவில போராட்டம் நடக்குது நல்லது. போராடாமல் எமக்கு எதுவுமே கிடைக்காது என்பது தமிழச் சமூகம் புரிந்திருக்கு என்பதுதான். ஜனவரியில மாவை துவங்கப்போகிற போராட்டம் மக்களை ஏமாற்றி திசை திருப்பும் முயற்சி.

**"கூரை ஏறி கோழி பிடிக்கமுடியாத மாவை வானம் ஏறி வைகுண்டம் போவாராம்"**

என்டது மாதிரி இங்க கூத்தமைப்பு நாடகங்கள் தொடர்ந்தும் அரங்கேற்றிக் கொண்டு இருக்கிறாங்கள்.

அடைந்தால் தமிழீழம் அடையாட்டி பரலோகம் எண்டு இவங்கள் உசுப்பேத்திவிட்டதால மேடை ஏறி தமது கைகளைக்கிழித்து இரத்தத்தால பொட்டுவைத்த பொடியல் ஆயுதம் ஏந்தி தியாகங்களை செய்தாங்கள் .

அந்தநேரம் மனிசி, பிள்ளைகுட்டிகளைக் கொண்டுபோய் பாதுகாப்பாக இந்தியாவில இருத்திப் போட்டு தாங்கள் பாதுகாப்பாக கொழும்பில இருந்தாங்கள் புலிகள் சுயநிர்ணய உரிமை எண்ட இவங்கள் அதிகாரப்பகிர்வுக்கு தயார் என்று அறிவிச்சாங்கள். புலிகள விதாண்டவாதிகள் என்று கூறி அழிக்க துணை நின்டாங்கள். முள்ளிவாய்க்கால் கடைசிக் கணங்களில் சனங்கள் சாகேக்க கைத்தொலைபேசிகளை அணைத்துவைத்துட்டு குப்புறப்படுத்தவங்கள் உவங்கள். இப்ப திரும்ப வெளிக்கிட்டாங்கள்.

இந்த ஆயிரம் ஆயிரம் இளைஞர்களினதும், மக்களினதும் தியாகத்தால் வந்த சர்வதேச விசாரணையை கூட தங்கட சாதனை எண்டு பிதத்திக் கொண்டு திரிந்தாங்கள்.

சனங்கள் போர்குற்ற விசாரணைக்கு சாட்சியமளிக்க தயாராக இருக்க சனத்தை உற்சாகப்படுத்தி ஐ.நாவுக்கு சாட்சி கொடுக்கவைக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத மாவை தைமாசம் போராடப் போறராம் என்றது மக்கள சாட்சியம் அளிக்கமால் சும்மா படுத்திருங்கோ என்ட வேலைதானே. அப்படியென்டா அரசைக் காப்பாற்றுகின்ற முயற்சி பாருங்கோ.

## நையாண்டியார் பதில்கள்

சி.பானுப்பிரியா
திருவையாறு, கிளிநொச்சி

கேள்வி: தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராஜா ஜனவரியில் இருந்து மீண்டும் போராட்டம் என்று சொல்லியிருக்கிறாரே.

பதில்: சர்வதேச விசாரணைக்கு சாட்சியமளிக்கிறதை குறைக்கிறதற்கான உத்தி பாருங்கோ. மீண்டும் அவர் ஒரு அறிக்கைப் போராட்டத்திற்கு தயாராகி விட்டார் பழையபடி வீரம் கொப்பளிக்கிற அறிக்கைகளை நீங்கள் பார்த்து அதைத் தான் போராட்டம் என்று புரிஞ்சு கொள்ளவேண்டும்.

தி.சிவகுமார்
செட்டிக்குளம் வவுனியா

கேள்வி: ஐ.நா.போர்க்குற்ற விசாரணை தொடர்பாக ஆகோ! ஓகோ! என்று சொல்லிக் கொண்டிருந்த கூட்டமைப்பு இப்பொழுது?

பதில்: ஓமோம் கூட்டமைப்புக்காரர் இந்தா தாங்கள் தான் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தனாங்கள் எங்கட வீட்டு பின் கோடிக்கால தான் வந்தது என்று சொல்லித்தான் முந்திப் பிரச்சாரம் செய்து கொண்டு திரிஞ்சினம். தாங்கள் முக்கியமான ஆவணங்கள் எல்லாம் வைச்சிருக்கிறம் அதை ஐ.நா விட்டை கையளிக்கப் போறம் என்று. இப்ப ஐ.நாவே அறிவித்து விட்டது. விசாராணைக்கு வா என்றால் மூச்சைக் காணேலை.

சி.மரியதாஸ்
குருநகர், யாழ்ப்பாணம்

கேள்வி: யாழ் தேவி வருகின்ற கொண்டாட்டம் தொடங்கியிருக்கின்றதே?

பதில்: யாழ் தேவியை கொண்டு வந்ததில் யார் என் பதில் இப்ப பயங்கரப் போட்டி இருக்கிறது. இந்திய அரசாங்கங்கள் தன்னுடைய சாதனையாக கூறுகின்றது. ஆனால் இலங்கை அரசாங்கமோ மத்திய வங்கிதான் 85 மில்லியன் ரூபா காசை ஒதுக்கி யாழ் தேவியைக் கொண்டு வந்ததாக சொல்கிறது. உண்மையில் யாழ் தேவியை யார் கொண்டு வந்தது என்று இன்னும் தெரியாமல் கிடக்கு வாற மாதம் 13ம் திகதி ஜனாதிபதி வந்து யாழ்ப்பாணத்தில யாழ் தேவியை வரவேற்கப் போறாராம். அதற்கிடையில் நப்பாசையில அமைச்சரும் ஆளுநரும் பளையில இருந்து தாங்களும் ஒருக்கா ரயிலில ஏறிப்பாத்திட்டினம். சனம் இத்தன வருச போராட்டத்தில் முக்கியமான ஒரு பலாபலன் கிடைத்திட்டு என்ற பாணியில கொஞ்சப்பேர் திரியுறாங்கள். இதுக்குத் தானா போராடினோம் அத்தியாவசியமான தேவைகள் நிறைவேறப்படுகின்றது என்பது வேற மக்களது அடிப்படை உரிமைகள் தீர்க்கப்படுகிறது. வேற இதைப் புரிந்து கொள்வது முக்கியம்.

என்.அரியலிங்கம்
காத்தான் குடி, மட்டக்களப்பு

கேள்வி: ஊவா மாகாணசபைத் தேர்தல் என்ன சொல்கின்றது?

பதில்: வெற்றிலையில் கறையான் புற்றரித்தது போன்று அரிக்கத் தொடங்கிவிட்டது உண்மையாகும். யுத்தத்தை காரணம் காட்டி வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை படிப்படியாக தேய்ந்து தான் வருகிறது. குறிப்பாக தமிழ் மக்களின் மீதான அடக்குமுறைகளை முடுக்கி விடுவதன் ஊடாக தெற்கில் வாக்கு கேட்கலாம் என்ற உத்தி பிசு பிசுக்கத் தொடங்கிவிட்டது. மக்கள் தமது அன்றாட வாழ்க்கை பற்றி சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் என்பது அரசுக்கு இந்த முறை ஏற்பட்ட வாக்கு வங்கி வீழ்ச்சியில் தெளிவாகத் தெரிகின்றது. அங்கு அடுத்து ஜனாதிபதித் தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் இது இலங்கை அரசுக்க ஒரு சிவப்பு சிக்னல் மட்டுமே.

# வறுமையால் தனிமைப்படும் நயினாமடு

வவுனியா வடக்கு. நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சிறிய கிராமம் தான் நயினாமடு. 1880க்கு முற்பட்ட காலப்பகுதிகளில் இருந்தே இக் கிராமத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றது சுற்றிவர காடுகளும் சிவப்பு மண், ஒற்றையடி பாதைகள்,முருகன் பிள்ளையார் கோயில்கள் அதனோடு கலந்த இந்தியன் வீட்டுத்திட்டங்களுமே இந்த கிராமத்தின் அடையாளம் ஓரிரு பனை ,தென்னை மரங்களும் சில அரச கட்டிடங்களும் தான் இந்த கிராமத்தின் இருப்பைக்காட்டுகின்றது.

போருக்கு முன்னர் இந்த கிராமம் பலதுயரங்களை சுமந்திருந்தது காடுகளோடு ஒட்டியிருந்ததால் காடுகளின் ஊடாக ஊடுருவும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அச்சுறுத்தல்களால் தொடர்ந்து இடப்பெயர்வுகளை சந்திக்க நேர்ந்திருக்கின்றது. இதனால் பின்னர் ஏற்பட்ட யுத்த இடப்பெயர்வுகளாலும் தமது உடமைகள் எல்லாவற்றையும் தொலைத்து மீண்டும் புதிய வாழ்க்கைப்பாதையை ஆரம்பித்திருக்கின்றார்கள். இன்றும் அந்த மக்கள் பல துயரங்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் போருக்கு முன்னர் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளைவிட இன்று அதிகமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

### கேள்விக்குறியாகும் நிறுவனங்களின் வருகை

இங்கு நிறுவனங்களின் வருகை என்பது தற்போது குறைந்தே காணப்படுகின்றது. போர் முடிவடைந்து மீள் குடியேற்றம் நடைபெற்ற காலப்பகுதியில் பல நிறுவனங்கள் அந்த கிராமத்தை நோக்கி சென்றிருக்கின்றன இவர்கள் மூலம் தான் பொதுக்கிணறுகள் மற்றும் பாதைகள் என்பன புனர்நிர்மானம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்று எந்த நிறுவனங்களும் எட்டியும் பார்ப்பதில்லை. இங்கு பிரதானமாக செயற்பட்டு வந்த Women RDS நிறுவனம் தற்போது தமது செயற்பாடுகளை குறைத்திருக்கின்றது. இதற்கு அவர்களின் பதில்கள் எல்லாம் தம்மிடம் போதிய வளப் பற்றாக்குறை இல்லை என்பதே!

### பாகுபாடு அடிப்படையில் இந்தியன் வீட்டுத்திட்டம்

மீள்குடியேற்றத்திற்கு பின்னர் வருகை தந்த இந்தியன் வீட்டுத்திட்டத்தின் பல பிரச்சினைகளை தோற்றுவித்திருக்கின்றன. 60 குடும்பங்களைக் இக் கிராமம் கொண்டிருந்தாலும் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் வீட்டுத்திட்டம் கொடுக்கப்படவில்லை. குடும்ப எண்ணிக்கையின் அடிப்படையிலும் அரச உத்தியோகத்தர்கள் சாராதவர்களுக்குமே இவ்வாறான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் பகுபாடு அடிப்படையில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டிருப்பதாகவும், தமக்கு வீடுகள் வழங்கப்படவில்லை என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துக்கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

### வறுமையின் தாண்டவம்



வறுமை இவர்களை வாட்டி வதைக்கின்றது. இங்கு இருக்கின்றவர்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியே? விவசாயமும்,அதனோடு ஒட்டிய கூலி வேலைகளுக்கும் சென்றே தமது குடும்ப சுமைகளை சுமக்கின்ற நிலையில் இப்பகுதி மக்கள் இருக்கின்றனர். தற்போது வன்னியில் ஏற்பட்ட வறட்சி இவர்களை மேலும் பாதிப்பிற்கு உள்ளாக்கியிருக்கின்றது. இக்கிராமத்தின் மத்தியில் இருக்கின்ற பெரிய குளத்தை நம்பியே இதுவரைக்கும் விவசாயங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர் தற்போது குளத்தில் சிறிதளவு தண்ணீரும் இல்லை இதனால் விவசாயம் செய்ய முடியாது மாற்று தொழிலை நோக்கி நகரப்புறங்களுக்கோ அல்லது வேறு இடங்களை நோக்கியோ செல்லுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதனால் வறுமையின் கோரம் அதிகரித்திருக்கின்றது.

### வசதிகளற்ற பள்ளிக்கூடம்

இக்கிராமத்தின் மத்தியில் இருக்கும் பாடசாலை தரம் ஐந்து வரைக்கும் இருக்கின்றது. சாதாரணமாக 30 மாணவர்களே கல்வி கற்கின்றார்கள். இந்த மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு இரண்டு ஆசிரியர்கள் மாத்திரமே இருக்கின்றார்கள். அதற்கு மேல் கல்வியை தொடர வேண்டுமாயின் மதியாமடு, புளியங்குளம், சின்னடம்பன் போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கே செல்லவேண்டியிருக்கின்றது. அதிகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இந்த பாடசாலையில் சேர்ப்பதில்லை. காரணம் பாடசாலையில் போதிய வசதிகள் இல்லை. ஆசிரியர் பற்றாக்குறை, கட்டிடப்பற்றாக்குறை, ஒழுங்காக மதிய உணவுகள் வழங்கப்படுவதில்லை, மாணவர்களின் கல்வியில் முன்னேற்றங்கள் இல்லை போன்ற பல பிரச்சினைகள் இந்த பள்ளிக்கூடம் சந்தித்திருக்கின்றது. இதனால் கால் நடையாகவும் அல்லது பேரூந்துகள் மூலமும் வேறு பாடசாலையை நோக்கி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

து.த.தமிழ்

### போதை பாவனையின் அதிகரிப்பு

போருக்கு பின்னர் வன்னியில் அதிகமான இடங்களில் தற்போது போதைப்பொருளின் பாவனை அதிகரித்துக்கொண்டே செல்லுகின்றது. அதேவேளை இந்த கிராமத்தின் மத்தியில் இருக்கின்ற கள் விற்பனை நிலையம் மூலம் பல நெருக்கடிகளை இப்பகுதி மக்கள் சந்திக்கின்றனர். பகல் மற்றும் மாலை வேளைகளில் இந்த இடங்களில் கூடும் இளைஞர்கள் போதையில் ஆபாச வார்த்தைகளில் உரையாடுவது. மற்றும் பாதையால் செல்லும் பெண்களை கேலி செய்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனால் போதைப்பொருளின் பாவனை நாளுக்கு நாள் அதிகரிக்க சமூகவிரோத செயற்பாடுகளும் அதிகரித்துள்ளது

### பல பிரச்சினைகளை தீர்க்க உதவிகளை எதிர்பார்க்கும் மக்கள்

இந்த கிராமம் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றது. கிராமத்தில் இருக்கின்ற அரச மிருக வைத்தியசாலையில் விற்பனை செய்யப்படும் மருந்துகள் பணத்திற்கே விற்பனை செய்யப்படுகின்றது. இத்தோடு இங்கு பணிபுரியும் மருத்துவர் தமிழ் தெரியாதவராக இருப்பதால் மொழிப்பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அத்தோடு மக்களால் வளர்க்கும் கால்நடைகளை அவர் வருகை தந்து பார்ப்பதில்லை. இவ்வாறு பார்க்க வேண்டும் என்றால் அவருக்கான வாகன வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

அத்தோடு இந்த கிராமத்தில் ஆதார வைத்திய சாலை ஒன்று இயங்கி வருகின்றது. இங்கு பணிபுரியும் தாதியர்கள் தமிழ்தெரியாதவர்கள் இதனால் மக்களுக்கும் அவர்களுக்குமிடையிலான மொழிப்பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அத்தோடு பகல் வேளை மட்டுமே செயற்படுகின்ற இவ்வைத்தியசாலை இரவு வேளைகளில் செயற்படுவதில்லை. இதனால் இரவு வேளைகளில் நோய்வாய்ப்படுபவர்களை வவுனியாவோ அல்லது புளியங்குளமோ கொண்டு செல்ல வேண்டியிருக்கின்றது.

மின்சாரம் ஒழுங்காக வழங்கப்படவில்லை. பிரதான பாதையில் இருந்து 1km வரையுமே வழங்கப்பட்டிருக்கின்றது. மற்றைய பகுதிகளுக்கு வழங்கப்படவில்லை. பாடசாலையில் ஏற்ப்பட்டிருக்கும் வளப்பாற்றாக்குறை எவருமே நிவர்த்தி செய்யவில்லை. இராணுவத்தினர் மூலம் யுத்த காலங்களில் அமைக்கப்பட்ட மண் அரண்கள் இன்றும் அவர்களது வயல் நிலங்களில் காணப்படுகின்றது. இதனை அகற்றுவதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை. இவ்வாறு பல பிரச்சினைகளை சுமந்திருக்கின்ற இப்பகுதி மக்கள் அதற்கான மாற்று செயற்திட்டங்களையும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

# ஐ.நா. விசாரணையில் சாட்சியமளிக்க வழிகாட்டும் விடயங்களை வெளியிட்டது

# –தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி–




ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தால் நடாத்தப்படும் விசாரணையில் எப்படி சாட்சியமளிக்கலாம் என்பது தொடர்பிலான தெளிவை ஏற்படுத்துவதற்கு பின்வரும் தகவலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்:

**• மூன்று வகையான சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிக்கலாம்:**

1. இறுதி யுத்தத்திற்கு முன்னர் நடந்த சம்பவங்கள் - ஐ நா விசாரணை உத்தியோக பூர்வமாக 2001 காலப் பகுதியின் பின்னரான விடயங்களே கவனத்தில் எடுக்கும். என்றாலும் இலங்கையில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள உதவும் எந்த சம்பவத்தைப் பற்றிய தகவலும் தமக்கு உதவும் எனக் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் 1948க்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிப்பதில் தடையில்லை.

2. இறுதி யுத்தத்திற்குப் பின்னரான சம்பவங்கள் - ஐ நா விசாரணை உத்தியோகபூர்வமாக 2012 காலப் பகுதியின் முன்னரான விடயங்களே கவனத்தில் எடுக்கும் என்றாலும் இலங்கையில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள உதவும் எந்த சம்பவத்தைப் பற்றிய தகவலும் தமக்கு உதவும் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே இன்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிப்பதற்குத் தடையில்லை.

3. இறுதி யுத்தம் நடைபெற்ற போதான சம்பவங்கள்

**• சாட்சியமளிக்கும் படிவம் தயாரிக்கும் முறை**

சாட்சியங்களை வழங்கவுள்ளவர்கள் எவ்வாறான தகவல்களை வழங்க வேண்டும் என்பது தொடர்பாக ஓர் அறிவுறுத்தலை வழங்கும் நோக்கில் மாதிரிப் படிவம் ஒன்றினை கேள்வி பதில் முறையில் தயாரித்துள்ளோம். அம் மாதிரிப் படிவத்தின் துணையுடன் நீங்கள் அனுப்ப வேண்டிய சாட்சிப் படிவத்தினை நீங்களாகவே தயாரிக்கலாம்.
சத்தியக் கடதாசி முறையில் அல்லது சாதாரண முறையில் சாட்சியமளிக்க விரும்புவோர் கீழே குறிப்பிடப்படும் மாதிரிப் படிவத்தில் "அ" பகுதியில் குறிப்பிடப்படும் பந்தியை பொதுவாக பயன்படுத்தவும்.

அதன் கீழ் விபரங்களை எழுதும்போது நாம் வெளியிட்ட மாதிரிப் படிவத்தில் உள்ள வினாக்களுக்கான விடைகளை மட்டும் வழங்கும் வகையில் உங்களது சாட்சியங்களை எழுதுங்கள். மாறாக வினாக்களையும் எழுதி விடைகளையும் எழுதுவதனை தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடன் சம்பந்தப்படாத வினாக்களுக்கு பதிலளிக்கத் தேவையில்லை.

பூரணமான விபரங்களை உள்ளடக்கி எழுதிய பின்னர் ஓர் சமாதான நீதவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் முன்னிலையில் உங்களது கையொப்பங்களை வைத்து அவர்களது ஒப்பங்களையும் பெற்றக்கொள்ளுங்கள்.

உங்களுக்க சமாதான நீதவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் முன்னிலையில் ஒப்பமிடுவதில் ஏதேனும் பாதுகாப்பு உள்ளிட்ட இடர்பாடுகள் இருப்பதாக நீங்கள் கருதினால் சமாதான நீதவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் முன்னிலையில் இல்லாமல் நீங்களாகவே உங்களது கையொப்பங்களை இட்டு விசாரணையாளர்களுக்கு அனுப்பி வையுங்கள்.

• சாட்சியங்களை தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் வழங்கப்படலாம். நாம் இங்கு வெளியிட்டுள்ள படிவங்களின் வடிவத்தில் உங்களது சாட்சியங்களை அனுப்புவது சாட்சியங்களின் வலிதார்ந்த தன்மையை அதிகரிக்கும். எனினும் உங்களது சாட்சியங்களை ஒரு கடிதம் போன்று கூட எழுதி அனுப்புவதில் எந்தவித தவறும் இல்லை.

• தாழ்களில் எழுதப்பட்ட உங்களது சாட்சியங்களை ஸ்கான் செய்து மின்னஞ்சல் மூலமாக: **oisl_submissions@ohchr.org** என்ற முகவரிக்கோ அல்லது **OISL, UNOG-OHCHR, 8-14 Rue de la Paix, CH-1211 Geneva 10, Switzerland** என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

• சாட்சியமளிப்பதற்கான இறுதித் திகதி: 30 அக்டோபர் 2014 . இத்திகதிக்கு முன்னதாக சாட்சியங்களை ஐ.நா விசாரணைக்குழுவுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

• மேலதிக ஆலோசனைகளுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இல 43, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள எமது கட்சி அலுவலகத்தை நாடலாம். தொலைபேசி எண்: 0212223739, 0773024316

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தலைவார்

செ.கஜேந்திரன்
பொதுச்செயலாளர்

## ஐ.நா விசாரணைக்கு சாட்சியமளிக்க விரும்புபவர்களுக்கு வழிகாட்டும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள ஐ.நா விசாரணைக்கான மாதிரிப் படிவம்

### சத்தியக்கடதாசி


**பகுதி "அ"**

........................என்னும் முகவரியைச் சேர்ந்த........................................................ (பெயர்) ..............................வயது........................சமயம் ஆகிய நான் உண்மையாகவும், நேர்மையாகவும், பயபக்தியுடனும் வெளியரங்கப்படுத்தி உறுதிப்படுத்தி/சத்தியம் செய்து செய்துகொள்ளும் சத்தியக்கூற்றாவது:–

**பகுதி "ஆ"**

1. நான் கீழே விபரிக்கப்படும் சம்பவத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்/கீழே விபரிக்கப்படும் சம்பவத்தை நேரடியாகக் கண்ணுற்றவர். (தேவையற்றதை வெட்டிவிடவும்)
2. பாதிப்பு/சம்பவத்தின் தன்மை.
(பாதிப்பு என்னும் போது பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும் இனக்கலவரம் போன்ற வன்செயலில் கொல்லப்படுதல், காயமடைதல், சொத்துக்களை இழத்தல், சுட்டுக் கொல்லப்படுதல், விமானக் குண்டுத்தாக்குதல் அல்லது செல்தாக்குதலில் கொல்லப்படுதல், காயமடைதல், சொத்துக்களை இழத்தல், கைதுசெய்யப்படுதல், கடத்தப்படுதல், காணாமல் போதல், சித்திரவதைக்கு உள்ளாக்கப்படல், பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்படுதல், பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படல், உணவு, மருத்துவம் இன்மையால் பாதிக்கப்படல், வாழ்விடங்கள் அபகரிக்கப்படுதல், வணக்கஸ்தலங்கள், நூல் நிலையங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் அழிக்கப்படல்)
3. பாதிப்பு /சம்பவம் யாரால் செய்யப்பட்டது?..........................................................
(இராணுவம்/கடற்படை/விமானப்படை/பொலீஸ் அல்லது காடையர்கள் /வேறு ஆயுதக்குழுக்கள்)
4. பாதிப்பு/சம்பவம் நடைபெற்ற இடம், கிராம சேவகர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்டம், நேரம், திகதி
5. அச்சம்பவத்தில் எத்தனைபேர் பாதிக்கப்பட்டனர்?
   5.1. கொலை செய்யப்பட்டவர்கள் ..................................
   5.2. காயமடைந்வர்கள் ..................................
   5.3. காணாமல் போனவர்கள் ..................................
6. பாதிக்கப்பட்டவர்களின்விபரம் தெரியுமெனின் அவர்களது விபரங்கள்.
(முழுப் பொயர், தந்தையின் பெயர், தேசிய இனம், பால் (ஆண், பெண்), சமயம், பிறந்ததிகதி, வயது, முகவரி, கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்டம், தொழில், திருமணமானவரா, கற்பமானவரா, ஆள் அடையாள ஆவண இலக்கம், இந்த ஆவணம் வழங்கப்பட்ட திகதி, இந்த ஆவணம் வழங்கப்பட்ட இடம் உள்ளிட்ட உங்களுக்கு தெரிந்த விபரங்கள் அனைத்தையும் குறிப்பிடவும்.
7. அச்சம்பவத்தில் சொத்துக்கள் அழிக்கப்பட்டிருப்பின் அவை பற்றிய விபரம்?
8. எறிகணை அல்லது விமானத் தாக்குதலில் பாதிக்கப்பட்டிருப்பின், எத்தகைய குண்டினால் பாதிப்பு ஏற்பட்டது (மோட்டார்குண்டா, ஆட்லறிசெல்லா, பல்குழல்குண்டா, கொத்துக்குண்டா, இரசாயனக் குண்டா) பாதிக்கப்பட்டவர்கள் எரிகாயங்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டனரா? ஆம் எனின் அதற்கு காரணம் இரசாயனக் குண்டென உங்கால் கூற முடியுமா?
9. தாக்குதலை நடாத்தியவர்கள் யார்? சரியாகத் தெரியவில்லை எனின் யார் என்று சந்தேகிக்கின்றீர்கள்? அவ்வாறு சந்தேகிப்பதற்கான காரணம் என்ன? தாக்குதல் நடாத்திய திசையில் நிலை கொண்டிருந்தவர்கள் யார்?
10. பாதிக்கப்பட்டவர் கட்டத்தப்பட்டடோ சட்டவிரோதமாக கைதுசெய்யப்பட்டோ, சட்டத்திற்குப் புறம்பாக கொல்லப்பட்டோ இருப்பின் அக்குற்றத்தைப் புரிந்தவர்கள் யார்?
(இராணுவத்தினரா/கடற்படையினரா/விமானப்படையினரா/பொலீசாரா/வேறு ஆயுதக் குழுக்கள்) வேறுதரப்பினர் எனின் யார் எனக் குறிப்பிடவும்.
11. குற்றத்தைப் புரிந்தவர்கள் சிவில் உடையிலா /இராணுவ உடையிலா காணப்பட்டனர்? ஆயுதங்களை வைத்திருந்தனரா? எவ்வகையான ஆயுதங்களை வைத்திருந்தனர்? வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதா? (ஆம்/இல்லை) ஆம் எனின் வாகனத்தின் இலக்கம், நிறம் உள்ளிட்ட விபரம்
12. குற்றத்தைச் செய்தவர்களை அடையாளம் காணமுடியவில்லை எனின் யார் என்று சந்தேகிக்கின்றீர்கள்? சந்தேகிப்பதற்கான காரணம் என்ன?
13. பாதிக்கப்பட்டவருக்கு ஏற்கனவே மிரட்டல் விடுக்கப்பட்டிருந்ததா? ஆம் எனின் யாரால் எப்போது எவ்வாறு உள்ளிட்ட விபரங்களை குறிப்பிடவும்
14. சம்பவத்தினை நேரில் கண்டசாட்சியங்கள் உண்டா? ஆம் எனின் அச்சாட்சிகளின் பெயர் முகவரியைக் குறிப்பிடவும்.
15. பாதிப்பு/சம்பவம் தொடர்பில் முன்னர் எங்காவது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதா?

(23 ஆம் பக்கம் பார்க்க)



**கேள்வி : அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிற்குச் சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தது. இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன? இந்தப் பேச்சுவார்த்தை பலனளிக்கக் கூடியதாக அமையுமா?**

**பதில்:** இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்தியா ஓர் முக்கியமான நாடாகும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்திய அரசுடன் தமிழ் மக்கள் நெருங்கிய உறவைப்பேண வேண்டியது அவசியமாகும். ஆனால் அந்த உறவு எப்படிப்பட்டதாக அமையவேண்டும் என்பதிலேயே பிரச்சினை இருக்கிறது.

பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து விடுபட்ட காலம் தொடக்கம் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எவ்வாறு அமைந்திருந்தது என்றுபார்ப்போமாயின், இந்தியாவின் நலனில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஓர் வல்லரசு அயல் நாடுகளில் இருப்பைக் கொண்டிருக்கக்கூடாது என்பதே இந்தியாவின் கொள்கையாக அமைந்திருந்தது. அந்த வகையிலேயே இலங்கை தொடர்பிலான பல பிரச்சினைகளில் இந்தியாவின் செயற்பாடு அமைந்திருந்தது.

குறிப்பாக 80களில் இலங்கையில் பனிப்போர் நிலவிய காலகட்டத்தில் இந்தியாவின் செயற்பாடு இவ்வாறு அமைந்திருந்தது. அதாவது, அமெரிக்கா சார்ந்த வெளிவிவகாரக் கொள்கையினைக் கடைப்பிடிக்க வேண்டிய

# சர்வதேச அனுசரணை இரு
# பூர்வமான பேச்சுக்களை ந

தேவைப்பாடு இந்தியாவிற்கு இருந்தது. தன்னுடைய ஆதிக்க வட்டத்திற்குள் இலங்கையைக் கொண்டுவரவேண்டும் என்று இந்தியா முயற்சித்திருந்தது. 80களில் நிலவிய ஆயுதப்போராட்டத்தைப் பலப்படுத்தி இலங்கைக்கு அழுத்தத்தைப் பிரயோகித்திருந்தது. இதற்கமைய அக்காலத்தில் ஜனாதிபதியாக இருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்தியாவிடம் கோரியிருந்தார். அதற்கான ஆவணமாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமைந்திருந்தது. இல்ங்கை இந்திய ஒப்பந்தத்தின் உண்மையான நோக்கங்கள் அதன் இணைப்புகளில் காணப்படுகின்றன. ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கும் அப்போதைய இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் இதனைப் பதிவு செய்துள்ளன.

இந்தியாவுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் எந்த ஒரு மூன்றாம் தரப்பு நாடும் இலங்கையில் கால் பதிக்கமுடியாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தியாவின் அனுமதியுடனேயே இலங்கை விடயங்கள் கையாளப்படவேண்டும் என்ற கருத்து அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்னர் இலங்கைக்கு இந்தியா கொடுத்த அழுத்தங்களைத் தொடர வேண்டிய தேவை இருக்கவில்லை.

தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தைப் பயன்படுத்தியே இலங்கைக்கு இந்த அழுத்தத்தை இந்தியா கொடுத்திருந்தது. தமிழ் மக்களைத் தொடர்ந்தும் இந்தியா தனது தேவைக்காகப் பயன்படுத்தியது. தமிழ் மக்களுக்கு எதையோ வழங்கப்போவதாகக் காட்டிக் கொண்டு இலங்கை அரசை முழுமையாகத் திருப்திப்படுத்தும் வகையிலேயே இந்தியாவின் செயற்பாடு அமைந்திருந்தது. அந்தவகையிலேயே இந்த 13வது திருத்தமும், மாகாணசபையும் அமைந்திருந்தன.

ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரத்தைப் பகிரமுடியாது. மாகாணசபையில் ஆளுநரின் கைகளில்தான் அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. அந்த ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சரும், மாகாண அமைச்சர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவே பார்க்கப்படுகின்றனர்.

அவர்கள் தாங்களாக முடிவெடுத்து தன்னிச்சையாக எதையுமே செய்யமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. மாகாணத்தின் நிதி சம்பந்தமான விடயங்களும் ஆளுநரின் அனுமதியின்றி விவாதிக்கக் கூட முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

**கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா செல்லமுன்னர் அரசுடனேயே முதலாவது பேச்சு நடத்தியிருக்கவேண்டும் என்று இலங்கை அரசு குறிப்பிட்டிருந்தது. அது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

**பதில்:** இலங்கை அரசானது சிங்களபௌத்த தேசியவாதப் போக்குடையது. அதன் அடிப்படையிலேயே அரசின் நிகழ்ச்சிநிரல் அமைந்திருக்கும். இதனை எதிர்க்கும் எந்தத் தரப்பினருக்கும் அரசுடன் பேச்சு நடத்தி எதனையும் சாதிக்க முடியாது. இது தமிழ் தரப்பினராயினும் சரி முஸ்லிம் தரப்பினராயினும் சரி, இது சாத்தியப்படுவதில்லை. இதனால் அரசுடன் தமிழ்த் தரப்பு மாத்திரம் பேசி எந்தப் பிரயோசனமும் இல்லையென்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம். இதுதான் கடந்த 60 வருடங்களாக நடந்துள்ளது. இந்நிலைமை குறித்து அனுபவ ரீதியில் எமக்கு நன்கு தெரியும்.

த.தே.கூ. சர்வதேசத்தை அணுகுவது சரியான தீர்மானமாகும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசுடன் பேச்சு நடத்துவதாயின் சர்வதேசத்தின் அனுசரணை இருந்தால் மட்டுமே ஆக்கபூர்வமான பேச்சுகளை நடத்தமுடியும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

> **தமிழ் மக்களைத் தொடர்ந்தும் இந்தியா தனது தேவைக்காகப் பயன்படுத்தியது. தமிழ் மக்களுக்கு எதையோ வழங்கப்போவதாகக் காட்டிக் கொண்டு இலங்கை அரசை முழுமையாகத் திருப்திப்படுத்தும் வகையிலேயே இந்தியாவின் செயற்பாடு அமைந்திருந்தது. அந்த வகையிலேயே இந்த 13வது திருத்தமும், மாகாண சபையும் அமைந்திருந்தன.**

**கேள்வி: இனப்பிரச்சினை தொடர்பில் சர்வதேச மத்தியஸ்தத்துடனேயே அரசுடன் பேச்சு நடத்தப்படும் என்று இரா.சம்பந்தன் எம்.பி. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மாநாட்டில் தெரிவித்திருந்தார். இது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

**பதில்:** இலங்கையில் இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர் உள்ளனர். இனப்பிரச்சினையை உருவாக்கிய இலங்கை அரசு ஒரு தரப்பு. அதேபோன்று அரசினால் தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்ட தீங்குகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் தமிழ் இனம் மற்றைய தரப்பு. ஆகவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இவ்விரு தரப்பினரும் கட்டாயம் பேச்சு நடத்தியே ஆக வேண்டும். ஆனால், அதிலுள்ள கேள்வி என்னவெனில், இனப்பிரச்சினை தொடர்பில் நேரடியாக இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதா?

அல்லது நடுநிலைமை வகிக்கக்கூடிய 3ஆம் தரப்பினரை வைத்து பேச்சு நடத்துவதா? என்பதேயாகும்.

எங்களைப் பொறுத்தவரை நடுநிலைமை வகிக்கக்கூடிய சர்வதேச தரப்பினரை வைத்துத்தான் பேசசுக்கள் நடத்த வேண்டும். அப்போதுதான் இலங்கை அரசின் ஏமாற்றல்களும் தமிழ்த் தரப்பின் நியாயங்களும் சர்வதேச சமூகத்துக்குத் தெரியவருவதுடன், இலங்கையிலுள்ள உண்மை நிலவரமும் தெளிவாகும்.

**கேள்வி: தமிழர் உரிமைகளுக்காக அகிம்சைப் போராட்டம் தொடங்கவுள்ளதாக தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார். இது நடைமுறை ஆர்வமுள்ள நேர்மையான கருத்து என கருதுகிறீர்களா?**

**பதில்:** நாங்கள் எமது உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்கு ஒருபோதும் தயாரில்லை. அதேவேளை, ஆயுதம் ஏந்திப் போராடும் தரப்பாகவும் நாங்கள் இல்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனநாயக ரீதியில் செயற்படும் ஓர் அமைப்பு. அதைப்போன்றுதான் த.தே.கூட்டமைப்பும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் ரீதியாகத்தான் அணுகவேண்டியுள்ளது. அதற்காக வேண்டி மக்கள் மயப்படுத்தப்பட்ட ஜனநாயக போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். இதுதான் எமது நிலைப்பாடு.

தமிழர் உரிமைகளுக்காக அகிம்சைப் போராட்டம் தொடங்கவுள்ளதாக சேனாதிராஜா குறிப்பிட்டிருந்த கருத்தை வரவேற்கின்றோம். ஆனாலும் இக்கருத்தையே கடந்த ஐந்து வருடங்களாக சேனாதிராஜா உட்பட த.தே.கூ. அங்கத்தவர்கள் கூறி வந்துள்ளனர். அதற்கான காத்திரமான போராட்டங்கள் எதனையும் முன்னெடுக்கவுமில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டங்

# ருந்தால் மட்டுமே ஆக்க நடாத்தமுடியும்.

**-கஜேந்திரகுமார் பொன்னம்பலம்-**

களை முன்னெடுக்கும்போது அதற்குப் போட்டியாக போராட்டங்களை நடத்தினார்களே தவிர, திட்டமிட்டபடி ஒரு தொடர்ச்சியான போராட்டம் எதனையும் த.தே.கூ. முன்னெடுக்கவில்லை. எங்களால் எடுக்கும் பட்சத்தில் அதனைக் குழப்பும் வகையிலேயே செயற்பட்டு வந்தனர்.

சேனாதிராஜா புதிய தலைவர் என்ற வகையில் ஒரு கருத்தை முன்வைத்துள்ளார். அவர் தெரிவித்த கருத்தின் பிரகாரம் செயற்படப்போகின்றார்களா? இல்லையேல் கடந்த ஐந்து வருடங்களாக ஏமாற்றியது போன்று தொடர்ந்தும் ஏமாற்றப்போகிறார்களா? இதனை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**கேள்வி: இலங்கை விடயத்தில் கிறிஸ் தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறும் அராஜகங்கள் குறித்து விசாரணை நடத்துவதாக ஐ.நா. மனித உரிமை புதிய ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் மறக்கப்படுமா? தமிழர்கள் என்ற சொற்பதம் கூட அவர்களது அறிக்கைகளில் இல்லையா?**

**பதில்:** இலங்கையில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர் களுக்கும் எதிராக இடம்பெற்றுவரும் அநியாயங்களைக் கவனத்தில்கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் விசாரணை நடத்துவதாகத் தெரிவித்துள்ள கருத்தை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால், எமக்குள்ள ஆதங்கம் என்னவன்றால், தமிழினத்தின் பிரச்சினையை மட்டும் பெயர் குறிப்பிட்டு அடையாளப்படுத்தவில்லை. ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம், 2013 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தமிழர் என்ற ஒரு வார்த்தையேனும் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. அதேவேளை, இதில் பாதிக்கப்பட்டவர்கள் குறிவைக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதை மறைத்துள்ளார்கள்.

ஆனால், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர் களின் பிரச்சினைகளை ஐ.நா. மனித உரிமைப் பேரவை மிகத் தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளது. ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிவேற்றப்பட்ட தீர்மானங்களை நாங்கள் எதிர்த்தமைக்கான காரணம் அதுவே. மேலும் 65 வருடங்களாகத் திட்டமிட்ட வகையில் இன அழிப்புக்கு முகம் கொடுத்த தமிழ் மக்களின் பிரச்சினைகளை மாத்திரம் இனப்பிரச்சினை என்ற வடிவத்தில் காட்டாது பாதிக்கப்பட்ட தரப்பினரை மறைத்துள்ளமை எமக்குப் பெரும் ஏமாற்றமாகும்.

**கேள்வி: ஐ.நா. மனித உரிமைப் பேரவை யினால் நிவேற்றப்பட்ட தீர்மானங்கள் இனி வருங்காலங்களிலாவது தமிழர்களுக்கு சாதகமாக அமையும் என்று எதிர்பார்க் கிறீர்களா?**

**பதில்:** ஐ.நா. மனித உரிமைப் பேரவையினால் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் மற்றும் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாங்கள் கடுமையாக விமர்சித்தோம். அதற்குக் காரணம், இந்தத் தீர்மானங்களில் தமிழர் என்ற வார்த்தையே இல்லை. போர்க்குற்றங்கள் பற்றி மட்டுமே குறிப்பிடப் பட்டதே தவிர, இனப்பிரச்சினை பற்றி எதுவும் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. அதுமட்டுமன்றி, உள்ளக விசாரணை யைத்தான் வலியுறுத்தியது. இலங்கை அரசே குற்றவாளி யாக இருக்கும்போது அதனிடமே குற்றங்களை விசாரணை செய்யுமாறு குறிப்பிடுவது எந்தளவுக்கு நியாயம்? இவ்வாறான குறைபாடுகள் இத்தீர்மானங் களில் இருந்தமையால்தான் இவற்றை நாங்கள் விமர்சித்தோம்.

> **நடுநிலைமை வகிக்கக்கூடிய சர்வதேச தரப்பினரை வைத்துத்தான் பேச்சுக்கள் நடத்த வேண்டும். அப்போதுதான் இலங்கை அரசின் ஏமாற்றல்களும் தமிழ்த் தரப்பின் நியாயங்களும் சர்வதேச சமூகத்துக்குத் தெரியவரு வதுடன், இலங்கையிலுள்ள உண்மை நிலவரமும் தெளிவாகும்.**

2014 ஆம் ஆண்டு நிவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஒரு சர்வதேச பொறிமுறையை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் உருவாக்கினர். இதை நாங்கள் ஓரளவு வர வேற்ற போதிலும் இந்தப் பொறிமுறையிலும் வெறுமனே சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்து மாத் திரமே விசாரிக்கப்படவுள்ளன. ஆனால், போர்க்குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றம், இனப்படுகொலை போன்ற சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் விசாரிக்கப் படாமையால் இத்தீர்மானத்தையும் நாங்கள் விமர்சித் தோம். இந்நிலையில், சென்ற மாதம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருடைய அலுவலகம் அறிக்கை யொன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையில் சர்வதேச மனித உரிமை சட்டமீறல்கள் மட்டுமல்லாது, சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பாகவும் விசாரணை நடத்துவதாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதுமட்டுமன்றி, 2002 -2011 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற குற்றச்செயல்களை விசாரணை செய்வதாகவும், இந்த விசாரணைகளின்போது முன் நடந்த சம்பவங்கள் தொடர்புபடுமாயின் அவற்றையும் விசாரணை செய்யவுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

இந்த அறிக்கை எமக்குப் பூரண நம்பிக்கை அளித்துள்ளமையால் நாங்கள் இந்த விசாரணைக்குத் தேவையான சாட்சியங்களைத் திரட்டிக் கொடுப்பதற்கான முயற்சியை எமது கட்சி மூலம் முன்னெடுக்கின்றோம். எமது இனத்துக்கு எதிராக நடைபெற்ற அநியாயங்கள் அனைத்தையும் ஆவணப்படுத்தும் வகையில் தகவல்களைத் திரட்டி வருகின்றோம்.

**கேள்வி: காணாமல் போனவர்களின் தகவல்களைத் திரட்டுவதற்காக அரசினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு எந் தளவுக்கு நியாயமாக நடந்து கொள்ளும்?**

**பதில்:** காணாமல்போனவர்களின் குடும்பத்தினர் காணாமல்போனவர்கள் உயிரோடு எங்காவது இருப்பார்கள் என்று கருதுவது மட்டுமல்ல, அவர் களை மீட்டெடுப்பதற்காக என்ன சவால் அச்சுறுத்தல் வந்தாலும் தீவிரமாகச் செயற்படுவதற்கு தயாராக இருக்கின்றனர். இந்த செயற்பாடு அச்சுறுத்தலாக அமையும் என்பதால் திட்டமிட்ட வகையில் அவர்களைப் பயப்படுத்தி அவர்களது செயற்பாடுகளையும் போராட்டங்களை யும் முடக்க வேண்டும் என்று தெளிவான திட்டத்துடன் இலங்கை அரசு உள்ளது. இதற்கமையவே சமீபத்தில் நடை பெற்ற காணாமல்போனவர்கள் தொடர்பான ஒன்றுகூடலிலும் பிரச்சினைகள் ஏற்பட்டன.

காணாமல்போனவர்களது உறவினர்களின் தீவிர மான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அரசு, இன்னொரு பக்கத்தில் அவர்களுக்கு காணாமல்போனவர்கள் தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் முயற்சிக்கின்றது.

உண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்குழு இலங்கையில் பெரியளவு ஆதிக்கம் செலுத் தாமல் இருப்பதற்காகவே அரசு இந்த உள்ளக விசாரணைக் குழுவை நியமித்துள்ளது.

எங்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு குற்ற வாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அது மேற்

> காணாமல்போனவர்களின் குடும்பத்தினர் காணாமல்போனவர்கள் உயிரோடு எங்காவது இருப்பார்கள் என்று கருதுவது மட்டுமல்ல, அவர்களை மீட்டெடுப்பதற்காக என்ன சவால் அச்சுறுத்தல் வந்தாலும் தீவிரமாகச் செயற்படுவதற்கு தயாராக இருக்கின்றனர்.

**கேள்வி: ஐ.நாமனித உரிமைப் பேரவையின் விசார ணைக்குழுவிற்கு சாட்சியம் அளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?**

**பதில்:** சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இடம் பெற்றுக்கொண்டுதான் இருக் கின்றன. மக்களின் பாதுகாப்புப் பிரச்சினை தொடர்ந்தும் இருந்துகொண்டுதான் வருகிறது. எனவே, சாட்சியம் அளித் தால் தான் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்படும் என்று கூறமுடியாது. உண்மையைத் தெரிவிக்கின்ற எந்த ஒரு மகனுக்கும் எதிராக எவரும் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கமுடியாது. இது அரசைக் கவிழ்க்கின்றதோ அல்லது புரட்சியை செய்கின்ற விடயமோ அல்ல. இந்த அரசு ஐ.நாவின் சாசனங்களுக்கு அமைவாக செயற்படுவதாகக் கையொப்பம் இட்டுள்ளது. ஐ.நா மனித உரிமைப்பேரவையின் ஒவ்வொரு அமர்விலும் இந்த அரசு கலந்துகொள்கின்றது.

ஆனால் தன்னுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு மாத்திரம் மாற்றுக்கருத்தை தெரிவிக்கின்றது. எனவே ஐ.நா விசாரணைக்கு சாட்சியம் அளிப்பவர்களுக்கு எதிராக சட்டபூர் வமான நடவடிக்கைகளை எடுக்கமுடியாது. ஒருசிலர் மாத்திரம் இவ்வாறு சாட்சியம் அளித்தால் அவர்களுக்கு பாதுகாப்புத் தொடர்பில் பிரச்சினை ஏற்படலாம். அதுவும் அவர்கள் பகிரங் கமாக சாட்சியம் அளித்தால் தான் இவ்வாறானபிரச்சினை ஏற்படும். இரகசியமாக சாட்சியம் அளித்தால் ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்பில்லை. இரகசியமாக சாட்சியம் அளிப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதனைக் கையாள்வதால் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும்.

# காணாமல் போனவர்களைத் தேடுவோரின் கண்ணீர்

-தமிழ்நதி-

ஜனநாயக மீறல்களின் சுட்டிகளில் ஒன்று காணாமல் போதல். இலங்கை, ஈராக், ஈரான், பாகிஸ்தான், சூடான் போன்ற தேசங்கள் காணாமல் போதல் விடயத்தில் உலகளவில் அடிக்கடி பேசப்படும் நாடுகளாகும். இந்தத் தேசங்களில் நிகழும் உள்நாட்டுப் போர்கள், சிறுபான்மை பெரும்பான்மை இனங்களுக்கிடையிலான முரண்கள், ஆயுதக் குழுக்களுக்கிடையிலான சச்சரவுகள் போன்றவற்றால் மனிதக் கடத்தல்கள், காணாமல் போதல்கள் நடக்கின்றன. மிரட்டி வைப்பதற்கும், அரசுக்கு அல்லது பெரும்பான்மையினத்துக்கு எதிராக கிளர்ந்தெழுபவர்களை இல்லாதொழிக்கவும் இனங்காணப்படுபவர்கள் கடத்திக் காணாமல் செய்யப்படுகின்றனர். இலங்கையில் இதற்கு அதிகளவான அனுபவங்கள் உண்டு.

காணாமல் போதல் என்கின்ற விடயம் சர்வதேச அளவிலான குற்றமாக இருக்கின்றபடியால், உடனடியாகவே ஐ.நா உள்ளிட்ட உலக கண்காணிப்பாளர்

> *சாட்சி சொல்லத் தயாராகுபவர்களுக்கு புலனாய்வாளர்கள் கொடுக்கும் குடைச்சல்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. விசாரணைக்குழுவின் விசாரணைக்கு போனால் தேவையற்ற விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும், அன்றைய தினமே எங்காவது தூர இடத்தில் இருக்கும் தமது அலுவலகத்துக்கு வரும்படியெல்லாம் எச்சரிக்கை விடப்படும்.*

களின் கண்களில் சிக்கிவிடுகின்றது. எனவே அவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் கடத்தலில் ஈடுபடுகின்ற நாடுகள் இருக்கின்றன. அதற்காகவும், பிள்ளைகளை, கணவன்மாரை பறிகொடுத்த உறவுகளின் கண்ணீரை, போராட்டத்தை சமாளிக்கவும் அரசுகள் கையிலெடுத்திருக்கும் ஒரு பொறிமுறைதான் காணாமல் போனோரை கண்டறியும் விசாரணைக்குழு. இந்தக் குழுவுக்கு நடவடிக்கை எடுக்கும் எந்த அதிகாரமும் கிடையாது. சம்பந்தப்பட்ட அரச தரப்பினால் நியமிக்கப்பட்டதும், அரசு பரிந்துரைக்கும் நாளொன்றில் காணாமல் போனவர்களின் உறவுகளை அழைத்து விசாரணைகளை நடத்துவதும், அவர்கள் தரும் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வது மாத்திரமே அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வேலையும், அதிகாரங்களும். இலங்கையிலும் இது போன்ற காணாமல் போனோர் தொடர்பில் விசாரிக்க ஒரு குழு உண்டு. முதற்கட்டமாக அதன் விசாரணைகள் கிளிநொச்சியில் முடிந்திருக்கின்றது. ஒரு வருடத்துக்கு மேலாக நீடித்திருக்கும் இந்தக் குழுவின் விசாரணைகளில் இதுவரை மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை? சாட்சியமளித்தவர்களின் பிள்ளைகள், கணவன்மார்கள் யாரையாவது இந்தக் குழு கண்டுபிடித்துள்ளதா? இதற்கு விடைகள் யாரிடமும் இல்லை. விசாரிப்பது மட்டும்தான் இதுமாதிரியான குழுக்களில் பரீட்சயப்பட்ட தமிழர்கள் நன்குணர்வர். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்திலும், அதற்கு முன்னரான கலவரங்களின் காலத்திலும் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்தக் குழுக்களின் விசாரணைகளின் முடிவு என்ன? அவை யாரையெல்லாம் கண்டு பிடித்துக் கொடுத்தன. அல்லது சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வாங்கிக் கொடுத்தன? இப்போது நடக்கின்ற விசாரணைகளிலும், இதற்கு முன்னர் நடந்த விசாரணைகளிலும் தம் பிள்ளைகளைக் கடத்தியவர்களின் பெயர், பதவி நிலை, நிறம் என எல்லாவற்றையுமே மக்கள் விசாரணையாளர்களிடம் சொன்னார்கள். அவர்கள் சொல்லும் எல்லாவற்றையும் எழுதிக் கொண்டார்கள். ஆனால் அதனால் விளைந்ததென்ன?



விசாரணையாளர்களிடம் சாட்சி சொல்லத் தயாராகும் சாட்சியாளர் ஒருவர் படும் துயரம் மிகப்பெரியது. எங்கோ ஒரு எல்லைக்கிராமத்திலிருந்து வந்து மணிக்கணக்காகக் காத்திருந்து தனது சாட்சியத்தை அளிக்கவேண்டியிருக்கின்றது. அதற்குள் பதிவு, தகவல் திரட்டல் என்கிற அரச அலுவலகங்களின் அல்லோலங்களுக்கு உட்பட வேண்டியுமிருக்கிறது. இதற்கிடையில் சாட்சி சொல்லத் தயாராகுபவர்களுக்கு புலனாய்வாளர்கள் கொடுக்கும் குடைச்சல்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. விசாரணைக் குழுவின் விசாரணைக்கு போனால் தேவையற்ற விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும், அன்றையதினமே எங்காவது தூர இடத்தில் இருக்கும் தமது அலுவலகத்துக்கு வரும்படியெல்லாம் எச்சரிக்கை விடப்படும். உயிரைப் பணயமாக வைத்து விசாரணைக்குப் போனால் அவர்கள் திருப்பித் திருப்பி கேட்கும் கேள்விகள் கண்ணீரையே வரவழைத்து விடுகின்றன. தமது பிள்ளைகளின் இழந்த துயரும், கேள்விக்குப் பதிலளிக்க முடியாத பதற்றமும் அழுகையை கொண்டு வருகின்றன. சில துளி கண்ணீரை விசாரணை அறைக்குள் சிந்திவிட்டு, எழுந்து செல்வதே சாட்சியாளர்களுக்கு கிடைக்கும் உயரிய பதில். ஆனால் தமது பிள்ளைகளை, கணவன்மாரை எப்படியாவது மீட்டுத்தாருங்கள் என்கின்ற கோரிக்கையை அதியுச்சமான நம்பிக்கையுடன், அவர்கள் முன் வைத்துவிட்டே செல்கின்றனர். கண்ணீரோடு ததும்பும் அந்த நம்பிக்கைகளுக்கு காணாமல் போனோர் விசாரணைக் குழுக்கள் சொன்ன பதில்களேதும் உண்டா? அவர்கள் கேட்பதெல்லாம் எம் பிள்ளைகள் உயிரோடு இருக்கின்றனரா? இல்லையா என்பதை மட்டும்தான்.

இதைவிட காணாமல் போனவர்களின் உறவுகள் சந்திக்கும் பல்வேறு இடர்கள் இருக்கின்றன. இவர்களின் பிரச்சினையை அறிந்துகொண்ட முகம் தெரியாதவர்களும், பக்கத்து வீட்டுக்காரனும் கூட ஏமாற்றத் துணிகிறான். உங்கள் பிள்ளைகளை அந்த முகாமில் பார்த்தேன், இந்த முகாமில் பார்த்தேன், மீட்டு வருவதாயின் இவ்வளவு காசு வேண்டும் என்று லட்சக் கணக்கான பணம் கேட்கின்றனர். வெளியில் யாருக்கும் சொன்னால் சம்பந்தப்பட்ட அதிகாரிக்குப் பிரச்சினை வரும் எனவே இதனை ரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள் என்றும் சொல்லிவிடுகின்றனர். அந்த அநாமதேய நபர்களை நம்பி பணத்தைக் கொடுத்தால், அவர்களைத் திரும்பி கண்டுபிடிக்கவே முடியாது. பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு ஓடி மறைந்து விடுகின்றனர். கண்ணீரிலும் ஒரு சம்பாத்தியம் உள்ளதென்பதை இலங்கை மட்டுமே கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறது!

சோதிடர்களும், குறிசொல்லிகளும் காணாமல் போனவர்களுக்கு அதீத நம்பிக்கை தரும் நட்சத்திரங்களாக இருக்கின்றனர். உங்கள் பிள்ளைகள் இந்தத் திசையில், இப்படியெல்லாம் இருக்கின்றார்கள். அவர் இன்னமும் உயிரோடுதான் சிறையில் இருக்கிறார். விரைவில் உங்களிடம் தோன்றுவார். எனவே நான் சொல்லும் காணிக்கைகளைச் செய்யுங்கள் என்று அவரும் ஒரு தொகைப் பணத்தைக் காணாமல் போனவர்களின் உறவிகளிடம் உழைத்துக் கொள்கிறார். ஆனால் பிள்ளைகள் சோதிடர் சொன்ன நாளில் வீடு திரும்புவதுமில்லை. திரும்ப அந்த சோதிடரைக் காணக்கிடைப்பதுமில்லை.

உண்மையில் இலங்கையில் காணாமல் போனவர்கள் திரும்பி வந்தனர் என்பது பெரும் ஆச்சரியங்களுள் ஒன்றான விடயம். அவர்களைத் தேடியலையும் போராட்டத்தின் நீட்சியும் மிகப் பெரியது. எல்லா காலங்களிலும் காணாமல் போதல்கள் நடந்திருக்கின்றன. ஆனால் அவற்றின் தேடல்கள் இன்றும் தொடர்கின்றன. ஒவ்வொரு வெளிநாட்டவர் வரும்போதும் போராட்டங்கள் நடக்கின்றன. விபூசிகா போன்றும், விஜயகுமாரி போன்றும் காணாமல் போனவர்களின் உறவுகள் சிறையிலுமிருக்கின்றனர். இதற்கெல்லாம் என்ன தீர்வை இந்த அரசு அல்லது பெரும்பான்மையின மக்கள் சொல்லப்போகின்றனர்? தொடர்ந்தும் அடக்குமுறைக்குள்ளாக்கலின் ஒரு ஆயுதமாக இந்த விடயத்தைக் கையாளப் போகின்றனவரா என்றெல்லாம் சிந்திக்கத் தோன்றுகின்றது. ஆனால் இவற்றுக்கு யாரிடமும் பதில் இல்லை. நேர்மைத் தன்மையுடனும், இதய சுத்தியுடனும் காணாமல் போனோரது விடயங்கள் அணுகப்படும் வரை காணாமல் போனவர்களைத் தேடுவோரின் கண்ணீர் வியாபாரமாக்கப்படுவது மட்டும் தொடர்ந்துகொண்டிருக்கும்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக பலர் தம்மை பொருட்படுத்தாது பணியாற்றுகின்றனர். என்பதையும் நிராகரிக்க முடியாது. கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களில் ஒரு சிலரும்,சில சிவில் மனித உரிமை அமைப்புக்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் இது விடயத்தில் விசுவாசமாகவே செயற்படுகின்றனர். ●

---

**ஐ.நா சபையின்..**(03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஐ.நா சபையில் பேச அனுமதிக்காதே, இந்திய அரசே! ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணைக் குழுவை இங்குள்ள ஈழத் தமிழரிடம் விசாரணை செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள், சிங்களப்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்து, வங்கக் கடலில் பாரம்பரிய மீன் பிடியை மீட்டுக் கொடு, இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான சிறப்பு முகாம்களை இழுத்து மூடு, இரட்டைக் குடியுரிமையை வழங்கு, தமிழக முதல்வர் அவர்களால் முன் மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான பொருளாதாரத் தடையை இந்திய அரசே முழுமையாக செயல்படுத்து. ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்தே தமிழக வாழ்வுரிமை கூட்டமைப்பின் சார்பில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினதும், பாரதீய ஜனநாயகக் கட்சியின் மூலாபாயம் செயற்பாட்டுக் குழுவின் தலைவர் சுப்பிரமணிய சுவாமியின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

மறுநாள் 25.09.2014 அமெரிக்கத் தமிழரின் பொங்குதமிழ் எழுச்சியோடு ஐ.நாவின் முன் அணி திரண்டனர். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஐ.நா உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஈழத் தமிழருக்கான நீதியினைக் கோரியும் இப் பொங்குதமிழ் கவனயீர்ப்பு எழுச்சி நிகழ்வும் இடம்பெற்றது.

கனடாவில் இருந்து பேரூந்துகள் மூலமும் அமெரிக்காவின் பிற மாநிலங்களிலிருந்தும் மக்கள் அணிதிரண்டனர். இந்தப் பேரணியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம் தாங்கிய பதாதைகளையும், புலிக் கொடிகளையும் தாங்கியவாறு கோசங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டங்களுக்கு மத்தியிலும் பொதுச்சபை அமர்வில் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு உரையாற்றும் போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைப் பேரவையினால் போரிற்குப் பின்னரான காலத்தில் இலங்கை மீது மேற்கொள்ளப்படும் போர்க்குற்ற விசாரணை ஒழுங்கற்ற வகையில் முன்னெடுக்கப்படுகிறது என்றும் குற்றம் சுமத்தியுள்ளார். இப்படியாக ஐ.நா சபையின் 69 வது பொதுச்சபை அமர்வு நடந்து கொண்டிருக்கும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மௌனம் காத்து வருகின்றமை எதற்காக என்ற எண்ணப்பாடு தோன்றுகிறது.

---

**ஜெயலலிதா..** (03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அரசினை ஏமாற்றி வருமானத்திற்கும் அதிகமான 66 கோடி சொத்துக்களை சேர்த்துள்ளார்.

ஜெயலலிதா சிறையில் அடைக்கப் பட்டதைத் தாங்க முடியாத வேதனையில் கல்லூரி மாணவி மற்றும் அ.தி.மு.க வினர் பலர் தீக்குளித்தனர். அ.தி.மு.க தலைமை அலுவலகத்திற்கு முன்னால் திரண்டு நின்ற பெண்கள் தீர்ப்பு வெளியானதும் தலையிலும் மார்பிலும் அடித்துக் கதறி அழுதார்கள். துக்கம் தாங்காமல் தொண்டர்களும் அழுதனர். வேட்டி தலைப்பாலும், கைக்குட்டையாலும் வடிந்த கண்ணீரைத் துடைத்த படி அழுதனர். தலைமைக் கழக வளாகம் முழுவதும் சோகமயமாக காட்சியளித்தது.

செய்தி அறிந்ததும் ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் மாரடைப்பு, தற்கொலை மூலம் பலர் தமது உயிர்களை மாய்த்துள்ளனர். இதுவரையில் 50 பேர் சாவடைந்ததாக தெரிவிக்கப் படுகிறது.

இந்தத் தீர்ப்பை அடுத்து தமிழகம் முழுவதும் பரவலாக வன்முறைகள் வெடிக்க ஆரம்பித்தன.தமிழகம் முழுவதும் அறிவிக்கப்படாத ஹர்த்தால் போல் காட்சியளித்தன. இதனால் அரச அலுவலகங்கள் இயங்கவில்லை, பேரூந்துகள் ஓடவில்லை, வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன, பொது மக்கள் மற்றும் எதிர்க் கட்சியினர் மீதான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் அச்சமான சூழ்நிலைகள் அங்கு எழுந்தன.



# வட மாகாண சபையின் ஒரு வருடம்

**—ரேகா—**

"நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நடப்பதையே நினைத்திருந்தால் என்றும் தோல்வியில்லை..." என்ற தமிழ் சினிமாப் பாடல் எவ்வளவு அழகானது. வாழ்வின் எந்த வேலையிலும் படித்து, நமக்கு நாமே ஆறுதல் சொல்லித் தேற்றிக் கொள்ள உதவும் அருமருந்தல்லவா இந்தப்பாடல்!. ஆகவே வடக்கு மாகாண சபையை நம்பியவர்கள் எல்லோரும் இந்தப் பாடலை மீளவும் ஒரு முறை பாடிக் கொள்ளலாம். பெருமூச்சு விட்டு தமக்குத் தாமே சமாதானப்படுத்தியும் கொள்ளலாம்.

கடந்த வருடத்தின் இந்தக் காலப் பகுதி விறுவிறுப்பாக இருந்தது. வடக்கு மாகாணசபை தேர்தல் முடிவடைந்து, யார் முன்னிலையில் பதவியேற்பது என்றும், யாரெல்லாம் அமைச்சர்களாக வருவார்கள் என்றும், எந்தெந்த அமைச்சுக்களை அரசு வழங்கும் என்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் அதற்கான சண்டைகளும் ஆரம்பித்திருந்தன. ஜனாதிபதி முன்னினிலையில் வடமாகாண சபை முதலமைச்சராக விக்கினேஸ்வரன் பதவியேற்றுக் கொண்டதும், உடனடியாகவே அவருக்கு வடக்கு மக்களைக் காப்பதற்கான முருகவேல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதும், இந்தக் காலப்பகுதியில் நடந்து முடிந்த நகைச்சுவைகள். இவற்றைத் தமிழ் கூறும் நல்லுலகத்தாலும், கூகிள் இணையம் இருக்கும் வரையிலும் மறக்கவே முடியாது.

இப்படி பெரும் களேபரங்களுக்கும், நகைச்சுவைகளுக்கும் மத்தியில் அரசேறிய கூட்டமைப்பிடம் தமிழர்கள் என்னவெல்லாம் எதிர்பார்த்தார்கள்? எதுவெல்லாம் தமக்குத் தேவையென வாக்களித்தார்கள்? அவற்றின் இன்றைய நிலையென்ன?

வடக்கு மாகாண சபை தமிழர்களுக்கானதாகவும், தமிழர்களின் உரிமைக்காகவும் குரல்கொடுக்கும் அதிகாரமிக்க அமைப்பு என்று கருதியே தமிழர்கள் வாக்களித்து அரியணையேற்றினார்கள். மாவீரர்கள் மீது சத்தியம் செய்யாத குறையாக நிகழ்த்தப்பட்ட பரப்புரைகளை மக்கள் அப்படியே நம்பினார்கள். துயிலுமில்லங்கள் திருப்பி அமைக்கப்படாவிட்டாலும், போரில் இறந்தவர்களுக்கான பொதுத் தூபியாவது அமைக்கப்படும் அதே என்று நினைத்தார்கள். ஆனால் நடந்ததென்னவெனில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பல தடவைகள் ஹிட்லராக்கியமைதான். வட மாகாண சபை முதலமைச்சர் தன் வாயாலேயே பொது இடங்களில் அவ்வாறு பேசினார். ஆனால் தேர்தல் பரப்புரைகளின் போது அதே பிரபாகரனை மாவீரன் என்றார். கடந்தகாலப் போராட்டம் தவறென்றார். இதற்காகவா மக்கள் வாக்களித்தனர்?

ஆட்சிக்கு வந்தவுடனேயே தாய்த் தமிழக உறவுகள் மீதான வசைவுகளை ஆரம்பித்தார் வடமாகாண சபை முதலமைச்சர். தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான பிரச்சினை கணவன் - மனைவி பிரச்சினை என்றும், அதில் தமிழக உறவுகள் தலையிட வேண்டியதில்லை எனவும், உணர்ச்சி வசப் போராட்டங்களை கைவிட்டாலே இங்கு தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியும் எனவும் பேசினார். இந்த உணர்ச்சிமிகு பேச்சுகள் தமிழக - ஈழ உறவுகளிடையில் பெருங் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. நாம் தேவையற்றுப் போராடுகிறோமோ என்ற எண்ணத்தை தமிழக உணர்வாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

> **இந்த உணர்ச்சிமிகு பேச்சுகள் தமிழக– ஈழ உறவுகளிடையில் பெருங் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. நாம் தேவையற்றுப் போராடுகிறோமோ என்ற எண்ணத்தை தமிழக உணர்வாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியது.**

ஆனால் இந்த முதல் ஆண்டின் முன்னரைப் பகுதியில்தான் வடமாகாண சபை முதலமைச்சர் இவ்வாறு கதைத்து வந்தார். பின்னரைப் பகுதியில் வந்து போகும் வெளிநாட்டு அதிகாரிகளிடமும், ஊடகங்களிடமும் இலங்கை அரசுடன் எதுவும் செய்ய முடியாதெனவும், வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு ஆளுநர் பெருந்தடையாக இருக்கின்றார் எனவும் தெரிவித்து வருகின்றார். அவரின் இந்தக் கருத்துக்கள் உண்மையானதாக இருக்குமா? அல்லது தமிழர் மத்தியில் அவரின் முன்னரைக்கால பேச்சுக்களினால் ஏற்பட்ட அபகீர்த்தியை மறைக்க இவ்வாறு பேசுகின்றாரா என்ற பலத்த சந்தேகம் நிலவுகின்றது.

வடக்கு மாகாண சபையின் வளங்கள் மிகவேகமாக சுரண்டப்படுகின்றன. மணல் தொட்டு நெடுந்தீவுக் குதிரைகள் வரையில் இந்த சுரண்டல்

(19 ஆம் பக்கம் பார்க்க)

**ஜெயலலிதாவுக்கான...**

( 03 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

தெரிகின்றது. இவற்றை மூன்று கோணங்களில் பார்க்க முடியும். ஒன்று சட்டம், நீதி என்ற கோணத்தில் பார்ப்பது. இரண்டாவது இந்தியாவில் நிலவும் அரசியல் கோணத்திலிருந்து பார்ப்பது. மூன்றாவது ஈழத்தமிழர் விவகாரத்திலிருந்து பார்ப்பது.

சட்டம், நீதி என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போது ஊழல் நடந்தது என்பது உண்மை. அதற்கான தண்டனையும் எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால் இந்தளவு வலுவான தண்டனை வழங்கப்பட வேண்டுமா? என்ற கேள்வி சட்ட நிபுணர்கள் மத்தியிலும், அரசியல் ஆய்வாளர்கள் மத்தியிலும் எழுந்துள்ளது. மூத்த சட்டவல்லுனரான ராஜ் ஜெத்மலானி இது முற்றிலும் பொருத்தமற்ற தண்டனை எனக் கூறியிருக்கின்றார். ஜெயலலிதாவின் எதிர்த் தரப்பு அரசியல்வாதிகள் வேண்டுமானால் சந்தோசமடையலாம். ஆனால் நீதி தவறானது எனக் கூறியிருக்கின்றார்.

இந்திய நீதித்துறையை, இலங்கை நீதித்துறையுடன் ஒப்பிடும் போது சற்றுச் சுதந்திரமானது என்பது உண்மை தான். அதற்காக முற்றிலும் அரசியல் கலப்பற்றது என்பதைக் கூறிவிட முடியாது. நரேந்திர மோடி குஜராத்தில் முஸ்லீம்களை இனப் படுகொலை செய்த போது விசாரணைகள் ஒழுங்காக நடந்ததெனக் கூறமுடியாது. இதற்காகவே அமெரிக்கா அவரது விசாவினையும் அவர் குஜராத்தின் முதலமைச்சராக இருந்த போது இரத்துச் செய்திருந்தது. ராஜீவ் காந்தி தொடர்பான போபர்ஸ் ஊழல் இதுவரை விசாரணைக்கே வரவில்லை. பாரதீய ஜனதாக்கட்சித் தலைவராக இருந்த ஒருவர் இலஞ்சம் வாங்கியதை இணையத்தளமொன்று நேரடியாக ஒளிபரப்பியிருந்தது. அது தொடர்பாகப் பெரிய விசாரணைகள் எதுவும் நடக்கவில்லை. இறுக்கமான நீதிபதிகள் தலைமையில் விசாரணைகள் நடக்கும் போது மட்டுமே இவ்வாறான குற்றவாளிகள் தண்டனையைப் பெற்றுக்கொள்வர். ஏனைய நீதிபதிகள் விசாரணைகளை நடாத்தும் போது பலர் தப்பி விடுகின்றனர். உச்ச நீதிமன்றமும் அரசியல் அழுத்தங்கள் வரும்போது உண்மையான நீதி வழங்குவதில் தயக்கம் காட்டியே வந்திருக்கின்றது.

ஜெயலலிதாமுன்னரும் ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டுப் பதவி பறி போய் பின்னர் பதவியைப் பெற்றிருக்கின்றார். மேன் முறையீடு செய்த பின் அவர் பிணையில் வெளிவர முடியும். மேன்முறையீட்டு உச்ச நீதி மன்றத்திற்குச் செல்லும் போது அன்றைய அரசியல் தீர்ப்பினைத் தீர்மானிக்கலாம். இந்தியாவில் ஊழல் செய்யாத அரசியல் தலைவர்களைக் கண்டுபிடிப்பது கடினம். ஊழலினால் பெறப்படும் பணத்தையே கட்சியின் முதலீடாக பலகட்சிகள் நம்பியுள்ளன. இது இந்தியாவில் மட்டுமல்ல தென்னாசியாவின் பல நாடுகளிலும் நடைபெறுகின்ற ஒன்று தான். இலங்கையில் இது தொடர்பாக உண்மையான விசாரணை நடைபெறுமாயின் அரசாங்கக் கட்சியில் உள்ள பலர் சிறையில் இருக்க வேண்டிய நிலையே ஏற்படும். இந்தியாவில் ஊழல் செய்யும் அரசியல் வாதிகளில் பலர் தப்பி விடுகின்றனர். அரசியல் காரணங்களுக்காக ஒரு சிலர் அகப்படுகின்றனர். அவ்வாறு அகப்பட்டவர்களில் ஒருவராக ஜெயலலிதாவைக் கூறலாம்.

இரண்டாவது இந்தியாவில் தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் அங்கு மத்திய அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாத முக்கிய மாநில அரசின் தலைவராக ஜெயலலிதா விளங்குகின்றார். பல விடயங்களில் நரேந்திமோடி அரசாங்கத்திற்கு சகிக்க முடியாத ஒருவராக அவர் இருக்கின்றார். ஆரம்பத்தில் குஜராத் முதலமைச்சராக நரேந்திரமோடி இருந்த போது அவருக்கும், ஜெயலலிதாவிற்கும் நல்லுறவு இருந்தது. பிரதமர் பதவிக்கு ஜெயலலிதாவும் தயாரானபோது பகைமை வளரத் தொடங்கியது.

**G.S.T** என அழைக்கப்படும் பொருள் மற்றும் சேவை வரிச்சட்டத்தை மோடி அரசாங்கம் கொண்டு வர முனைந்த போது ஜெயலலிதாஅதைக் கடுமையாக எதிர்த்தார். அதனைக் கொண்டு வருவதாயின் மாநில அரசிற்கு இழப்பீடு வழங்க வேண்டுமெனக் கூறினார். மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகம் மாநிலத்திடமே இருக்கவேண்டும் என்றார். தனது இந்த நிலைப்பாடுகளுக்கு ஏனைய மாநிலங்களின் முதலமைச்சர்களினதும் ஆதரவினைக் கோரி அவர்களையும் இணைக்க முற்பட்டார். இலங்கைத்தமிழர் விவகாரத்திலும், தமிழக மீனவர் பிரச்சினையிலும் உறுதியான நிலைப்பாட்டிலிருந்தார். இவையெல்லாம் மோடி அரசாங்கத்திற்குப் பெரும் தொல்லைகளாக இருந்தன. ஜெயலலிதா வழக்கில் சட்டம் தன் கடமையைச் செய்யட்டும் என மோடி கூறியதாகச் சுப்பிரமணியசுவாமி தெரிவித்திருக்கின்றார். எனவே ஜெயலலிதாவைச் சற்று அடக்கி வைத்திருக்க மோடியும் முனைந்திருக்கின்றார் போலவே தெரிகின்றது.

மூன்றாவது ஈழத்தமிழர் விவகாரத்திலிருந்து பார்க்கும் போது ஜெயலலிதாவுக்கு வழங்கிய தீர்ப்பும், நடைமுறை அரசியல் இருந்து அவர் விலக்கப்படுவதும் ஈழத் தமிழர்களுக்கு மிகுந்த பாதிப்பினைத் தரக்கூடும். ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக அவர் விரும்பியோ, விரும்பாமலோ உறுதியான நிலைப்பாடுகளை முன் வைத்தார். சட்ட சபையிலும் அவற்றைத் தீர்மானங்களாக எடுத்து, தமிழக மக்களின் பொதுக் கருத்தாக்கினார்.

தமிழர் விவகாரம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும். இனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணை வேண்டும். சர்வதேச விசாரணையாளர்கள் இந்தியாவர அனுமதி வழங்க வேண்டும், ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என வலுவான தீர்மானங்களை எடுத்து, இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை நெளிய வைத்தார்.

சம்பந்தன், விக்கினேஸ்வரன், சுமந்திரன் போன்றோரை ஜெயலலிதாவின் தீர்மானங்களுக்கு எதிராக புதுடில்லி கருத்துக் கூற வைத்த போதும் தீர்மானங்களை நீர்த்துப் போகச் செய்ய முடியவில்லை. 13வது திருத்தத்துக்குள் தமிழர் அரசியலை முடக்க நினைத்த புதுடில்லிக்கு ஜெயலலிதாவின் அதிரடித் தீர்மானங்கள் பெரிய சாட்டை அடிகள் தான்.

மோடி அரசாங்கம் ஜெயலலிதாவின் இந்த வலுவான தீர்மானங்களினால் இலங்கை விடயத்தில் தான் விரும்பியதைச் செய்ய முடியாமல் திணறுகிறது. ஜெயலலிதாவை சிறையில் அடைத்து வைத்திருப்பதன் மூலம் அல்லது மறைமுக நிபந்தனைகளுடன் வெளியேவரச் செய்வதன் மூலம் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஜெயலலிதாவின் அழுத்தங்களை நீர்த்துப் போகச் செய்ய புதுடில்லி முனையலாம்.

தமிழ்த் தேசிய அரசியல் அக நிலையிலும், புறநிலையிலும் தேக்க நிலைக்குத் தள்ளப்படுகின்ற இன்றைய சூழலில் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு இந்தத் தேக்கநிலையை மேலும் விரிவாக்கலாம். இந்தியாவும், மேற்குலகும் இவற்றிற்குப் பின்னால் இழுபட்டுச் செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தற்போது விரும்புவதும் இதைத்தான்.

தமிழ்த் தேசிய சக்திகள் இந்த இருண்ட சூழலிலிருந்து எவ்வாறு மீள்வது என்பது பற்றிச் சிந்திப்பது நல்லது.

**மாணிக்க சோதி**

( 03 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதற்கு முன்னார் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் நவ சம சமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்டிருந்தார்.

ஆசிரிய கலாசாலையில் மாணவர் தலைவராக இருந்த பொழுது ஆசிரிய மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக் குரல்கொடுத்தவர். தமிழ்த் தேசியத்தை அழமாக நேசித்து அதற்காக உழைத்தவர். தவறுவிடுபவர்கள் யாராக இருந்தாலும் உயர் பதவிகளை வகித்தாலும் அவர்களின் தவறுகளை நேரடியாக விமர்சிப்பவர்.

யாழ் மாவட்ட சட்டத் தரணிகள் சங்கத் தலைவியான சாந்தா அபிமன்ன சிங்கத்தின் சகோதரர் ஆவார்.

# 10

# தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய உண்மைகளும் பொய்மைகளும்

-மாவலியான்-

பல இளம் யுவதிகள் பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்டதாகவும், கேள்வியுற்று என் மனம் மிகவும் வேதனையடைந்தது. பௌத்த மதத்தைக் கடைப்பிடிப்போர் 80 வீதமானோர் வாழும் இந்நாட்டில் இப்படியான சம்பவங்கள் நடந்தமை வருந்தத்தக்கது. (வீரகேசரி செப் 24.1981) இதன் மூலம் தமிழரை கொலைசெய்து ரத்தத்தை குடிக்கும் அளவிற்கு சிங்கள மக்களின் ஒரு சாரரை தேசபக்தியின் பெயரால் வெறிகொள்ள வைப்பதில் வகுப்புவாத அரசியல் வெற்றிபெற்றுள்ளதை தம்மையறியாமல் அவர் ஒத்துக்கொண்டார்.



இந்த வெறியாட்டம் நடந்து கொண்டிருக்கும்போது இந்தியா ருடே (India Today இன்றைய இந்தியா) நிருபருக்கு அதி உத்தம ஜனாதிபதி ஜே.ஆர். பேட்டியளிக்கிறார்.

நிருபர்:- பாதுகாப்பின்மை, அச்சம் காரணமாக தோட்டத் தொழிலாளர் இந்தியாவிற்கோ, யாழ்ப்பாணத்திற்கோ போய்விட்டால் தமிழ் தொழிலாளரில் முழுமையாக தங்கியுள்ள பெருந்தோட்டங்களை எவ்வாறு நடத்துவீர்கள்.?

ஜே.ஆர்:-பிரஜைகள் அல்லாதோர் திரும்பிப்போகலாம்.

நிருபர்:- ஆனால் ஐந்து தலைமுறையாக இங்கு வாழ்ந்த பிறகு?

ஜே.ஆர்:- ஆம், அவர்கள் போகத் தான் வேண்டும்.

நிருபர்:- அமெரிக்கா மண்ணில் ஒரு குழந்தை பிறந்தால் அந்நாட்டின் பிரஜாவுரிமை தாய்க்கும்கூட வழங்கப் படுகிறது.

ஜே.ஆர்:-அப்படி இருக்கு, ஆனால் இங்கே வித்தியாசமான பிரஜாவுரிமைச்சட்டம் உள்ளது. இதிலிருந்து அரசாங்கத்தின் மனோபாவம் புரியவில்லையா?

1981வன்செயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதியுடன் அமைச்சர் காமினி திசாநாயக்காவும் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தார். அவரது அபிப்பிராயம் வானொலியிலே தமிழ் ஒலிபரப்பில் பாதிக்கப்பட்டோருக்கு பரிவுகாட்டுவது போலவும், சிங்களத்திலே, கூறப்பட்டது போல் நிலைமை மோசமாக இல்லை என்றும் ஒலிபரப்பப்பட்டது.

இவ்விரு வன்செயல்களிலும் மலையகத் தமிழர்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

மலையகத் தொழிலாளரின் வாக்குரிமையும் பிரஜாவுரிமையும் 1948, 49ல் பறிக்கப்பட்டமை இவர்கள் மீதான அரசியல் அடக்குமுறையின் ஒரு உயர்ந்த வடிவாகக் கருதலாம்.

1958ல் வன்செயல்களில் பாதிக்கப்பட்டோரும் இவர்களே.

1964ல் கைச்சாத்தான ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் மனிதாபிமானம் படைத்த சகலராலும் கண்டிக்கப்பட்டது. இரு நாட்டுத் தலைவர்களால், மந்தைகள் பங்கிடுவது போல வெறும் எண்ணிக்கை அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டது. இவ் ஒப்பந்தம் இரு நாடுகளும் மலையகத் தமிழர்களை தேவையில்லாத ஒரு உபரி அல்லது சுமை என்ற கண்ணோட்டத்தை வெளிப்படுத்தின. இதன் அடிப்படையில் அன்றைய மொத்த 975000 மலையகத் தமிழரில் 525000 பேருக்கு இந்தியா 15 வருடங்களில் இந்தியப் பிரஜாவுரிமை வழங்குவதெனவும், மீதி 150,00 பேரைப் பற்றி பின்னர் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தினால் மலையகமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடங்களும் அவலங்களும் கொஞ்ச நஞ்சமல்ல அவற்றை எல்லாம் இங்கு விபரிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் நாடற்றவர், பிரஜா உரிமையற்றோர். எனும் காரணங்களை காட்டி காணி பங்கீடு, அரசாங்க வீடுகள் ஆகியவற்றில் மலையக மக்களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டது.

ஆயிரத்தில் லட்சத்தில் ஒருவராக படித்துத் தேறும் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கு இதே காரணத்தால் அரசாங்க உத்தியோகம் மறுக்கப்பட்டது.

இந்திய அரசாங்கமோ இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படும் தோட்டத் தொழிலாளரை கழித்தொதுக்கப்பட்ட பிரஜைகளாகக் கருதிப் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறது. தாயகம் திரும்புவோரின் அவலத்தைப் பற்றி ஐ.ரி.ஈ.எஸ். (I.T.E.S) விரிவான ஆய்வொன்றை நடத்தியுள்ளது. அதன்படி இந்திய அரசாங்கம் 65 வீதமானவர்களுக்கு பணத்தை கடனாகக் கையில் கொடுத்து தனது கடமையை முடித்துக்கொண்டுளளது 72 வீதத்திற்கு ரூபா 3000 மாத்திரம் இவ்வாறு வியாபாரக் கடனாக வழங்கி வியாபார அனுபவமே இல்லாத அவர்களை செத்தாலும் சரி பிழைத்தாலும் சரி என தனது கையைக் கழுவிக் கொண்டுள்ளது.

இந்தியா செல்வோரில் 90 வீதத்தினர் இந்தியாவைப் பார்த்ததே இல்லை. அவர்களுக்கு இந்திய கிராமியச் சூழல் அந்நியமானது. எந்த ஒரு தொழில் திறனும் இல்லாத கல்வி அறிவற்ற இம்மக்கள் கையில் கிடைக்கும் காசிலே பெரும்பகுதியை சாப்பாட்டில் செலவழித்து விட்டு தொழிலின்றி வீடின்றி வருவாயின்றி பரிதாபகரமாக தெருவோரங்களில் வாழ்கிறார்கள் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பியோரில் 88 வீதத்தினர் வறுமை மட்டத்தின் கீழ் இருப்பதாக அவ்வறிக்கை கூறுகிறது.

(19 ஆம் பக்கம் பார்க்க)

1964இல் கைச்சாத்தான ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் மனிதாபிமானம் படைத்த சகலராலும் கண்டிக்கப் பட்டது. இரு நாட்டுத் தலைவர்களால், மந்தைகள் பங்கிடுவதுபோல வெறும் எண்ணிக்கை அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டது. இவ் ஒப்பந்தம் இரு நாடுகளும் மலையகத் தமிழர்களை தேவையில்லாத ஒரு உபரி அல்லது சுமை என்ற கண்ணோட்டத்தை வெளிப்படுத்தின.

ஏனைய தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு தனது தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் சிங்கள மக்கள் தமது விடுதலையை பெறவே முடியாது.

## யார் இந்த மாவலியான்



மாவலியான் என்ற புனைபெயரில் இந்த தொடர்கட்டுரையை எழுதிய பி.ஏ. காதர். மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளராகவும், மத்திய மாகணசபை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.பின்னர் கொள்கை முரண்பாட்டினால் வெளியேறியவர். இரண்டு தடவை சிறைவாசம் அனுபவித்தவர். ஒருதடவை மலையகத்தில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஒழுங்குகளைச் செய்தவர். என்பதற்காகவும இரண்டாவது தடவை புலி உறுப்பனர் ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தவர் என்பதற்காகவும் கைதுசெய்யப்பட்டார். மலையகமக்கள் முன்னணியில் இணைவதற்கு முன்னர் சண்முகதாசன் தலைமையிலான சீனசார்புக் கம்யூனிசக் கட்சியிலும், பின்னர் கீழைக்காற்று இயக்கத்திலும் செயற்பட்டவர்.

பெருந்தோட்டத் தொழிலாளர், எதிர்காலம், இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம், சுயநிர்ணயம் என வேறுபல நூல்களையும் எழுதியுள்ளார். மாவலியான் என்ற பெயரில் எழுதிய தோட்டத்தொழிலாளர் பற்றிய உண்மைகளும் பொய்மைகளும் என்றதொடர் கட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மறுமலர்ச்சிக்கழகம் 80களில் நூலாகவெளியிட்டது. நுவரெலியாமாவட்டம் இராகலையைச் சொந்த இடமாகக் கொண்ட பி.ஏ காதர் ஆசிரியராக கடமையாற்றியதோடுமல்லாமல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றியவர். மும்மொழிகளிலும் மிகுந்த ஆற்றல் படைத்த இவர் தற்போது லண்டனில் வசிக்கின்றார்.

# சிறுவனுக்கு ஏற்பட்ட அநீதி-

- பிறைவாணன் -



**இலங்கையில் அந் நீதிகள் எல்லா இடங்களிலும், எல்லாத் தரப்புக்களிலும் காணப் படுகிறது. படையினராக இருக் கலாம்,பொலிஸாராக இருக்க லாம் அரச நிர்வாக அதிகாரி களாக இருக்கலாம். அரசியல் வாதிகளாக இருக்கலாம். எல்லா இடங்களிலும் அநீதி கள் தலை விரித்தாடுகின்றது.**

இலங்கையின் நீதித்துறை எந்தளவுக்கு தனது சேவையை செய்கின்றது என்பதை சொல்ல முடியாதுள்ளது. அந்தளவுக்கு அநீதிகள் இந்த நாட்டில் தலை விரித்தாடுகிறது. அநீதிகள் இல்லாத நாடு அபிவிருத்தியில் முன்னணி வகித்து பொருளாதாரத்தில் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகிறது. ஆனால் இலங்கையில் அநீதிகள் எல்லா இடங் களிலும், எல்லாத் தரப்புக்களிலும் காணப் படுகிறது. படையினராக இருக்கலாம், பொலிஸாராக இருக்கலாம் அரச நிர்வாக அதிகாரிகளாக இருக்கலாம்.அரசியல்வாதி களாக இருக்கலாம். எல்லா இடங்களிலும் அநீதிகள் தலை விரித்தாடுகின்றது.

பின் தள்ளப்பட்ட கிராமப் பகுதியில் இடம் பெறும் அநீதிகள் வெளிச்சத்திற்கே வராது மூடி மறைக்கப்படுகிறது. அதாவது ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக பொலிஸ் நிலையம் ஏறுபவரும், இணக்க சபை ஊடாக பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர முயற்சிப்பவரும் படுகின்ற பாடு வார்த்தைகளால் சொல்ல முடியாது. இதில் அப்பாவிப் பொதுமக்கள் கூடுதலாக பாதிக்கப்படுகின்றனர். பொலிஸ் பக்க சார்பாக செயற்படுகின்றது. இதில் ஒட்டு மொத்த பொலிஸையும் குற்றம் சுமத்து வதாக இல்லை. ஒரு சிலரைக் குறிப்பிட லாம். இணக்க சபையை நோக்கி செல்பவர் கள் காணிப்பிரச்சினையில் வழி வாய்க் கால் பிரச்சினைகள் சம்பந்தமாக செல்பவர் கள் பிரச்சனை தீராமல் அவதிப் படுகின்றனர். வழி வாய்க்காலில் தண்ணீர் இறைக்கும் படியும் வழிவாய்க்காலை மறித்து வேலி போடும் படியும் இரு தரப்புக் கும் அனுமதியைக் கொடுத்து அந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வராது இருவருக்கும் இடையில் மீண்டும் ஒரு பிரச்சினையை ஏற்படுத்தி விடுகிறது. நீதிமன்றம் செல்பவர்கள் காலம் முழுவதும் சட்டத்தரணிக்கே வாழ்வு கொடுத்து அந்த வழக்கு முடியாமல் தவணை போட்டு தவணை போட்டு வருடக்கணக்கில் இழு பட வைக்கின்றனர். இப்படியாக மக்களுடைய பிரச்சினை அதிகரித்துக் கொண்டு செல் கிறது. இதற்கு நீதித்துறையில் இருக்கிற ஓட்டைதான் காரணமாக அமைகின்றது.

யாழ்ப்பாணம் நல்லூரடியைச் சேர்ந்த 16 வயதேயான சிறுவன் ஒருவன் அங்குள்ள தேநீரகம் ஒன்றில் பணியாற்றி வந்தார். இவருடைய அம்மா, அப்பா இவர் சிறுவயதில் இருக்கும் போதே இறந்து போனார்கள். இவர் மிகவும் வறுமையான நிலையில் தனது உறவினர்களுடன் வசித்து வந்தார். இவரது வறுமையினை கண்ணுற்ற இவரது உறவினரின் நண்பர் ஒருவர் இவரை உலோக ஒட்டு வேலை பழகுவதற்காக அவரிற்கு சொந்தமான கொழும்பிலுள்ள உலோக ஒட்டு வேலை நிலையம் ஒன்றிற்கு அழைத்து சென்றார். இந்த குறிப்பிட்ட சிறுவன் வேலை செய்யும் இடத்திலேயே தங்கியிருந்து வேலை பழகி வந்துள்ளார்.

2008 இல் நடைபெற்ற குண்டு வெடிப்புச்சம்பவம் ஒன்று தொடர்பான விசாரணையில், குறித்த இளைஞன் கொழும்பில் தொழில் பழகுனராக வேலை செய்யும் உலோக ஒட்டு தொழில் நிலையத் தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து பயங்கரவாத தடுப் புப் பிரிவினர் சோதனைக்காக உலோக ஒட்டு தொழில் நிலையத்திற்கு வந் துள்ளனர். அந்த சமயத்தில் அங்கு குறித்த சிறுவனுடன் மலையகம், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த வேறு 4 பேர் இருந்தார்கள். அவர்கள் அனை வரையும் கைது செய்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் 6 ஆம் மாடியில் வைத்து விசாரித்து விட்டு பூசா தடுப்பு நிலையத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தனர். இவருடன் கைது செய்யப்பட்ட அனைவரும் அவர்களது பெற்றோரின் முயற்சியால் பூசாவில் தடுத்து வைக்கப்பட்ட காலத்திலேயே விடுவிக்கப்பட்டனர்.

இந்த சிறுவனை பார்க்க யாருமே வரவில்லை. இந்த குறித்த சிறுவனை விசாரித்த மாத்திரத்திலேயே இவர் இந்த சம்பவத்திற்கு எந்த தொடர்பும் இல்லாத அப்பாவி என்பதை தெளிவாக புரிந்து கொண்டார்கள். என்ன செய்வதென்றே புரியாத நிலையிலிருந்த இந்த குறித்த சிறுவன் 18 மாதம் நிறைவடைந்த பின்னர் விடுவிக்கப்படுவார் என்று கூறப்பட்டார். ஆனால் 18 மாதம் பூசாவில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் மீண்டும் கொழும்பு தடுப்பு காவல் சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டார். வெலிக்கடை சிறைச்சாலை வளாகத் திலுள்ள நீதவான் நீதிமன்றில் ஒவ்வொரு 14 நாட்களிற்கு ஒரு தடவை முன்னிலைப் படுத்தப்பட்டு இவரிற்கு தடுப்புக்காவல் நீடிக் கப்பட்டுக்கொண்டே வந்தது.

போதிய கல்வியறிவும் இல்லாது, உதவ உற்றார் இல்லாது, எந்தவொரு பொருளாதார உதவியும் இல்லாத நிலையி லிருந்த இந்த குறித்த சிறுவன் செய்வத றியாது எந்த முன்னேற்றமும் இல்லாது இருந்துள்ளார். இந்த நேரத்தில் அவர் திடீரென மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டார். அங்கு இவருடன் இருந்தவர்கள் இவரின் பரிதாப நிலையைக்கண்டு, 2011 ஆம் ஆண்டில் மனித உரிமை இல்லத் தின் ஊடாக உச்ச நீதிமன்றத்தில் அடிப் படை உரிமை மனுத்தாக்கல் செய்வதற்கு உதவினார்கள்.

உச்ச நீதிமன்றமும் மூன்று மாத காலமாக காலத்தை இழுத்தடிக்கையில், எவ்வாறாயினும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும்படி உச்ச நீதி மன்றத்தால் தீர்ப்பு வழங்கப்படும் என்பதால், இந்த குறித்த சிறுவன் மீது என்ன வழக்குத் தாக்கல் செய்வது என்ற சிக்கலில் இருந்தனர். தாம் அவரிற்கு புனர் வாழ்வு அளிக்க சம்மதிப்பதாக கூற, மனித உரிமை இல்லத்தின் ஊடாக முன்னிலை யான சட்டத்தரணி குறித்த சிறுவனிடம் எந்த சம்மதமும் கேட்காமல் உச்ச நீதி மன்றத்தில் வழக்கை வாபஸ் பெற்றார்.

இந்த சட்டத்தரணியின் வற்புறுத் தலினால் குறித்த இளைஞன் தனது விருப்பத்திற்கு மாறாக, என்ன செய்வது என்று அறியாது புனர்வாழ்விற்கு செல்ல சம்மதித்தான். 2011 இல் புனர்வாழ்விற்கு சென்ற குறித்த இளைஞனிற்கு, சரண டைந்தவர்களிற்கு மட்டுமே புனர்வாழ்வு அளிக்கப்படுவதாகவும் கைது செய்யப்பட் டவர்களிற்கு அல்ல என்று கூறி புனர் வாழ்வு அளிக்க புனர்வாழ்வு மையம் மறுத்து மீண்டும் மகசின் சிறைச் சாலைக்கு அனுப்பியது.

சரணடைந்ததாக கடிதம் கொடுக்கும் பட்சத்தில் புனர்வாழ்வு அளிக்கப்படும் என்று மேலும் கூறப்பட்டது. எந்த அடிப் படையுமில்லாது எப்படி இவ்வாறு கடிதம் கொடுக்க முடியும் என்பதால் குறித்த இளைஞன் மறுத்து விட, பின்னர் சிறைச் சாலை நிர்வாகம் குறித்த இளைஞனை அவர் புனர்வாழ்வு பெற விரும்புவதாக கடிதம் கொடுக்கும் படி கேட்டதற்கிணங்க இவர் ஒப்புதல் கடிதம் கொடுத்து 1 ½ வருடங்கள் புனர்வாழ்வு பெற்று 2008 இல் கைது செய்யப்பட்ட இவர் 2012 இன் இறுதிப்பகுதியில் விடுதலை செய்யப் பட்டார்.

## நகைப்பிற்குரிய இலங்கை யின் நீதித்துறை

குறிப்பிட்ட இந்த சிறுவனின் வாக்கு மூலத்திலோ வேறு எந்த சாட்சியத் திலோ விடுதலைப் புலிகள் சம்பந்த மாக எதுவுமே இல்லை. இவரை விசா ரித்த சகல விசாரணையாளர்களிற் கும் சந்தேகத்திற்கிடமின்றி இந்த விடயம் நன்கு தெரிந்து இருந்தது.

இவரிற்கெதிராக எந்த வழக்கும் போட முடியாத நிலையிலும், அவரை நீண்ட காலம் தடுத்து வைத்திருந் தமைக்கு உச்ச நீதிமன்றத்தில் பதில் சொல்ல முடியாத நிலையிலும் இருந்த இவரை புனர்வாழ்விற்கு அனுப்ப முன் வந்திருக்கிறது.

மூன்று வயதிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் வசிக்கும் இவர் விடுதலைப் புலிகளை பார்த்ததாக கூட நினை வில்லை என்று சொல்லும் நிலையில், குறிப்பிட்ட இந்த சிறுவனிற்கு 1 ½ வருடங்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட கொடூரமும் கேவலமும் எந்த நாட்டிலும் இடம் பெற்றதாக இல்லை.

எந்தக் குற்றமும் செய்யாத குறிப்பிட்ட இந்த சிறுவனை கைது செய்து மூன்று வருடங்கள் அடைத்து வைத்து விட்டு சரணடைந்ததாக கடிதம் தரும் படி மிரட்டுவது உலகில் வேறு எங்காவது நடக்குமா?

இப்படி அநியாயமாக துன்பப் படும் எமது மக்களிற்கு நிரந்தரமாக நிம் மதியை கொடுப்பதற்கு நாம் துணிந் தெழுந்து மக்கள் சக்தியாக திரண்டு எமது தலைவிதியை நாமே தீர்மானிப்போம் என்று உறுதிபூண்டு, காத்திருப்புக்களை கைவிட்டு செயற்பாட்டுத் தளத்தில் இறங்க வேண்டாமா?

---

**கிழக்கு மாகணத்தில்.**

(03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர்.

அங்கு உரையாற்றும் போதே கஜேந்ர குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் ஆற்றிய உரையின் முழு விபரம் வருமாறு.

**வாய் மொழிமூல அறிக்கையை வரவேற்கிறோம்**

மனித உரிமை ஆணையாள் அலுவல கம் சிறிலங்கா தொட்பான வாய்மொழி மூல அறிக்கையை எமது அமைப்பு வரவேற்கிறது. மனித உரிமை ஆணையகத்தின் 25/1 (A/HRC/25/1) தீர்மானம் சம்பந்தமான் விரிவான பொருட்கோடலை /விளக்கத்தைக் கொடுத்தமையையும் நாம் வரவேற்கிறோம்.

குறிப்பாக, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணைக்குழுவானது பாதிக் கப்பட்டவர்களிடமிருந்து நேரடியாக தகவல் களை பெறுவதற்கும் அதனை வலிமைப் படுத்துவதற்கும் முன்னுரிமை கொடுப்ப தாகக் குறிப்பிட்ட ஆணையாளரின் அறிக் கையை வரவேற்கிறோம்.

**வடக்கைப் போலவே கிழக்கும் பாதிப்பு**

இந்த விசாரணைக்கு நேரடி சாட்சியங் களை வழங்கக்கூடிய மிகப்பெரும்பான் மையானோர் சிறிலங்காவின் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்கள் என்பது மனித உரிமை ஆணை யாளர் அறிந்ததே.

தொடர்ந்தும் பாதிக்கப்படும் மக்கள் என்ற வகையில் இந்த விசாரணைக்கு தமது சாட் சியங்களை பதிவு செய்ய வேண்டு மென்பதில் தமிழர்கள் பெருதும் விருப்புக்கொண்டிருக் கிறார்கள்.

களத்தில் வாழுகின்ற பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யாத விடத்து, அவ்விசாரணை முழுமையான தாகவோ தீர்க்கமானதாகவோ அமையாது .

ஆகவே, பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தமது சாட்சியங்களை நேரடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசார ணிக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு ஏதுவான பொறிமுறைகளை உறுப்பு நாடுகள் முன் வைக்க வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

போரின் போதும் அதன் பின்னரும் வடக்கைப்போலவே கிழக்கும் பாதிக்கப் பட்டபோதிலும் இங்கு, இலங்கையின் வட பகுதி பற்றியே முக்கியத்துவம் கொடுத்து பேசப்படுகிறது.

உதாரணமாக 2009 முள்ளிவாய்க் காலில் நிகழ்த்தப்பட்ட கொடூர குற்றங் களுக்கு சமனான குற்றங்கள் 2007 இல் கிழக்கின் வாகரையிலும் நிகழ்த்தப் பட்டது. அத்தோடு வடக்கின் வலிகாமத்தில் நடைபெறும் நில அபகரிப்பு போலவே கிழக்கின் சம்பூரில் நிகழும் நில அபகரிப்பும் மிகவும் அபாயகரமானதாகும்.

எனவே ,கிழக்கு மாகாணம் பற்றியும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணைக்குழு போதிய முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று நாம் வேண்டிக் கொள்கிறோம்.

**தமிழ்த் தேசிய அடையாளத்தினால் ,இலக்கு வைக்கப்படுகிறோம்.**

தமிழர்கள் ,அவர்களது தமிழர்கள் என்கிற தேசிய அடையாளத்தினாலேயே தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுகிறார்கள் என்பதை, மனித உரிமைகள் ஆணியாளரின் வாய்மொழிமூல அறிக்கை குறிப்பிடத் தவறியமையை நாங்கள் கவலையுடன் கவனத்தில் கொள்கிறோம்.

குறிப்பாக, (அந்த அறிக்கையில்) மத சிறு பான்மையினர் இலக்கு வைக்கப்படுவதை கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் இலக்கு வைக்கப்படுவதாக பெயர் குறிப்பிட்டு சொல்லப் பட்டிருக்கின்ற அதேவேளை, தமிழர்கள் என குறிப்பிடுவதை தவிர்த்திருப்பது மிகவும் ஏமாற்றத்தை தருகிறது

தமிழர்களின் பிரச்சினை என்ன என் பதனை நியாயமாக புரிந்து கொள்ளவேண் டும். மனித உரிமைகள் ஆணையாளரது வாய் மொழி மூல அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப் பதில் பெரும்பான்மையான சம்பவங்கள், தமிழர்களின் / இலங்கைத்தீவில் தமிழ்தேசத் தின் அடையாளத்தை அழித்து அவர்களை அடிமைப்படுத்தும் ஒரு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைப் பொறிமுறையின் ஒரு பகுதியே ஆகும்.

தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை களை நியாயமாகவும் வெளிப்படையாகவும் புரிந்து கொள்ளல் இங்கு மிகவும் அடிப்படை யானது. அந்த அடிப்படையில் விசாரணை களைக்கொண்டு செல்லுமாறு மனித உரிமை கள் ஆணையாளர் அலுவகத்தை நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்.



# முதலமைச்சர் கனவு காண்பதில்லை...

-துன்னாலைச் செல்வம்-

முன்னர் ஒருவர் கண்ட கனவைத் தாங்கள் நனவாக்க முனைகிறார்கள். முன்னர் கனவு கண்டவர்களின் கனவு நனவாகவில்லை என்பது பற்றி அவர்களுக்குக் கரிசனை இல்லை. அவ்வாறு கனவை நனவாக்க முனைபவர்கள் அதற்கான தந்திரோபாயங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவை அவர்கள் வசம் உள்ளதோ இல்லையோ நான் அறியேன். ஆனால் கனவு கண்டவர்களின் ஆத்ம அனுசரணையாளர்கள் என்று தம்மை அடையாளம் காட்டிக் கொண்டு குட்டையைக் கிளறிக் கொண்டிருக்கின்றார்கள் என்று வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் 15ஆவது மாநாடு வவுனியாவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனவு இருவகைப்படும் பகலில் வரும் கனவு. இரவில் வரும் கனவு. பகலில் வரும் கனவு பொய்த்துப் போய் விடும் என்று சொல்வார்கள். இரவில் தூக்கத்தில் வரும் கனவு பலிக்கும் என்றும் ஆனால் விடிந்த பின் என்ன கனவைக் கண்டோம் என்று ஞாபகத்தில் வர முடியாமல் இருக்கும்.

ஆனால் எமது மண்ணில் "போராடினால் தான் வாழ்வு" என்ற ரீதியில் இளைஞர்கள் ஆயுதம் தூக்கிப் போராடினார்கள். மூன்று தசாப்த காலம் இடம் பெற்ற இந்த ஆயுதப் போராட்டம் மூலம் உலக நாடுகளுக்கு எமது மண்ணில் இனப் பிரச்சினை இருக்கிறது என்பதை வெளிக் காட்டினார்கள். இதனால் சர்வதேசம் ஈழத் தமிழர் பிரச்சனையில் இலங்கையை திரும்பிப் பார்த்தது. இது தெரியாமல் எவரும் எமது மண்ணில் இருக்க முடியாது.


இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் எல்லோரையும் கனவு காணுங்கள் என்று சொல்லி இருந்தார். அப்பொழுதுதான் உங்களின் இலக்கை அடையமுடியும் என்று தெரிவித்தார். அந்தளவுக்கு கனவு காண்பது ஒரு மனிதனின் வாழ்வை மாற்றக் கூடிய சூழலை ஏற்படுத்தும்.

போராளிகள் ஒவ்வொருவரும் கனவு கண்டார்கள். தமது உயிரை தாய் மண்ணிற்காக விடும் கடைசி தறுவாயிலும் எமது தாய் நிலம் காக்கப்பட வேண்டும் என்று கனவு கண்டார்கள். இப்படிப்பட்ட கனவை கொச்சைப்படுத்த முடியுமா? ஈழ மண்ணில் பிறந்து போரிற்கு முகம் கொடுத்து பல பாதிப்புக்களை எதிர்கொண்டு வாழும் ஈழத் தமிழர்கள் கனவை கொச்சைப்படுத்த மாட்டார்கள். அந்தளவுக்கு எமது மண் மீதான அக்கறை அதிகமாக இருக்கிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இது சம்பந்தமாக மேடையில் பேசித்தான் தேர்தலில் வெற்றி வாய்ப்புக்களை அள்ளிச் சென்றது என்பது கண்கூடு.

ஆட்சிக்காகவும் பதவிக்காகவும் கதிரை ஏறுபவர்கள் எதனையும் தாம் நினைத்தபடி பேசிவிடலாம் என்று நினைக்கிறார்கள் போலும். இதே கூட்டமைப்பில் அங்கம் வகித்தவர்கள் புலிகள்தான் ஏக பிரதிநிதிகள். அவர்கள் வலியுறுத்திய சுயநிர்ணய உரிமைதான் தமது அரசியல் இலக்கு என்று கூறி 2001ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற கதிரைகளை சூடாக்கினார்கள். இதே விக்கினேஸ்வரனுக்கு முதலமைச்சராக வருவதற்கு பிரபாகரன் மாவீரனாக தெரிந்தார். ஆனால் தற்போது முன்னர் கனவு கண்டார்கள். அவர்களுக்கு தீர்க்கதரிசனம் இல்லை என்று புத்திமதி கூறும் இவர் அடுத்த தேர்தலிலும் புலிப்பாட்டு பாடிய படி வீர வசனம் பேசுவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் தற்பொழுது முழு நேர பக்கா அரசியல் விக்னேஸ்வரன் ஆகிவிட்டார்.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இப்போது தான் ஞானம் பிறந்திருக்கிறது. நாங்கள் நீண்டகாலமாகச் சொல்லி வந்தவற்றை இப்போது தான் சொல்கிறார்கள். இதன் மூலம் எங்களுடைய பாதைக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வந்திருக்கிறது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். உணர்ச்சிப் பேச்சுக்களாலும் வெற்றுக் கோஷங்களாலும் அரசியல் தீர்வை அடைய முடியாது. நடைமுறைச் சாத்தியமான வழியில் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநாட்டில் சம்பந்தன் தெரிவித்த விடயத்தைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு தெரிவித்தார். சம்பந்தனின் முடிவு கண்கெட்ட பின்னரான சூரிய நமஸ்காரம். காலம் கடந்த ஞானம் எனினும் இறுதியில் எமது பாதைக்கே அவர்கள் வந்திருக்கிறார்கள். பேசியதை செயலில் காட்ட முன்வருவார்களானால் அவர்களுடன் நாங்களும் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறோம். நாம் அரசுடன் இருக்கிறோம் அரசுடன் இருந்து தான் எமது மக்களுக்குத் தேவையானவற்றைக் கேட்டுப் பெறுகிறோம் அரசுடன் இருந்துகொண்டே அரசியல் தீர்வொன்றைப் பெறவும் முயன்றும் வருகிறோம்.


தமிழ்க் கூட்டமைப்பின் தலைமையும் இப்போது அந்தப் பாதைக்கு வந்திருக்கிறது என்று டக்ளஸ் மேலும் தெரிவித்தார்.



டக்ளஸ் அரசுடன் இணைந்து போவதால் தான் மக்கள் அவரை தெரிவு செய்யவில்லை. கூட்ட மைப்பை தெரிவு செய்தார்கள். இவை அனைத்தும் கூட்டமைப்பினரிற்குத் தெரியும்.

விடுதலைப்புலிகளின் போராட்டம் தொடர்பாக பல்வேறுகருத்துகள் கூறப்பட்டன. புலிகளின் சரிகளையும் பிழைகளையும் பற்றி பேசப்பட்டன. ஒரு விடயத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். இன்று உலகம், சர்வதேச சமூகம், ஐ.நா.சபை எம்மை திரும்பி பார்க்கின்றதென்றால் அதற்கு அடித்தளமிட்டது புலிகளின் போராட்டமே என்று இதே தமிழரசுக் கட்சி மாநாட்டில் தான் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார். போராடாமல் உலகம் எம்மை திரும்பிப் பார்க்காது இலங்கை அரசின் மீது அழுத்தம் செலுத்துங்கள் என்று நாம் அமெரிக்காவையும் ,இந்தியாவையும், ஐ.நா.வையும் வலியுறுத்த வேண்டும் அப்போதுதான் அது செயற்படுத்தும் அழுத்தமாக மாறும் என்றார்.

> **ஒரு விடயத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். இன்று உலகம், சர்வதேச சமூகம், ஐ.நா.சபை எம்மை திரும்பி பார்க்கின்றதென்றால் அதற்கு அடித்தளமிட்டது புலிகளின் போராட்டமே என்று இதே தமிழரசுக் கட்சி மாநாட்டில் தான் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். போராடாமல் உலகம் எம்மை திரும்பிப் பார்க்காது இலங்கை அரசின் மீது அழுத்தம் செலுத்துங்கள் என்று நாம் அமெரிக்காவையும், இந்தியாவையும், ஐ.நா.வையும் வலியுறுத்த வேண்டும் அப்போதுதான் அது செயற்படுத்தும் அழுத்தமாக மாறும்.**



கனவுகள் இருக்கும் போது தான் தாயகம் மீட்கப்படும். இல்லாது போயின் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக வாழும் நிலையே ஏற்படும். கடந்தகால போராட்டம் தான் எம்மை சர்வதேச மட்ட நகர்வுக்கு இட்டுச் சென்றது என்பதை முதலமைச்சர் எப்பொழுது தான் புரிந்து கொள்ளப் போகிறாரோ என்பது எமக்குத் தெரியவில்லை.




# நூல் அறிமுகம்

## "தேசவழமைச் சட்டம்"

**செ.செல்வகுணபாலன்**
**வெளியீடு-குமரன் புத்தக இல்லம்**
**விலை-450.00**

எமது கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றன இன்று தொலைந்து கொண்டு போகின்ற தன்மையில் இருக்கின்றன. ஒவ்வொரு பிரதேசங்களும் தமெக்கென சில மரபுகளை பின்பற்றுகின்ற தன்மையில் இருக்கின்றது. இதனால் ஒரு புதிய சமூகம் குறித்த பிரதேசத்திற்கு வருகின்ற போது நிலையான மரபுகள் இல்லாமல் ஒழிக்கப்படுகின்றது. இந்த வரலாற்று பின்புலங்களை அறிந்து கொள்வதற்கு ஆதாரங்களாக நூல்களே உற்பவிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் படைக்கப்பட்ட நூலே செ.செல்வகுணபாலன் அவர்களின் "தேசவழமைச் சட்டம்" என்ற நூலாகும்.

தேசவழமைச் சட்டம் என்ற இந் நூலானது வடமாகாண மக்களுடைய வழக்காற்றுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தேசவழமையின் அறிமுகத்தை சுருக்கமாக எடுத்துக் கூறியிருப்பதுடன் தேசவழமையினால் ஆளப்படுபவர்கள் அன்றாட வாழ்வில் ஏற்படக்கூடிய சட்டப்பிரச்சினைகள் தொடர்பாகவும் இந் நூல் எடுத்துரைத்துள்ளது.

இந் நூலின் ஊடாக தேசவழமையினால் ஆளப்படுபவர்களிடையே காணப்படும் முதுசம், சீதனம் மற்றும் தேடிய தேட்டம் போன்ற ஆதனங்களின் வரைவிலக்கணத்தை விளக்கியிருப்பதுடன் வழக்காற்றுச் சட்டத்தின் கீழான நிலையையும் தற்போதைய நிலையையும் எடுத்துக்காட்டுகின்றது.

வடமாகாணத்தை சார்ந்த ஒருவர் அல்லது வேறு இடத்தையோ நாட்டையோ சார்ந்தவர் வடமாகணாத்தின் தேசவழமை பற்றி அறிய வேண்டுமானால் இன் நூலை வாசிக்கின்ற போது அவர்களுக்கு மிகுந்த ஆதாரமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ள முடியும்.

நூலின் உள்ளடக்கங்கள் பல்வேறுபட்ட அம்சங்களை தலைப்புக்களாகக் கொண்டிருக்கின்றது. அதாவது தேசவழமையின் அறிமுகம், தேசவழமையின் ஏற்புடைமை, தேசவழமையின் கீழான திருமணம், தேசவழமையின் கீழான ஆதனம், தேசவழமையின் கீழான ஆதனத்தின் முன்வாங்குரிமை போன்றனவும் பின்னிணைப்பாக யாழ்ப்பாண திருமண சரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டம் மீதான குறிப்பு, தேசவழமை முன்வாங்குரிமைக் கட்டளைச் சட்டம் மீதான குறிப்பு, தேசவழமை தீர்க்கப்பட வழக்குகளின் நிரல்கள் போன்றனவும் காணப்படுகின்றது இவ்வாறான தலைப்புகளின் கீழ்தேசவழமைச் தொடர்பாக இந் நூலின் ஆசரியர் பல விடயங்களை தேடிச் சென்றிருக்கின்ற தன்மை பாராட்டுக்குரியதே! வடமாகாணத்தினுடைய தேசவழமை பற்றி அறியவேண்டுமாயின் இந்த நூலின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

---

**தோட்டத் தொழிலாளர்**

16 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

மைத்ரி உட்பட மூன்று ஸ்தாபனங்கள் கூட்டாக மேற்கொண்ட ஆய்வின்படி மூன்று வருடங்களுக்குள் தாயகம் திரும்பியோரில் 55 வீதத்தினர் வறுமை காரணமாக செத்து மடிந்துள்ளனர்.

முடிவாக மலையக மக்களின் உண்மையான நிலையை அறிந்து புரிந்துகொண்டு தமது வர்க்கச் சகோதரர்களுக்கு ஆதரவாக சிங்கள மக்கள் குரல்கொடுப்பதை தடுத்து அவர்களுடைய ஒத்துழைப்புடன் மலையகத் தொழிலாளரை மூர்க்கமாகச் சுரண்டி லாபம் ஈட்டுவதையும், தேசிய தப்பபிப்பிராயத்தை ஊட்டி வளர்த்து தனக்கெதிராக கிளர்ந்தெழும் மக்கள் சக்தியைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஆளும் வர்க்கம் இத்தகைய பொய்மைகளை திட்டமிட்டு பரப்பிவருகிறது.

மறுபுறத்தில் மலையகத்தைச் சேர்ந்த தனது விசுவாசமான கையாட்களுக்கு மந்திரிப்பதவி எனும் எலும்புத்துண்டைக் கொடுத்து இத்தகைய தப்பபிப்பிராயங்களை சிங்கள மக்கள் மத்தியில் மேலும் வளர்ப்பதுடன் மலையக மக்கள் மத்தியில் உருவாகும் போராட்டங்களை அந்தக் கையாட்களைக் கொண்டே முறியடிக்கிறது. அத்துடன் சர்வதேச அரங்கில் தனது இனவாதத் தன்மையை மூடிமறைக்கவும், அதே கையாட்களை கவசமாகப் பாவித்துக் கொள்கிறது. சிங்களவர் தம்மவர் என்று போராட்டம் வரும் போது ஆளும் வர்க்கம் அனுதாபம் காட்டுகிறதா? ஏனைய தேசிய இனங்கள் மீது கொண் காழ்ப்பு சிங்கள மக்களுக்கு என்ன லாபத்தை இதுவரை பெற்றுத்தந்திருக்கிறது? சாகாமல் உயிர்வாழ்வதெப்படி என அன்றாட வாழ்க்கையுடன் போராடும் அவர்களது ஆத்திரத்தையும் அதிருப்தியையும் திசைதிருப்பத்தான் அது பயன்பட்டது. இதனால் சிங்கள மக்களுந்தான் ஏனைய மக்களைப் போலவே துயரச் சேற்றில் ஆழப் புதைகின்றனர். இதிலிருந்து ஒன்று மாத்திரம் தெளிவு

ஏனைய தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு தனது தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கிக்கொண்டிருக்கும் வரைக்கும் சிங்கள மக்கள் தமது விடுதலையை பெறவே முடியாது.

முற்று

---

**தமிழரசுக்கட்சி** 08 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

ஆளுநரை சந்தித்து சலுகைகளை பெறுகின்றார்களே அதனை உங்களால் தடுக்க முடிந்ததா? ஐ.நா மனித உரிமை பேரவையில் இந்தியா தமிழ்மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த பின்னரும் இந்தியாவிற்கு பின்னால் இழுபட்டுச் செல்லும் அரசியல் தேவைதானா? இந்திய மத்திய அரசினை அசைக்கும் சக்தி தமிழ்நாட்டு சக்திகளுக்கு இருக்கும்போது கணவன் மனைவி உறவுக்குள் தலையிட வேண்டாம் எனக் கூறி தமிழ் நாட்டு சக்திகளை பலவீனப்படுத்தவில்லையா? இந்தியாவிற்கும் மேற்குலகத்திற்கும் பின்னால் இழுபட்டுச் செல்வது தான் யதார்த்த அரசியல் என்றால் அதற்கு ஒரு தலைமைதேவையா? அது அடிமைக்கூட்டங்கள் செய்யும் வேலையல்லவா? எப்போதும் யதார்த்தத்திற்கும் இலக்கிற்கும் இடையே இடைவெளி இருக்கும். செயல் தான் அவற்றால் மாற்றங்கள் கொண்டு வரும். அந்த மாற்றங்களுக்காகப் போராடுவதற்குத் தான் தலைமை தேவை. விக்கினேஸ்வரன் தமிழரசுக்கட்சியில் முதியவர்கள் தான் அங்கம் வகிக்கின்றனர். நடுத்தர வயதினரும் இளைஞர்களும் பெண்களும் அங்கம் வகிப்பதில் அவர்களையும் இணைக்கவேண்டும் எனக் கூறியிருக்கின்றார். தமிழரசுக்கட்சியும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் மக்களை பச்சையாக ஏமாற்றுகின்ற பம்மாத்து கட்சியாக இருக்கின்றபோது இவர்கள் எப்படி இணைந்து கொள்வார்கள்? போரினால் பாதிக்கப்பட்ட போராளிகள் மக்களை கூட்டமைப்பினர் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சிறையில் இருப்பவர்களை கவனிப்பதில்லை. கூட்டமைப்பில் பல சட்டத்தரணிகள் இருக்கின்ற போதும் சிறையில் இருப்பவர்களின் வழக்குகளை முன்னெடுப்பதில்லை. விடுதலைப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சுமைகளை அந்தந்த குடும்பங்கள் தான் இன்று தனித்து சுமந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் கூட்டமைப்பிலோ தமிழரசுக்கட்சியிலோ சேர்ந்து பணியாற்றுவதற்கு பிரக்ஞை பூர்வசக்திகள் யார்தான் முன்வருவார்கள்? வருபவர்கள் எல்லாம் பிழைப்பு அரசியல் நடாத்துபவர்களே! தமிழரசுக்கட்சி மாநாட்டில் 15 தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல பழைய பல்லவிகளாக இருந்த போதும் மூன்று தீர்மானங்களை குறிப்பிட வேண்டியுள்ளது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல், ஐ.நா விசாரணைக்கு சாட்சியமளிக்க ஒழுங்குகளைச் செய்தல், 2015 தையில் போராட்டம் நடாத்துவது என்பவையே அவையாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதால் தமிழ் மக்களுக்கு என்ன பயன்? இந்தியா தனது செல்வாக்கினை நிலை நிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒப்பந்தமே அது. இதனை நிறைவேற்றச் சொல்வதன் மூலம் மாகாணசபை முறையை ஏற்கும்படி தீர்மானம் கட்டளையிடுகின்றது. தோல்வியடைந்த மாகாண சபை முறையைத்தான் இந்தியா தமிழ் மக்கள் தலையில் கட்டிவிட விரும்புகின்றது. அதற்கு தமிழரசுக் கட்சியும் துணை போகின்றது.

இரண்டாவது ஐ.நா விசாரணைக்கு சாட்சியமளிக்க ஒழுங்குகளைச் செய்வது. இது விடயத்தில் எதையுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, தமிழரசுக் கட்சியோ செய்யவில்லை. இந்தியா விரும்பாது என்பதற்காகத்தான் இவை எவற்றையும் முன்னெடுக்கவில்லை. அனந்தியும், ரவிகரனும் மட்டும் காணாமல் போனோர் பற்றிய சில சாட்சியங்களைத் தொகுத்துள்ளனர். இதுபற்றி மிகவும் சிரமப்பட்டு சாட்சியங்களை தொகுத்து வருவது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியே. ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் பணிகளை அவர்கள் செய்கின்றனர்.

மூன்றாவது 2015 தையில் அரசியல் தீர்வு வராவிட்டால் போராட்டம் நடாத்துவது. இது வெறும் தேர்தல் முழக்கம். கடந்த ஐந்து வருடங்களாக எதுவும் செய்யாதவர்கள், மக்கள் தாங்களாகவே நடாத்திய போராட்டங்களை வீரியமிழக்க செய்தவர்கள் இனிமேல் வெட்டிப்பிடுங்குவார்கள் என எவரால்தான் நம்ப முடியும். இது முழுக்க முழுக்க பம்மாத்து தீர்மானம்.

---

**வடக்குமாகாணம்**

15 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

விஸ்தரிப்புக் கண்டிருக்கிறது. எதையும் ஊடகங்கள் பிரச்சினையாக வெளியிட்ட உடனேயே வடமாகாண சபையும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூச்சலிடுவர். அதற்கெதிராகக் கிளர்ந்தெழுவர். பின்னர் அந்த விடயம் அப்படியே அடங்கி அதை மறந்தேவிடுவர். அவரவர் கொழும்பைப் பார்த்து நடையைக் கட்டியும் விடுவர். உதாரணத்திற்கு அண்மையில் தான் ஒரு பிரச்சினை வந்தது. அதாவது நெடுந்தீவிலிருந்து குதிரைகள் கடற்படையினரால் கடத்தப்படுவதாக செய்திகள் வந்தன. அந்த செய்தி வந்தவுடன் வடமாகாண சபையில் இருக்கின்ற அநேக உறுப்பினர்கள் பொங்கியெழுந்தனர். ஒரு அறிக்கை எழுதி கடற்படைக்கு அனுப்பிவிட்டு, குதிரைகளை மீட்டுவிட்ட கணக்கில் ஊடகங்களிடம் பேசியதோடு அடங்கிவிட்டனர். இதற்காகவா மக்கள் உங்களை அரியணையேற்றினார்கள்? தம் பிரச்சினைகளை ஆயுதங்களின் முன்னால் பேச முடியவில்லை என்றும், அதனை உங்களுக்குத் தாம் வழங்கிய வாக்கு அதிகாரங்களைக் கொண்டு நிறைவேற்றுவீர்கள் என்கிற நம்பிக்கையில்தானே வாக்களித்தார்கள். ஆனால் நடப்பது?

வட மாகாண சபை அமைச்சுகளுக்குள் இன்னொரு விமர்சிக்கத்தக்க திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. அமைச்சுக்குள் இருக்கும் பதவிகளை தம் சொந்தங்கள், நெருங்கியவர்கள், நண்பர்கள் என அவர்களுக்குள்ளேயே பகிர்ந்து கொண்டனர். பிரதேச சபைகளின் அளவிலும், அவர்கள் சிபார்சு செய்கின்றவர்களுக்கே பதவிகள் என்கின்ற நிலை உருவாகியது. இந்த விடயங்களை அவ்வப்போது சமூக வலைதளங்களில் யாராவது எழுதினாலும் அது குறித்து எந்த அமைச்சரும் பதிலளிப்பதில்லை. அதைக் கண்டுகொள்வதுமில்லை.

---

**ஊவா தேர்தல்** 07 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

என்பது உண்மைதான். ஆனால் அவற்றை நகர்த்துவதற்கு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய துணிவான தலைவர்கள் எதிர்க்கட்சியில் இல்லை. பிறேமதாசா காலத்தில் சந்திரிகா, மகிந்தர் போன்ற துணிவான தலைவர்கள் இருந்தனர். சந்திரிகா சூரிய கந்தப்படுகொலை நிகழ்வை அரசியலாக்கினார். மகிந்தர் இந்த விவகாரங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரை கொண்டு சென்றார். தற்போது இவ்வாறான துணிவான தலைவர்கள் கிடையாது. முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவிற்கு ஆரம்பத்தில் சிறிது இடமிருந்தாலும் தற்போது அது நன்றாகவே கீழிறங்கி விட்டது. ஊவாமாகாணசபைத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட அவரது கட்சியால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மூன்றாவது ஐக்கிய தேசியக் கட்சியின் மரபு ரீதியான வாக்குகள் அதனை நோக்கித் திரும்பத் தொடங்கியுள்ளதால் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு அக் கட்சி சம்மதிக்குமா? என்பது சந்தேகமே! பொது வேட்பாளரை நிறுத்தாவிட்டால் எதிர்க்கட்சிகள் ஐக்கியப்பட்டு செயற்படப் போவதில்லை. இந்த ஐக்கியம் இல்லாவிட்டால் மகிந்தரின் வீழ்ச்சியை ஒரு எல்லைக்கு மேல் எதிர்பார்க்க முடியாது.

சினிமா

# காவல் கோபுரத்தில் ஒரு காதல்

எஸ். இராமகிருஷ்னன்

அமெரிக்காவில் இருந்து இயங்கி வரும் "ஃபிலிம் மூவ்மெண்ட்" என்ற சினிமா கிளப் உலகின் சிறந்த படங்களைத் தரமான டிவிடீகளாக வெளியிட்டு வருகிறது. குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளின் முக்கிய இயக்குனர்களை உலக அளவில் அறிமுகப்படுத்துவது அவர்களின் நோக்கம். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சிறந்த உலகத் திரைப்படங்களின் டீவிடீகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஃபிலிம் மூவ்மெண்ட்டில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மாதம் தோறும் சிறந்த டீவிடீவிகளை அனுப்பி வைக்கிறார்கள். ஒவ்வொரு டீவிடீயிலும் ஒரு சிறந்த குறும்படம் ஒன்றும் இடம்பெற்றிருப்பது இவர்களின் சிறப்பு.

ஃபிலிம் மூவ்மெண்ட் ஒரு படத்தைத் தேர்வு செய்கிறது என்றாலே அது சிறந்த படமாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையை அவர்களின் முந்தைய தேர்வுகளான Salvo, Cannibal, Ginger and Cinnamon, Caeol's Journey, Wolves in the snow, Antares, Camp Fire, Viva Cuba, Le Grand Voyage, Light of my eyes, To Kill a Man, Dreams of Dust, Arranged போன்ற படங்கள் உறுதி செய்திருந்தன.

ஃபிலிம் மூவ்மெண்ட் வெளியிட்ட துருக்கிப் படமான The Watch tower படத்தை பார்த்தேன். இஸ்தான்புல்லைச் சேர்ந்த பெண் இயக்குனரான Pelin Esmer இப்படத்தை இயக்கியுள்ளார்.

காட்டுத் தீயைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட காவல் கோபுரம் ஒன்றில் வேலை செய்வதற்காக வருகிறான் நிகாத். அடர்ந்த காட்டின் உள்ளே தனியான காவல்கோபுரம், ஒற்றை மனிதனாகக் கையில் ஒரு வயர்லெஸ் உடன் அவன் பகலும் இரவும் காட்டினைக் கண்காணித்தபடியே இருக்கிறான். "Situation normal" (சிற்றிவேசன் நோர்மல்) என்று வயர்லெஸில் வனத்துறை அலுவலகத்திற்குச் சேதி சொல்வதுதான் அவனது முக்கிய வேலை.

காட்டில் எங்காவது நெருப்பு பற்றியிருக்கிறதா எனக் கண்காணிக்கும் நிகாத் மனதில் அணையாத துயர நெருப்புடன் வாழ்ந்துகொண்டிருக்கிறான். சாலை விபத்தில் இறந்துபோன மனைவி, மகள் பற்றிய நினைவுகள் அவனை வதைத்துக் கொண்டிருக்கின்றன. தனிமை அவனுக்கு வடிகாலாக இருக்கும் என நம்புகிறான்.

மலைப்பாதையில் செல்லும் பேருந்து ஒன்றில் நிகாத் பயணம் செய்து வந்து இறங்குவதில்தான் படம் துவங்குகிறது. இந்தப் பேருந்தில் பயணிகளுக்கான உதவியாளராக வேலை செய்கிறாள் ஷெகர். இவள் ஒரு இளம்பெண். பல்கலைக்கழக மாணவி. படிப்பை பாதியில் கைவிட்டவள்.

பேருந்து மலையில் உள்ள பேருந்து நிறுத்தம் ஒன்றைச் சென்றடைகிறது. இங்கே சிறிய உணவகம் ஒன்றிருக்கிறது. பயணிகள் சாப்பிடுவதற்காக இறங்குகிறார்கள். பேருந்து உரிமையாளன் ஷெகர் தங்குவதற்காக உணவகத்தை ஒட்டிய தங்கும் அறையை ஒதுக்கித் தருகிறான். அந்த அறையின் கட்டிலில் வந்து விழும் ஷெகர் எவ்வளவு சலிப்புடன் வாழ்கிறாள் என்பது சிறுசிறு காட்சிகளின் மூலம் அழகாகக் காட்சிப்படுத்துகிறது.

காட்டினுள் நடந்து பிரதானசாலையை அடைந்து கடந்து செல்லும் வாகனம் ஒன்றில் உதவி கேட்டு மலைநகருக்கு வந்து சேர்கிறான்.

அங்கே உணவகத்தில் மீண்டும் ஷெகரைச் சந்திக்கிறான். ஷெகருக்குப் பேருந்து வரவேற்பாளர் வேலை



பிடிக்கவில்லை. ஆனால் வருமானத்திற்காக ஏதாவது வேலை செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்திலிருக்கிறாள்.

தனிமையை விரும்பி ஏற்படுத்திக் கொள்ளும் நிகாத்தும், கட்டாயத்தால் தனியாக வாழும் ஷெகரும் ஒரே மன நிலையின் இருவேறு வடிவங்கள். கடந்த காலம்தான் இருவரின் பிரச்சினையும் அதிலிருந்து விடுபட முயற்சிக்கிறார்கள். அதற்காகப் போராடுகிறார்கள்.

ஒருமுறை பேருந்தில் பயணம் செய்துகொண்டிருக்கும்போது அவளுக்கு வாந்தி வருகிறது. அப்போதுதான் அவள் ஒரு கர்ப்பிணி எனத் தெரிய வருகிறது. ஆனால் அதை மறைத்துக்கொண்டு அவள் வேலை செய்து கொண்டிருக்கிறாள். ஏன் மறைக்கிறாள் என ஆரம்பக் காட்சிகளில் தெரிவதில்லை.

இதற்கிடையில் ஒரு நாள் அருகில் உள்ள நகரிலுள்ள தனது வீட்டிற்குப் போகிறாள் ஷெகர். அங்கே அம்மாவிடம் தான் கர்ப்பிணி என்பதைத் தெரிவிக்கிறாள். அம்மா உடைந்துபோய் அழுகிறாள். இதற்குள் அவளது அப்பா வந்து விடுகிறார். படிக்கப் போன பெண் ஏன் அவளது மாமா வீட்டில் தங்கிக்கொள்ளாமல் வெளியே தங்கியிருக்கிறாள் என ஷெகரின் அப்பா சண்டைபோடுகிறார். ஆத்திரம் அடைந்த ஷெகர் தன் வீட்டில் இருந்து வெளியேறி வந்துவிடுகிறாள்.

கர்ப்பிணியான ஷெகர் தனி ஆளாக உணவகத்தில் எவ்வளவு சிரமங்களைச் சந்திக்கிறாள் என்பதைக் காட்சிகள் விவரிக்கின்றன.

ஒரு நாள் அவளுக்குக் குழந்தை பிறக்கிறது. தானே பிரசவம் பார்த்துக் கொள்கிறாள். மனதைவிட்டு அகலாத காட்சியது. பிறந்த குழந்தையை யாரும் அறியாமல் தூக்கிக்கொண்டு குப்பைத் தொட்டியில் போட்டு விடுகிறாள். அதைக் கவனித்த நிகாத் குழந்தையைத் தான் எடுத்துக்கொண்டு காவல்கோபுரத்திற்குப் போகிறான். அங்கே அவனே குழந்தையைப் பராமரிக்கத் துவங்குகிறான். இன்னொரு பக்கம் மார்பில் பால் கட்டிக் கொண்ட ஷெகர் தவிக்கிறாள். பிரசவித்த உடல் என்பதால் நடக்கக்கூடமுடியவில்லை.

குழந்தைக்குப் பால் தரவேண்டும் என ஷெகரையும் அவன் தனது இடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறான். வேண்டாத குழந்தையை இஷ்டமேயில்லாமல் பராமரிக்கிறாள் ஷெகர்.

மனைவியை இழந்த நிகாத்தும், கைக்குழந்தையுடன் வாழும் ஷெகரும் எப்படி ஒருவருக்கு ஒருவர் நெருக்கமாக மாறுகிறார்கள் என்பதைப் படம் விவரிக்கிறது. அது ஒருவகையான காதல். காமம் கடந்த காதல். காட்டுத் தீயைப் போல அது ஒரு விநோதம். ஷெகரைவிடவும் குழந்தையைக் கவனிப்பதில் அதிக ஈடுபாடு காட்டுகிறான் நிகாத்.



ஒரு நாள் காவல் கோபுரத்தைப் பார்வையிட வரும் உயரதிகாரியிடம் அவளைத் தனது மனைவி என அறிமுகப்படுத்துகிறான். இனிமேல் குடும்பத்துடன் இங்கேயே வசிக்கலாம் என அனுமதித்துப்போகிறான் அதிகாரி.

ஏன் அவனிடம் பொய் சொன்னாய் என ஷெகர் கோபித்துக் கொள்கிறாள். ஒருஉயிரை இழந்தவனுக்குத் தான் அதன் முக்கியத்துவம் தெரியும் என வாதிடுகிறான் நிகாத்.

"நீ யார் எனது குழந்தையைப் பராமரிக்க?" எனச் சண்டையிடுகிறாள். உனக்குக் குழந்தை மீது என்ன கோபம் என நிகாத் கேட்கிறான். "இது அப்பன் பேர் தெரியாத குழந்தை நீ இதன் அப்பன் எனச் சொல்வதை நான் விரும்பவில்லை" என கத்துகிறாள்.

பேருந்து படத்தின் முக்கியமான இணைப்பு சரடு. அதுதான் காட்டையும் நகரத்தையும் ஒன்றிணைக்கிறது. ஒரு வகையில் அதுதான் புறஉலகம். அதன் ஓட்டுனர், பயணம்செய்யும் பயணிகள், பேருந்தை நடத்தும் உரிமையாளன், அவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்தும் புற உலகின் அடையாளங்களாக மாறுகின்றன.

அகஉலகம் என்பது விரும்பி ஏற்றுக்கொண்ட தனிமை. அதைத்தான் நிகாத்தும் ஷெகரும் அடைகிறார்கள். அவர்கள் மட்டுமின்றி உணவகத்தில் வேலைசெய்யும் சமையற்காரன், பேருந்து ஓட்டுனர் என அத்தனை பேரும் தனிமையின் உருவங்களே. பரந்துவிரிந்த மலைப் பிரதேசம் அவர்களை ஆறுதல்படுத்துகிறது. நிகாத் தனது பைனாகுலர் வழியாகக் கடந்து செல்லும் பேருந்தை வேடிக்கை பார்த்தபடியே இருக்கிறான். அது உலகோடு ஒட்டாத அவனது வாழ்க்கையின் வெளிப்பாடு.

படிப்பதற்காகச் சென்ற இப் பெண் எப்படி வன்பாலுறவிற்கு உள்ளாகி கைவிடப்படுகிறாள் என்பதை ஷெகர் மூலம் அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறார் பெலின்.

வாழ்க்கைத் துயரம் இரண்டு எளிய மனிதர்களை எப்படி ஒன்று சேர்க்கிறது என்பதை அழகாகச் சித்தரிக்கிறது இப்படம். Olgun Simsek நிகாத்தாகவும் Nilay Erdonmez ஷெகராகவும் சிறப்பாக நடித்துள்ளார்கள். இப்படத்திற்காக நிலே சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றிருக்கிறார்.

ஒரு சிறுகதை அளவே படத்தின் கதையுள்ளது. அதைத் திரைக்கதை ஆக்கியதில்தான் பெலின் தனித்து நிற்கிறார். இரண்டு தனிக்கோடுகள் போலத் திரைக்கதையில் கதாபாத்திரங்கள் அறிமுகமாகிறார்கள். அவர்கள் ஒன்று சேரும் புள்ளி உணவகம். ஒன்றைவெட்டி ஒன்று செல்லும் அந்தக் கோடுகள் ஓரிடத்தில் இணைகின்றன. என்பது போலத் திரைக்கதை பின்னப்பட்டிருக்கிறது. நீண்ட காட்சிகள் படத்தில் கிடையாது. மிகக்குறைவான வசனம். தனிமை நிலையைப் பார்வையாளன் உணரும்படியான காட்சிப் படுத்தல்.. அதுவே படத்தினைச் சிறந்த கலைப்படைப்பாக்குகிறது.

> **ஒன்றைவெட்டி ஒன்று செல்லும் அந்தக் கோடுகள் ஓரிடத்தில் இணைகின்றன. என்பது போலத் திரைக்கதை பின்னப்பட்டிருக்கிறது. நீண்ட காட்சிகள் படத்தில் கிடையாது. மிகக்குறைவான வசனம். தனிமை நிலையைப் பார்வையாளன் உணரும்படியான காட்சிப்படுத்தல்..**

புதிய கதைக்களம், இரண்டே முக்கிய கதாபாத்திரங்கள், யதார்த்தமான நடிப்பு, அழகான ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு, தேர்ந்த இயக்கம் அத்தனையும் ஒன்று சேர்ந்து இப்படத்தை அரிய அனுபவமாக்கிறது.

நன்றி - உயிர்மை

## அவள் பெயர் தமிழ்

எங்கிருந்தோ ஒரு
குரல் என்னைப் பெயர்
சொல்லித்தான்
அழைத்தது.
ஆனால்.
மொழியில்லை
தொனியில்லை- ஏதோ
ஒரு வேறுபாடு தெரிகிறது.
ஓ...
அவள் தான்..அவளே தான்,
ஏன் இன்று இப்படி
ஆகிவிட்டாள்.
அன்று....
என்னை மட்டுமல்ல
பல இலட்சம் பேரை
தனக்குள் வைத்திருந்தவள்
பார் போற்ற பண்போடு
வாழ்ந்தவள்
இவளுக்கு மரணம் என்பதே
கிடையாது
அப்படிப்பட்டவள்.
ஆக்ரோசமானவள்
ஆனாலும்...
பேரழகி
அமைதியானவள்.
கடல் கடந்து தான் - நான்
சென்றாலும் என்னோடு
வந்து விடுவாள்-சற்று
நான் அவளை மறந்தாலும்
மரணம் வரை என்னோடு
வாழ்ந்திடுவாள்..
இன்று...
யாருமே கவனிக்கவில்லை
எங்களுக்காக
வாழ்ந்தவள்
எங்களுக்காகவே
தினமும் செத்துக்
கொண்டிருக்கிறாள்.....
அவள் வேறு யாருமல்ல
அவள் பெயர் தமிழ்
எங்களுக்கான தமிழ்
எம் தமிழ்மொழி....

சக்தி

## உளசல்

பொறுக்கி
எடுக்க முடியாது
சிதைவுகளாகும்
உடலை
எத்தனை தடவைகள்
அதே இடத்தில்
புதைக்க முடியும்
புதைத்த இடங்களை
மறைத்து
இன்னும்
எத்தனை தடவைகள்
சிதைவுகளாக்க முடியும்

-செல்வக்குமார்-

## இரண்டாவது சூரியஉதயம்

அன்றைக்குக் காற்றே
இல்லை
அலைகளும் எழாது
செத்துப் போயிற்றுக்
கடல்.
மணலில் கால் புதைதல்
என
நடந்துவருகையில்
மறுபடியும் ஒரு
சூரியஉதயம்.
இம்முறைதெற்கிலே-
என்ன நிகழ்ந்தது?
எனது நகரம்
எரிக்கப்பட்டது
எனது மக்கள்
முகங்களை இழந்தனர்.
எனது நிலம்,
எனது காற்று
எல்லாவற்றிலும்
அந்நியப் பதிவு.
கைகளைப்பின்புறம்
இறுகக் கட்டி
யாருக்காகக்
காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது
நெருப்பு
இதன் சேதியை
எழுதியாயிற்று!
இனியும் யார்
காத்துள்ளனர்?
சாம்பல்
பூத்ததெருக்களிலிருந்து
எழுந்துவருக.

சேரன்

## கலவரங்களுக்குப் பின்னர்

கலவரங்களுக்குப் பின்
விரைந்தோடிப்
பொறுக்கினான்அவன்
அரைகுறையாய்
எரிந்துபோன
பென்சில்கள் அழிப்பான்கள்
மற்றும் பழையகந்தலான
அரிச்சுவடி உருதுபுத்தகம்
ஒன்றும்.
தரையில் சிதறிய
பெட்டிசட்டிகள்
சிதைந்தகாலணிகள்
கழிசலான "பர்தா"
அவன் கவனிக்கவில்லை.
வயிற்றுக் கொடும்பசியுடன்
பள்ளிக் கூடத்திலிருந்து
அவன் திரும்பிவந்திருக்கும்
பொழுது
தொலைவிலிருந்து
"அம்மாநான் வந்துட்டேன்"
என்றுஅவன் கத்தும் பொழுது
தனக்குஎன்னநேர்ந்திருக்கும்
என்பதை
அவன் அறிந்திருக்கமாட்டான்...

இந்திய ஆங்கிலகவிதை
கலவரங்களுக்குப் பின்னர்
நீரஜா ஜயல் சந்த்
தமிழாக்கம்-ச.கலியாணராமன்

## சிறுகதை

# ஒருபிடிமண்

மலையால மூலம் சியாமளா ஷூஜா
தமிழில் :- சிதம்பரம் இரவிச்சந்திரன்

பெரியவன பிரசவிச்சப்பதான் நான் இந்த கட்டிலில.. இந்த ரூமுல கட்சியாக இருந்தது.

ஞாபகங்களை தனக்குள் புதைத்துக்கொண்டு பூட்டுபோட்டு பூட்டிக் கொண்டிருக்கும் இந்த வீடு. இதைத்தான் அப்பா விற்கப்போறாராம். அதனால் தான் அவளும் இப்போது இங்கே வந்தது. இல்லாவிட்டால் இனிமேல் எப்போதுமே அவளால் இந்த வீட்டுக்கு வரவே முடியாமல் போய்விடும். வீட்டிற்கு உள்ளே இருட்டு மூடிக்கொண்டிருந்தது.

அம்மாவுடைய காலடிச்சத்தங்கள் இல்லாத அடுக்களை. தரையில் பலகை போட்டுத்தான் அம்மா எப்போதும் சாப்பிடுவாள்... அவள் நினைத்துக் கொண்டாள்.


அம்மா சமைச்சுக்கொடுத்த பலகாரங்களுக்கு எல்லாம் எவ்வளவு ருசி. பாயாசம் வைக்கிறப்ப சின்ன கிண்ணங்கள எடுத்துக்கிட்டு நாங்க அம்மாகிட்ட போய் நிப்போம். சிரிச்சுக்கிட்டே அதில ஊத்திக் கொடுப்பாள்..

பிறகு தரையில உட்கார்ந்து நாங்க விரல அந்தக் கிண்ணத்துக்குள்ள விட்டு நக்கி குடிப்போம். எவ்வளவு ஆசையா இருக்கும். அம்மா எது செஞ்சாலும் செஞ்சு முடிக்கிறதுக்கு முன்னாடியே பாதி காலியாயிடும்.. “

நடந்தபோது வராந்தாவில் துடைப்பம் அதேமாதிரி இருந்தது. பெரிய முற்றம் இருந்தது. முற்றத்தையும், படிக்கட்டுகளையும் பெருக்கி துடைத்து குப்பைகளை வாரி போட்டபோது தான் அடுத்த வீட்டு அத்தை கூப்பிட்டது.

மிருதுளா.. எப்ப வந்த நீ? ஆள் அரவமே இல்லாமப்போயிடுச்சு இப்ப இந்தப்பக்கம் பாக்கறப்பவே கஷ்டமா இருக்கு..

கொஞ்சநேரம் விசாரித்துவிட்டு அத்தை போனபோது தனக்குள் விம்மி வெடித்துக்கொண்டிருந்த ஞாபகங்களை மறுபடியும் ஒருதடவை வெளியில் எடுத்து வேதனைப்படுத்துவதாகவே அது அவளுக்கு தோன்றியது. பாவம்அந்த பக்கத்துவீட்டு அத்தை மிருதுளா நினைத்துக் கொண்டாள்.



“ அவுங்க தான் பாவம் என்னோட பொண்ணுக்கும் டீ போட்டு மதில் வழியா கொடுத்தது.... “

முற்றத்தில் ரோஜாவும் பிச்சிப் பூவும் எல்லாம் வெட்டி விடாததால் காடு போல கிடந்தது. கருவேப்பிலை செடிக்கு அடியில் குட்டியாக சில சிறிய செடிகள் முளைத்து வந்து கொண்டிருந்தன. எல்லாம் அம்மாவுடைய விருப்பங்கள்.

ரோஜாவும் பிச்சியும் மல்லிகையும் எல்லாம் “அம்மா எங்கே” என்று அவளிடம் கேட்பதுபோல அவளுக்கு தோன்றியது. வீட்டை விற்றுவிட்டால் அப்புறம் இங்கே வரவே வேண்டியதில்லை. அவள் கண்களில் நீர் பெருக்கெடுக்க தொடங்கியது.

“என்னோட இதயத்தில் நிறஞ்ச இந்த காட்சிகளை எல்லாம் இனிமேல ஒரு நாளைக்கும் என்னால பார்க்கமுடியாது. அடுக்கள முற்றத்துல ஒரு மறைப்புவச்சுதான் அம்மாவைக் குளிப்பாட்டியது”

ஏதோ ஒரு மந்திரசக்தியால் கட்டுண்டவன் போல மிருதுளா அந்த முற்றத்து மண்ணை தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள். இந்தமண்ணு நஷ்டமாகிறதுக்கு முன்னாடி இதுல எனக்குன்னு ஒரு பிடி சொந்தமா வச்சுக்கணும்.. சொந்த வீடுதான்னாலும் ஒரு சுண்டக்காயைக் கூட இங்கிருந்து நான் எடுத்துகிட்டுப் போனதில்ல.

கைகளால் மண்ணை எடுக்க முயன்றபோது ஏதோ பட்டு கையில் ரத்தம் வந்தது. பாறை போல கெட்டியாகப் போன மண். சுற்றிலும் மிருதுளா பார்த்தாள். யாரோ தீட்டியது மாதிரி ஒரு ஓட்டுத்துண்டு அவளுடைய கண்ணில் பட்டது. அதை எடுத்து மிகவும் கஷ்டப்பட்டு அவள் மண்ணை தோண்டினாள்.

**மிருதுளா சொன்னது எதுவும் புரியாமல் ஆஷா ஓட்டின் மேல் வேகமாக ஏறிக்கொண்டிருந்த அணிலை ஆச்சரியத்தோடு வேடிக்க பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். மிருதுளா பிளாஷ்டிக் கவரி பத்திரமாக போட்டு மூடினாள்.**

இவ்வளவு தூரம் யாருக்கும் தெரியாமல் கஷ்டப்பட்டு நான் வந்தது இதற்காகத்தானா?“

மிருதுளா இரண்டு கைகளாலும் மண்ணை வாரி எடுத்து கைப்பைக்குள்“ இருந்த பிளாஸ்டிக் கவரில் போட்டாள். மிருதுளாவை பார்த்துக்கொண்டிருந்த அவளது மகள் ஆஷா அவளிடம் கேட்டாள்.

என்னம்மா செய்யற? எதுக்கம்மா இந்த மண்ணு?

மிருதுளா கண்கள் நனைந்தபடியே அவளுக்கு பதில் சொன்னாள். இது வெறும் மண் இல்லமா.. இதுல என்னோட அம்மா இருக்காங்க இந்த மண்ணுல தான் பிறந்தேன்.. வளர்ந்தேன்.. இந்த மண் என்னோட அம்மாவப் போல.. அம்மாவோட பாசத்தையும், நேசத்தையும் இந்த மண்ணுல நான் பார்க்கறேன்ன.. இதுலதான் என்னோட சந்தோஷமான சின்னவயசு காலம் முழுக்கவும இருக்கு..

மிருதுளா சொன்னது எதுவும் புரியாமல் ஆஷா ஓட்டின் மேல் வேகமாக ஏறிக்கொண்டிருந்த அணிலை ஆச்சரியத்தோடு வேடிக்க பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். மிருதுளா பிளாஷ்டிக் கவரில் பத்திரமாக போட்டு மூடினாள்.

வீட்டுக்கு திரும்பியவுடன் மகனுடைய பழைய வாட்டர் போட்டிலுக்குள் மண்ணை போட்டு வைத்துவிட்டு அதை சமையலறை அலுமாரியில் வைத்தாள் மிருதுளா. அவ்வப்போது அதை ஒரு கனவில் நடப்பவள் போல கையில் எடுப்பாள். சின்னக்கிளிஞ்சல்களும் உடைந்த கண்ணாடி வளையல் துண்டுகளும் குண்டுமணிகளும் கலந்து கிடக்கும் வண்ணமயமான அந்த மண்ணில் விழுந்து புரண்டு ஆடி ஓடி விளையாடிய காலங்கள் அப்போதெல்லாம் அவளை வந்து குழந்தை பருவத்துக்கே கூட்டிக்கொண்டு போகும்.

மயில் இறகுகளை வைத்து விளையாடிய அந்த கள்ளம் கபடங்கள் இல்லாத காலங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வலிகள் நிறைந்த இப்போதைய தினங்களில் எல்லாம் அவளுக்கு அந்த மண் அம்மாவின் அன்பான அரவணைப்பை தந்தது..

சந்தோசமாக இருக்கும்போது அம்மா சிரிப்பது போலவும் சங்கடப்படும்போது ஆறுதல் தருவதாகவும் அவளுக்கு அந்த ஒரு பிடிமண் இருந்தது.

மிருதுளாவுக்கே தெரியாமல் அவள் கண்களில் இருந்து தளும்பி தத்தளித்த கண்ணீர்த்துளிகள் அந்த ஒரு பிடிமண்ணின் மீது உதிர்ந்து விழுந்தது. அவளையும் அறியாமல் அவள் புலம்பினாள்.
அம்மா... என்னோட அம்மா..... என்னோட அம்மா......

முற்று ●


## “இது நம்தேசம்”சந்தா விண்ணப்பம்

இது நம்தேசம் பத்திரிகையை அஞ்சலில் பெற விரும்புபவர்கள் சந்தாவிற்கு விண்ணப்பிக்கலாம்.


**12 இதழ்களுக்கு 600 ரூபா**

தொடர்புகளுக்கு :- ஆசிரியர்
“இது நம்தேசம்”
இல.43-3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் :- 021222 3739
மின்னஞ்சல் :- ithunamthesam@gmail.com

**மாதிரி விண்ணப்ப படிவம்**

பெயர் :..........................................
முகவரி :..........................................
தொழில் :..........................................
தொலைபேசி இலக்கம் :..........................................
மின்னஞ்சல் முகவரி :..........................................

.............................. திகதி .............................. கையொப்பம்



# வாசகர் கருத்து



## பிரசன்ன விதானகே தமிழ்தேசிய எதிர்ப்பாளர் அல்ல

அ. யேசுராசா
யாழ்ப்பாணம்.
௨௬.௦௯.௨௦௧௪.

புரட்டாதி இதழில் 20ம் பக்கத்தில் வெளியாகியுள்ள சிங்களத் திரைப்படம் பற்றிய கட்டுரையைப் படித்து அதிர்ச்சி அடைந்தேன். வரட்டுத்தனமான முறையில் அக்கட்டுரையின் கருத்துகள் உள்ளன. நோபல் பரிசு பெற்ற நைஜீரிய எழுத்தாளரான வோல் சொயிங்கா சில விமர்சகரைப்பற்றி "இலக்கியம் எதைச் செய்யவில்லையோ அதைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கும் இவர்கள் இலக்கியம் என்ன செய்கிறதோ அதைத் தொடுவதேயில்லை." என ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று மேற்படி கட்டுரையாளருக்கும் பொருந்துகிறது. அதனால்தான் தமிழரின் பாதிப்புக்கள் பற்றிய பலவற்றைக் குறிப்பிட்டு அவை ஏன் சொல்லப்படவில்லை எனக் கேட்டு தமிழருக்கு எதிரானவர் போல் நெறியாளரைக் காட்டுகிறார். அவலம் என்னவென்றால் தமிழரின் துயரங்கள் மீது பரிவுகொண்டு செயற்பட்டுவரும் நேசசக்தியான ஒரு சிங்களக் கலைஞன் இங்கு பகைச்சக்தியாக்கப்பட்டுள்ளான்! இரண்டு வருடங்களின் முன்னர் இத் திரைப்படம் பூர்த்தியாக்கப்பட்டு பல்வேறு நாடுகளின் திரைப்பட விழாக்களில் காட்டப் பட்டுள்ளபோதும் இலங்கையில் திரையரங்குகளில் இதுவரை ஏன் காட்டப்படவில்லை என்பதும் சிந்தனைக்குரியது!

பிரசன்ன விதானகேயின் அந்தத் திரைப்படம் ("ஒபத் எக்க, ஒப நத்துவ", - "உன்னுடனும், நீ இல்லாமலும்") ரஷ்ய எழுத்தாளரான ஃபியோதர் தாஸ்தயேவ்ஸ் கியின் என்னும் சிறுகதையை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட திரைப்படம். அக்கதையின் கணவன் - மனைவி பாத்திரங்களின் குற்ற உணர்வையும் மன அழுத்தத்தையும் இலங்கை இன முரண்பாட்டுச் சூழலில் சிங்கள - தமிழ் பாத்திரங் களின் உணர்வுநிலைகளாக வெளிக்கொண்டுவந்து நமது சூழல்பற்றிய புரிதலை வெளிப்படுத்த நெறியாளர் முயன்றுள்ளார். அதில் வெற்றியும் அடைந்துள்ளார். ஒரு கலைப் படைப்பாக மிகச் சிறந்த படைப்பாகவும் இது உள்ளது.

எழுதியவரின் பெயர் கட்டுரையில் தரப்படவில்லை, படத்தின் பெயர் என்னவென்றுகூடச் சொல்லப்படவில்லை. தீராநதி என்ற தமிழக இதழில் கௌதம சித்தார்த்தன் எழுதிய கட்டுரையின் சுருக்கம் இது என நினைக்கிறேன். சிங்களவரோடு சேர்ந்து வாழ்ந்தால் மட்டுமே உயிர்வாழ முடியும் என பிரசன்ன விதானகே கூறுகின்றாரா? என்ற கட்டுரைத் தலைப்புடனும் உடன்பட முடியவில்லை. ஏனெனில் இறுதியில் முன்னாள் இராணுவத்தினனான கணவன் பின்வருமாறு கூறுகிறான்: "நீ என்னை ஏற்க மறுத்திருந்தால்.... வேறொருவரைத் தெரிவு செய்திருந்தால் சந்தோஷமாக இருந்திருப்பாய்!" இதனுள் புதைந்திருக்கும் அரசியல் பரிமாணத்தை நாம் தெளிவாய்ப் புரிந்துகொள்ள வேண்டும்!

மேலும் உங்கள் பத்திரிகையில் இடம்பெறும் மறுபிரசுரப் படைப்புகளின் முந்திய பிரசுர விபரங்கள் - எழுதியவர் பெயர் இதழ்களின் பெயர் காலம் முதலியன கட்டாயம் தரப்படவேண்டும். முந்திய இதழ் களில் இவ்விபரங்கள் தவிர்க்கப்பட் டுள்ளமை கவலைக்குரியது!

**வாசகராகிய உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்**

முகவரி :
ஆசிரியர்
"இது நம்தேசம்"
இல-43
3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**ஐ.நா விசாரணைக்கு..........** (11 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

16. மேலுள்ள வினாவிற்கு ஆம் எனில் எத்தனையாம் திகதி எங்கு முறைப்பாடு செய்யப்பட்டது என குறிப்பிடவும்.
17. மேலுள்ள வினாவிற்கு இல்லை எனில் ஏன் முறைப்பாடு செய்யப்படவில்லை என குறிப்பிடவும்.
18. பாதிப்பு சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில் மேலதிகமாக ஏதாவது குறிப்பிப்பிட விரும்பின் இங்கு விபரமாக குறிப்பிடவும்.
19. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு/சர்வதேச விசேட நீதிமன்றம் ஒன்று உரு வாக்கப்பட்டால்/வேறு ஒரு நாடு இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் தனது நாட்டு நீதிமன்றில் விசாரணை ஒன்றினை நடாத்தினால் மேற்படி என்னால் வழங்கப்பட்ட தகவல்களை அந்த விசராணைக்காக பயன்படுத்த அனுமதிக் கின்றேன்/அனுமதிக்கவில்லை. (குறிப்பு 5 பார்க்கவும்.)

### பகுதி "இ"

மேலே கூறப்பட்டவற்றை இச்சத்தியக் கூற்றை
முடிப்பவருக்கு வாசித்துக் காட்டி அவர்
சரியென ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்தி.........ம் திகதி
.........................மாதம் 2014ம் ஆண்டு
............................. இலிருந்து என் முன்னிலையில்
கையொப்பமிட்டார்.

என்முன்னிலையில்

சமாதான நீதவான்
சத்தியப்பிரமாண ஆணையாளர்.

**குறிப்பு:-**

1. பகுதி "அ", பகுதி "இ" ஆகிய பகுதிகளை பொதுவாகவும், பகுதி "ஆ" வில் உள்ள விபரங்களில் உங்களுக்கு பொருத்தமானவற்றை மட்டும் உள்ளடக்கிக் கொள்ளவும்.
2. மேற்படி மாதிரிப்படிவம் சாட்சியம் வழங்கும்போது உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படைத் தகவல்களை பற்றிய விளக்கத்தை ஏற்படுத்துவதற்காக மட்டுமே வெளியிடப்பட்டது
3. நாம் இங்கு வெளியிட்டுள்ள படிவங்களின் உதவியுடன் சத்தியக்கடதாசி வடிவத்தில் உங்களது சாட்சியங்களை அனுப்புவது சாட்சியங்களின் வலிதார்ந்த தன்மையை அதிகரிக்கும். எனினும் உங்களது சாட்சியங்களை ஒரு கடிதம் போன்று கூட எழுதி அனுப்புவதில் எந்தவித தவறும் இல்லை.
4. மேற்படி மாதிரிப்படிவத்தை துணையாக கொண்டு உங்கள் சாட்சியத்தை தயாரித்தாலும் சம்பவங்கள் தொடர்பான உங்கள் முழுமையான அனுபவங் களையும் சூழ்நிலைகளையும் விபரமாக எழுதி இணைக்கவும்.
5. **மேலே பகுதி "ஆ" இல் 19வது வினாவிற்கு அனுமதிக்கின்றேன் என்று பதிலாளிப்பதே சிறந்தது. அப்போது தான் உங்களது சாட்சியங்கள் சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றின்போது சாட்சியமாக பயன்படுத்தப்படும். இல்லாவிட்டால் தற்போது ஐ.நா.ம.உ பேரவையினால் மேற்கொள்ளப்படும் விசாரணைக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.**

**த.தே.கூட்டமைப்பின் இந்தியப்பயணம்...**
(05ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவசியமில்லை எனக்கூறியிருக்கின்றார். மகிந்தரைக் கோபப்படுத்தும் எவற்றையும் செய்வதில்லை என மோடி தீர்மானித்து இருப்பது போலவே தெரிகின்றது.

தற்போது இந்திய அரசு, இலங்கை அரசு, வடமாகணசபை என்பன இணைந்து செயற்படும் ஒரு பொறி முறைக்கு இந்தியா முயல்வது போலத் தெரி கின்றது. இதன் முன்னோட்டமாகத் தான் இலங்கைக்கான இந்தியத் தூதுவரான சின்கா பசில்ராஜபக்ஷ, விக்கினேஸ்வரன் ஆகியோர் இணைந்து அச்சுவேலி கைத் தொழில் பேட்டைத் திறப்பு விழாவில் நாடாவை வெட்டியிருக்கின்றனர். இதனூ டாக இணக்க அரசியல் ஒன்று நடைபெறு கின்றது என்ற ஒரு தோற்றம் சர்வதேசத் திற்கு கொடுக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரை மாகாணசபைக்கு எதுவும் கொடுக் கப் போவதில்லை. அதுவும் இந்தியாவுடன் இணைந்து செய்வதை அறவே விரும்பப் போவதில்லை. எனவே இந்தியாவின் அந்த முயற்சியும் வெற்றியைத் தரப் போவதே இல்லை என்றே கூறலாம். இந்திய அரசு தமிழர் விவகாரம் சர்வதேச மயமாகுவதை விரும்பவில்லை. இலங்கை அரசு தமிழர் விவகாரம் இந்திய மயமாகுவதை விரும்பவில்லை. இலங்கை இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையே சமதூரத்தில் நிற்பதாக காட்டிக் கொள்ள விரும்புகிறது. ஆனால் நடை முறையில் சீனாவுடன் நெருக்கமாகவே உள்ளது. சீனா உள் நாட்டு விவகாரங் களில் தலையிடாமல் இருப்பதும் இதற்கு ஒரு காரணம். ஆனால் இந்தியா புது டில்லியின் செல்வாக்கின் கீழ் இலங் கையை கொண்டு வரவே விரும்புகிறது. இது விடயத்தில் இரு தரப்பிற்கும் இடையே பெரிய கயிறு இழுத்தல் போட்டியும் நடைபெறுகின்றது.

மறுபக்கத்தில் இந்தியா மத்திய அரசின் வேண்டுதலின் பேரிலேயே சம்பந்தன் குழு தமிழ் நாட்டிற்கும் சென்று தமிழ் நாட்டு அரசியல் சக்திகளின் நிலைப் பாட்டிற்கு எதிராக கருத்துக்களைக் கூறி யிருக்கின்றது. அதாவது பிரிவினையை நாங்கள் விரும்பவில்லை. இலங்கை என்ற அரச கட்டமைப்புக்குள் அதிகாரப் பங் கீட்டையே நாம் கோருகின்றோம் எனக் கூறியிருக்கின்றார். சம்பந்தன் அவ்வாறு கூறினாலும் மோடி அரசாங்கம் 13 வது திருத்தத்திற்கு அப்பால் செல்லப்போவ தில்லை என்பதை தெளிவாகவே கூறி யிருக்கின்றது. மோடி அரசாங்கம் 13வது திருத்தத்திற்குள் நிற்கின்றது. அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் ஆட்சி மாற்றத்தில் மட்டும் குறியாக உள்ளது. மகிந்தர் அரசாங்கமோ எதுவுமே தரத் தயாரில்லை என்பதில் உறுதியாக உள் ளது. அதற்கேற்ற வகையில் அரச அதிகார கட்டமைப்பையும் மாற்றி வருகின்றது. இந்நிலையில் தமிழக தேசிய சக்திகளை பலவீனப்படுத்துவது எந்த வகையில் ஆரோக்கியமானது என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

இந்திய மத்திய அரசினை அசைக்கும் சக்தி தமிழக தேசிய சக்திகளுக்குத்தான் உண்டு. இதனால் தமிழ்த் தரப்பு இந்திய மத்திய அரசினை நேரடியாக கையாள் வதை விட தமிழ் நாடு மூலம் கையாள் வதே தமிழ் அரசியலுக்கு வலிமையைக் கொடுக்கும். உண்மையில் எமது சர்வ தேச அரசியல் பாதை சென்னை புது டில்லி நியூயோர்க்காகத் தான் இருக்கவேண்டும்.

ஆனால் இங்கு நிலைமைகள் தலை கீழாகவே நடக்கின்றன. புதுடில்லியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், நியூ யோர்க்கினை டயஸ்பொராவுமே கையாள் கின்றன. இவற்றில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு புதுடில்லியில் தனது சொந்த நலன்களுக்காக தங்கியிருக்கின்றது. டயஸ்பொராவும் நியூயோர்க்கில் தங்கி நிற்கின்றது. தங்கி நிற்பவர்கள் எடுபிடி களாகவும், அடிமைகளாகவும் இருக்க முடியுமே தவிர சுயாதீனமாக கையாள் பவர்களாக இருக்கமுடியாது. அடிமை களினால் எஜமான்களுக்கு பின்னால் இழு பட்டுச் செல்லவே முடியும். இன்று கூட் டமைப்பும், டயஸ்பொராவின் பெரும் பான்மையும் இழுபட்டுச் செல்லும் தரப்புக் களாகவே உள்ளன. இதனால் தமிழ்த் தேசிய நலன்களில் இருந்து முடிவு களை எடுக்கவோ பேரம்பேசும் அரசி யலை நடத்தவோ அவர்களால் முடிய வில்லை. 13வது திருத்தம் தமிழ் மக்களின் அபிலாசைகள் எந்த வகையிலும் தீர்க்கப் போவதில்லை என்பதை தெளிவாகத் தெரிந்திருந்தும் கூட்டமைப்பு அதனை ஏற்றிருந்தது. அது அரசியல் தீர்விற்கான ஆரம்பப் புள்ளியாக இருக்கும் எனவும் கூறிவருகின்றது. ஒற்றையாட்சிக்கு உட் பட்ட ஒரு தீர்வு எப்படி ஆரம்பப் புள்ளியாக இருக்கும் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம் இதே போல டயஸ்பேராவின் பெரும்பான்மை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் சர்வதேச விசாரணைபற்றிய தீர்மானம் சர்வதேச மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களை விசாரனை செய்ய முடியாது என்ற நிலை இருந்த போதும் எந்த வித கேள்வியும் இல்லாமல் அதனை ஆதரித்தது. அமெரிக்கா தலைமையிலான மேற்கு உலகத்தின் ஆட்சிமாற்ற இலக்குகளையும் ஆதரித்து வருகின்றது.

கூட்டமைப்பு இந்தியப் பயணத்தின் போது முக்கியமாக இரண்டு கோரிக்கை களை முன்வைத்திருக்கவேண்டும். 13 வது திருத்தம் தமிழ் மக்களின் அபிலாசை களை எந்த வகையிலும் தீர்க்கப்போவ தில்லை எனவே அது கைவிடப்பட வேண்டும். ஐ.நா சர்வதேச விசார ணைக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக விசாரணை யாளர்கள் இந்தியா வருவதற்கு அனு மதி வழங்கவேண்டும் என்கின்ற கோரிக் கைகளை முன்வைத்திருக்கலாம். ஆனால் இவை எவற்றையுமே சம்பந்தன் தலைமை முன்வைக்கவில்லை. இன்று ஐ.நா விசாரணைகளை இந்தியா நிரா கரித்து உள்ளது. உள்ளக விசாரணை யையே இந்தியா வலியுறுத்துகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் கூறியது போல மேற்கூறிய கோரிக்கைகளை முன் வைக்காமல் வெறுமனவே இந்தியாவின் நிலைப்பாடுகளுக்கு தலையாட்டி விட்டே சம்பந்தன் தலைமை வந்திருக்கின்றது.

மொத்தத்தில் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தமிழ் அரசியலை பலவீனப்படுத் தியுள்ளதே தவிர பலப்படுத்துவதற்கு எந்த வகையிலும் உதவவில்லை.







ஜெயக்குமாரியின் விடுதலையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

காணமால் போன உறவுகள் சாட்சியம் அளித்தபோது




காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டம்




ஐ.நாவில் மகிந்தாவின் உரைக்கு எதிரான போராட்டங்கள்




இவ்விதழ் இல.43, 3 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச்சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி நீராவியடி) இல் 01.10.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.